@NewsRotary /RotaryNewsIndia

ரோட்டரி நியூஸ்

ஏப்ரல் 2018

Rotary

குழந்தைகளின்
குழந்தை
தன்மையை காப்போம்

மாறிவிட்ட கிராமம்

சாயன் மைனா கிராமத்தில் ரோட்டரி சமுதாயப் படைகளின் (Rotary Community Corps) துணையோடு சோன்கட்ச் ரோட்டரி சங்கம் பல்வேறு சமுகநலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அங்கே சாளா பெண்ணைப் பார்த்தேன். இந்தக் கிராமத்தில், குறிப்பாக எங்களைப் போன்ற பெண்களுக்கு, கழிவறைகள் கட்டித் தந்தது பெரிய வரப்பிரசாதம். அவள் வார்த்தைகளால் வெளிப்படையாக கூறவில்லையே தவிர, அவளது கண்கள் ரோட்டரி சங்கத்துக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டது பளிச்சென்று புலப்பட்டது.

உள்ளே

12 குழந்தைக் கடத்தலுக்கெதிராக போராடும் வீரர்

சிறுமிகளைப் பாலியல் தொழிலிலிருந்தும், சிறுவர்களைக் குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்தும் மீட்டு புனேயில் பாதுகாப்பு அளித்து வரும் ரேணுதாயுடன் ஒரு சந்திப்பு.

28 ரோட்டரியில் கார்ப்பரேட் உறுப்பினர் திட்டம்?

கார்ப்பரேட் நிறுவனங்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வது குறித்து ஹைதராபாதில் நடைபெற்ற மாவட்ட ஆளுநர்களுக்கான பயிற்சி முகாமில் ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் பாஸ்கர் அறிவிப்பு.

46 நற்பணி புரிவதற்கு ரோட்டரி — கார்ப்பரேட் காட்டும் நல்லியல்பு

District 3190 ஏற்பாட்டில் பெங்களூருவில் நடைபெற்ற ரோட்டரி - கார்ப்பரேட் அலுவலகங்கள் குறித்த சந்திப்பு.

34 கெஜ்ஹா பள்ளியில் சுகாதார வசதிகள்

உலகாளவிய நிதியுதவியில் தில்லி அசோகா ரோட்டரி சங்கம் அரசுப் பள்ளிகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்திய பணிகள்

36 கலாம் அறிவியல் ஆய்வகம்

ஜல்னா மிட்-டவுன் ரோட்டரி சங்கம் சார்பில் ஒரு பள்ளியில் அமைக்கப்பட்ட மெய்நிகர் அறிவியல் ஆய்வகத்தை (virtual science lab) ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜி திறந்து வைத்தார்.

39 மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு ரோட்டரி சங்கம்

உலகில் ரோட்டரியில் உறுப்பினர்களாக இணைந்து நற்பணிகளை ஆற்ற ஊனம் ஒறு தடையல்ல

50 ரோட்டரி மூடாபித்ரியின் 50 வருட நினைவுகள்

மூடாபித்ரியில் ரோட்டரி செய்த பணி ஏற்படுத்திய பெரிய மாற்றம்.

70 உங்கள் நோய் எதிர்ப்பு மண்டலத்துக்கு ஒளியூட்டுங்கள்

உடலுக்கும் மனத்துக்கும் தினமும் கூறும் ஆறுதலான வார்த்தைகள் எப்படி மாற்றத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்துக் கொள்ளுங்கள்.

42 வாரணாசியின் அழகு

பனாரஸ் ரோட்டரி சங்கம் தயாரித்து வெளியிட்டுள்ள புகைப்படத் தொகுப்புப் புத்தகத்திலிருந்து புனித யாத்திரைப் படங்கள்

அட்டையில்: குழந்தைக் கடத்தல், பாலியல் கொடுமைகளை எதிர்த்துப் போராடும் ரேணுதாய்

படம் : ரஷீதா பகத்

பசுமையான கேரளா — ஒரு அற்புதமான திட்டம்

கேரளாவின் பசுமையான வயல் வெளிகளையும் அதில் பறந்த வெள்ளை நிறப் பறவைகளையும், மார்ச் மாத இதழின் அட்டைப்படத்தைப் பார்க்கும்போது புளகாங்கிதம் அடைந்தேன். RI தலைவர் இயான் ரைஸ்லே பரிந்துரை செய்த, அனைத்து ரோட்டரி சங்கங்களும் குறைந்தபட்சம் ஒரு ரோட்டராக்ட் சங்கத்திற்கு ஸ்பான்சர் செய்து, இளம் ரோட்டராக்டர்களின் சக்தியை சேவைத்திட்டங்களில் பயன்படுத்த வேண்டும் மற்றும் ரோட்டரி சங்கங்களும் ரொட்டேரியன்களும் அவர்களை ரோட்டரி குழுவிற்குள் வரவேற்க ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பதைத் தெரிவித்தால் அனைத்து சங்கத் தலைவர்களுக்கும் புரியவரும். DG சுரேஷ் மேத்யூ மற்றும் அவரின் அர்ப்பணிப்புள்ள குழு உறுப்பினர்கள் செய்து வரும் REAP திட்டத்தைப் பற்றி முழுக் கட்டுரை அருமை. இந்த சிரமமான திட்டத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் பாராட்டுக்கள். D 3211ன் ரொட்டேரியனாக இருப்பதற்கு பெருமைப்படுகிறேன்.

MT ஃபிளிப்
RC திருவனந்தபுரம் புறநகர் — D 3211

PR செலவுகளை ரோட்டரி குறைக்கவேண்டும்

சமூக சேவைகள் தான் ரோட்டரியின் முதுகெலும்பு, மேலும் பொது மக்களிடையே இதன் மீதான அபிப்பிராயத்தை மிகைப்படுத்திக் காட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ரோட்டரியின் போலியோ ஒழிப்புத் திட்டங்கள் உலகம் முழுவதிலும் ரொட்டேரியன்களின் தோற்றத்தை மிகைப்படுத்தியிருக்கிறது. அத்துடன், பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் போன்றோர்களிடமிருந்து நன்கொடைகள் பெறுவதற்கு உதவுகிறது என்பதை புரிந்துகொள்ள இது உதவ வேண்டும்.

மேலும் ரொட்டேரியன்களாக நாம் உலகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வது நமது வேலை. எனவே நமது திட்டங்களும் நிகழ்ச்சிகளும் எளிமையைப் பிரதிபலிக்க வேண்டும்.

ரோட்டரி சங்கங்கள் PR செலவுகளைக் குறைத்து ஆடம்பர நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்துவதை விடுத்து, நமது சமூகத் திட்டங்களில் கவனம் செலுத்த வலியுறுத்துகிறேன்.

மஹேந்திர தாக்கத்
RC மந்த்சாவுர் — D 3040

கழுவுவதா இல்லை துடைப்பதா? என்ற அற்புதமான கட்டுரை அனைத்து மேலைநாட்டுப் பழக்கவழக்கங்களுக்கு ஒத்துபோக முயற்சிக்கும் இந்தியர்களின் கண்களைத் திறப்பதாக இருந்தது. இந்தக் கட்டுரையை தி ரொட்டேரியன் இதழிலும் வெளியிட வேண்டும். இந்த கட்டுரைக்காக எழுத்தாளர் ராகேஷ் பாட்டியாவைப் பாராட்டுகிறேன்.

சுஜாதா ஸ்ரீனிவாசன்
RC கடலூர் சென்ட்ரல் — D 2981

கோவையின் கதாநாயகிகள்

கோயம்புத்தூரிலிருந்து லண்டன் செல்ல காரிலேயே 26,800 கிமீ தூரத்தையும் பல நிலப்பகுதிகளைக் கொண்ட 24 நாடுகளையும் கடந்த 3 கதாநாயகிகளின் சாகசப்பயணம் பாராட்டுக்குரியது. அமெரிக்கா மற்றும் கனடாவில் வசிக்கும் நமது பிள்ளைகளைப் பார்க்க சாதாரணமாகச் சென்றாலே பல சங்கடங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த கதாநாயகிகள் அவர்களின் இலக்கை வெற்றிகரமாக அடைந்ததால் விண்வெளி வீரர்களின் மன தைரியத்தைக் கொண்டுள்ளதாக நிரூபித்துள்ளனர். மீனாட்சி அரவிந்த், மூகாம்பிகா ரத்தினம் மற்றும் பிரியா ராஜ்பால் ஆகியோருக்கு, பாராட்டுக்கள்.

P. ஐயப்பராஜன்
RC தேனி — D 3000

அற்புதமான தலையங்கம்

ஒற்றுமையைப் பற்றிய அற்புதமான தலையங்கத்திற்கு பாராட்டுக்கள். எழுத்துக்கள் அருமை, ஒவ்வொரு வரியும் ஆழ்ந்த கருத்துக்களைப் பிரதிபலித்தது. ரொட்டேரியன்களான நாம் பல நல்ல செயல்களைச் செய்கிறோம், நமது உறுப்பினர் அளவு இந்தியாவின் மக்கள்தொகையுடன் ஒப்பிடும் போது மிகக்குறைவுதான். ஆனால் இந்த சிறிய கூட்டமே அரசியல் உட்பட சமுதாயத்தின் பல பிரிவுகளின் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, இது போன்ற மதிப்புகளைத் தான் ரோட்டரி உள்வாங்கிக்கொண்டு பணிக்கிறது. நம்மில் நிறைய பேர் வசதியான இடத்திலே இருந்து பயணிக்கப்படுகிறார்கள். இதை ஒரே இரவில் மாற்றமுடியாது என்பது உண்மை தான்.

முன்னாள் குடியரசுத்தலைவர் APJ அப்துல்கலாம் ஒவ்வொரு பள்ளியிலும் கல்லூரியிலும் பேசும்போது ஒரு கேள்வியைக் கேட்பார்: உங்களில் எத்தனை பேர் அரசியலில் சேர விரும்புகிறீர்கள்?'' ஒவ்வொரு முறையும் சில கைகள் மட்டுமே உயரும். இந்த சமூகத்திற்கு அரசியல் என்பது வெறுக்கத்தக்கதாக மாறிவிட்டதே, இதனாலயே பல ஆயிரம் கோடி திருட்டுகளை பார்க்கிறோம். போராட்டத்தையும், நமது எதிர்ப்பையும் கூட காட்டுவது இல்லை; இன்றைய நாகரீக உலகின் பாவம் அக்கறையின்மை.

ராபர்ட் F. ரேகோ
RC பாஜ்பே D 3181

பல நேர்மையற்ற வியாபாரிகளால் இந்தியாவில் நடந்துள்ள பல்வேறு மோசடிகளைப் பற்றிய சிந்தனைத் தூண்டும் தலையங்கம், ரொட்டேரியன்கள் தங்கள் நேர்மையையும் கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதோடு, சுய கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கத்துடன் நல்ல மதிப்பை

நிலைநிறுத்த வேண்டியதையும் எச்சரிக்கிறது.

ரோட்டரியில் சேர்ந்தால் இந்தப் பெரிய தொழிலதிபர்கள் மாறிவிடுவார்கள், ஏனென்றால் ரோட்டரி 4-வழிச் சோதனையைக் கொண்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு வரையும் ரொட்டேரியனாக மாற்றமுடியாது என்பதே முரண்பாடாக இருக்கிறது. ரோட்டரி செய்தி ஒவ்வொருத்தரையும் சென்றடைந்து, ஊழலில்லாமல் வாழ்கின்ற ஒரு சிறந்த ஒரு உலகத்தை என்னால் கற்பனை செய்யமுடியுமா?

அருண் குமார் தாஷ்
RC பாரிபடா — D 3262

கிளிப் பேச்சு

ஜெய்ஸ்ரீ எழுதிய *கிளியிடம் கேளுங்கள்* என்ற கட்டுரை பிடித் திருந்தது. கிளி ஜோசியம் போன்ற வாழ்க்கைத் தொழில்கள் கொஞ்சம் பணம் கொடுக்கிறது.
சங்கச் செய்திகளில், மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ காப்பீட்டு திட்டங்கள் RC திருப்பூர் நிட் சிட்டி, D 3202-ஆல் வழங்கப் பட்டது பாராட்டுக்குரியது.

சம்பத் குமார், ஈரோடு

ஒரு தத்ரூபமான பார்வை

'இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டினர் விரும்புவது' என்ற கட்டுரை எதிர்காலத் திட்டமிடலுடன் ஒரு தத்ரூபமான பார்வையைக் காட்டியது. புள்ளிவிவரங்களுடன் கூடிய அந்த எழுத்துக்கள் மனதில் பதிந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் சமூகப் போராட்டங்களை குறைப்பது போன்ற நமது குறிக்கோள்களைச் சரியாக எடுத்துக்காட்டியது. RI பொதுச் செயலாளர் ஜான் ஹியூகோவிற்கு எனது பாராட்டுகள்.

RC சௌமித்ரா சக்ரபொர்தி
டோலிகஞ் — D 3291

நன்றி

'ஒரு உதவும் கரம்' என்ற கட்டுரையில் செயிண்ட் ஜூடைப் பற்றி அழகாக மனிதத் தன்மையுடன் எழுதியதற்கு ரஷீதா பகத்திற்கு நன்றி. செயிண்ட் ஜூடிற்கு பல்வேறு ரோட்டரி சங்கங்கள் நிலைத்து நிற்கும் விதமாகத் துணைபுரிந்ததற்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

உஷா பானர்ஜி
ரொட்டேரியன் அல்லாதவர்.

ஒட்டுமொத்த குடும்பத்திற்குமான இதழ்

இன்றைய டிஜிட்டல் உலகத்தில் அதிகம் எதிர்பார்க்கக் கூடிய இதழ்களில் ரோட்டரியும் ஒன்று. ஒவ்வொரு மாதத்திலும் இதைத் தொடர்வது என்பது அரிதாக நடக்கக்கூடியது. ஆனால் உங்கள் குழு இதை பெறுகிறீர்கள். PRIP ராஜேந்திர சாபூ மற்றும் அவர் மனைவி உஷா சாபூ, மருத்துவப் பணிகளில் அவர்களின் வேலை தனித்தன்மையான பாராட்டைப் பெறுகிறது.

மேலும் PR-க்காக ரோட்டரி கூட்டங்களில் அதிகமான செலவுகள் தேவைப்படும் தான், ஆனாலும் இது இப்பொழுது வீண் ஆரவாரம் போல இருக்கிறது. எனவே, இது கட்டுப் படுத்தப்பட வேண்டும். சில விதிகளைத் தளர்த்த வேண்டும். மாவட்ட மற்றும் சங்க அளவுகளில், உறுப்பினர் கட்ட ணத்தில் 40 சதவீதம் மட்டுமே உணவு, கேளிக்கை மற்றும் பானங்களுக்குச் செலவிடப்பட வேண்டும்.

யுவராஜ் சிங் மற்றும் ஜாகீர்கான் (பிப்ரவரி இதழ்) பற்றிய கட்டுரை அவசியமானதாகவும், அவர்களின் பங்களிப்புகளை நினைவுபடுத்தும் விதமாகவும் அமைந்தது. ரோட்டரியின் இளம் டர்க் மற்றொரு புத்துணர் வளிக்கும் கதை, மேலும் ஒரு சங்கம் வளரவில்லை என்றால் அது அழிந்துவிடும் என்பது ஒரு உண்மை. இயலாமையை குறைக்க சக்கரங்கள் (RC தாராபுரம் D 3240) மற்றும் உயிர்பெற்ற ஒரு பள்ளி (RC சிலிகுரி சென்ட்ரல், D 3240) என்ற இரு திட்டங்கள், ரோட்டரி செய்திகளைப் பரப்பியது மற்றும் நலிவடைந்தோர்களுக்கு பலனளிப்பதாக இருக்கிறது.

ஒட்டுமொத்த குடும்பத்திற்கான மிகவும் எதிர்பார்ப்புமிக்க இதழை உருவாக்குவதற்காக ஆசிரியர் குழுவை நான் பாராட்டுகிறேன்.

ஆதேஷ் சிக்சி
RC நவி மும்பை — D 3142

ஒரு ஊக்கப்படுத்தும் கதை

ரோட்டரி ஒரு பிடித்தமான கூட்டாளியை விட மேலானது என்ற கட்டுரை மஹாராஷ்டிராவின் கிராமப்புற மேம்பாட்டிற்கான ஒரு உறுதியான நடவடிக்கை பற்றி விளக்கிக் கூறியது. அத்துடன், புனே மகர்பட்டா சிட்டி சங்கத்தில் நானும் குழுவில் ஒருவனாக இருந்தது மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது, இதுபோன்ற கட்டுரைகள் அதிகமான ரொட்டேரியன்களுக்கு ஊக்கமளித்து இந்த செயல்களில் ஈடுபடவைக்கும்.

மிலிந்த் ஷிண்டே
RC புனே மகர்பட்டா சிட்டி — D 3131

சம அந்தஸ்து

டிசம்பர் இதழில் வடகிழக்கு மற்றும் D 3240 மீது முக்கிய கவனம் செலுத்தியதற்கு ஆசிரியர் குழுவை நான் பாராட்டிகிறேன் ஆக வேண்டும். இது உங்களுடைய நீண்ட கால எதிர்பார்த்த செயல். மாவட்ட நிகழ்ச்சி களில் ஒன்று, நமது மதிப்புமிக்க இதழின் அட்டைப்பக்கத்தில் அலங்கரித்ததைப் பார்க்க D 3240 ரொட்டேரியன்களான நாங்கள் துள்ளிக்குதித்தோம். நாட்டில் எந்த மூலையில் நல்ல பணி நடந்தாலும் ரோட்டரி செய்தியில் சமமான அந்தஸ்து கிடைக்கும் என்பதை நிரூபித் துள்ளீர்கள்.

டாக்டர். பிரோசெஞ்சித் கோஷ்
RC கிரீன் லேண்ட் சில்சர் — D 3240

உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org ; rushbhagat@gmail.com

Governors Council

RI Dist 2981	DG	P S Ramesh Babu
RI Dist 2982	DG	Dharmesh R Patel
RI Dist 3000	DG	P Gopalakrishnan
RI Dist 3011	DG	Ravi Choudhary
RI Dist 3012	DG	Sattish Singhal
RI Dist 3020	DG	G V Rama Rao
RI Dist 3030	DG	Dr K Sunder Rajan
RI Dist 3040	DG	Dr Zamin Hussain
RI Dist 3053	DG	Rajkumar Bhutoria
RI Dist 3054	DG	Maullin Manubhai Patel
RI Dist 3060	DG	Ruchir Anirudh Jani
RI Dist 3070	DG	Parvinder Jit Singh
RI Dist 3080	DG	T K Ruby
RI Dist 3090	DG	Bagh Singh Pannu
RI Dist 3110	DG	Vinay Kumar Asthana
RI Dist 3120	DG	Ranjeet Singh
RI Dist 3131	DG	Abhay Gadgil
RI Dist 3132	DG	Vyankatesh Vithal Channa
RI Dist 3141	DG	Prafull J Sharma
RI Dist 3142	DG	B M Sivarraj
RI Dist 3150	DG	J Abraham
RI Dist 3160	DG	Madhu Prasad Kuruvadi
RI Dist 3170	DG	Anand G Kulkarni
RI Dist 3181	DG	M M Chengappa
RI Dist 3182	DG	G N Prakash
RI Dist 3190	DG	Asha Prasanna Kumar
RI Dist 3201	DG	Vinod Krishnan Kutty
RI Dist 3202	DG	Sivashankaran P M
RI Dist 3211	DG	Suresh Mathew
RI Dist 3212	DG	Chinnadurai Abdullah
RI Dist 3231	DG	Jawarilal Jain K
RI Dist 3232	DG	R Srinivasan
RI Dist 3240	DG	Sunil Saraf
RI Dist 3250	DG	Vivek Kumar
RI Dist 3261	DG	Harjit Singh Hura
RI Dist 3262	DG	Ajay Agarwal
RI Dist 3291	DG	Brojo Gopal Kundu

Board of Permanent Trustees & Executive Committee

PRIP	Rajendra K Saboo	RI Dist 3080
PRIP	Kalyan Banerjee	RI Dist 3060
PRID	Sudarshan Agarwal	RI Dist 3011
PRID	Panduranga Setty	RI Dist 3190
PRID	Sushil Gupta	RI Dist 3011
PRID	Ashok Mahajan	RI Dist 3141
PRID	Yash Pal Das	RI Dist 3080
PRID	Shekhar Mehta	RI Dist 3291
PRID	P T Prabhakhar	RI Dist 3232
PRID	Dr Manoj D Desai	RI Dist 3060
RID	C Basker	RI Dist 3000

Executive Committee Members (2017–18)

DG B M Sivarraj — RI Dist 3142
Chair – Governors Council

DG R Srinivasan — RI Dist 3232
Secretary – Governors Council

DG Abhay Gadgil — RI Dist 3131
Secretary – Executive Committee

DG Vivek Kumar — RI Dist 3250
Treasurer – Executive Committee

DG P Gopalakrishnan — RI Dist 3000
Member – Advisory Committee

ROTARY NEWS / ROTARY SAMACHAR

Editor
Rasheeda Bhagat

Senior Assistant Editor
Jaishree Padmanabhan

Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road
Egmore, Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail : rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

பல வழிகளில் வரும் செல்வம்!

உலகில் மிகப் பெரிய பணக்காரர்களின் பட்டியலை ஃபோர்ப்ஸ் (Forbes) என்ற ஆங்கில இதழ் அண்மையில் வெளியிட்டிருக்கிறது. உலகத்தின் மிகப் பெரிய பணக்காரராக முதல் இடத்தில் இருந்த பில் கேட்ஸை மிஞ்சி இப்போது அமேசான் நிறுவனத் தலைவர் ஜெஃப் பேஸோஸ் முதலிடம் வகிக்கிறார். அதே சமயம் 256 பெண்கள் 2018ம் ஆண்டுக்கான உலக மிகப் பெரிய கோடீஸ்வரர்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர். இவர்களது மொத்த சொத்தின் மதிப்பு ஒரு டிரில்லியன் டாலர்! (அதாவது இந்திய மதிப்பில் ரூ.65,02,000 கோடி) இது கடந்த ஆண்டை விட 20 சதவீதம் கூடுதலான மதிப்பாகும். இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களில் பெரும்பாலானோர் ஏற்கெனவே தங்களது பூர்வீகச் சொத்துகளையும் கொண்டிருக்கிறார்கள் என்பது ஒரு புறம் இருந்தாலும், 25 சதவீதத்துக்கு மேற்பட்ட பெண்கள் புதிதாகத் தொழிலில் ஈடுபட்டு சாதனை நிகழ்த்தியவர்கள் என்பது நெகிழ்ச்சியான விஷயம்.

வால்மார்ட் நிறுவனர் சாம் வால்டனின் மகள் ஆலிஸ் வால்டன் பணக்காரப் பெண் தொழிலதிபர்களில் முதலிடம் வகிக்கிறார். கடந்த ஆண்டு 3,380 கோடி டாலராக (சுமார் ரூ.2,19,750.70 கோடி) இருந்த அவரது சொத்தின் மொத்த மதிப்பு 4,600 கோடி டாலராக உயர்ந்திருக்கிறது.

இதன் மூலம் நமக்குத் தெரிவதென்ன? பணக்காரப் பெண் ஆக வேண்டுமானால், அதற்கு அமெரிக்காவும் சீனாவும் பொருத்தமான நாடுகளே. இந்த இரு நாடுகளில்தான் கோடீஸ்வரர்களில் மூன்றில் இரண்டு பங்கு தாமாகவே பணக்காரர்களாக முன்னுக்கு வந்த பெண்கள் இருக்கிறார்கள்.

ஆண்டியாக இருந்து அரசியைப் போல் பணம் படைத்தவர்களான பெண்களுக்கு ஓர் உதாரணம் ஹாங்காங்கில் உள்ள ஸோவுக்வின்ஃபீ (Zhou Qunfei) என்ற பெண்மணிதான்! சிறு வயதிலேயே தாயை இழந்து, 16 வயலில் பள்ளிப் படிப்பை இடையிலேயே நிறுத்திவிட்டு, தொழிற்சாலைகளில் சேர்ந்த அவர், பின்னர் தானே கைக்கடிகாரத்தின் லென்ஸ்கண்ணாடியைத் தயாரிக்கும் தொழிலில் இறங்கினார். படிப்படியாக செல் போன் கருவிகளின் கண்ணாடி உறையைத் தயாரிக்க ஆரம்பித்தார். ஆப்பிள், சாம்சங் நிறுவனங்கள் அவரிடம் வாடிக்கையாளர்கள் ஆயினர். அதையடுத்து அவர் 780 கோடி டாலர் அளவுக்கு வணிகம் நடத்தத் தொடங்கினார்.

அதே சமயம் நாம் ஏராளமான உழைக்கும் பெண்களையும் நம் வாழ்வில் அன்றாடம் காண்கிறோம். செல்வம் என்றால் பணம்தான் என்பதில்லை. இந்த இதழுக்கான அட்டைப்படச் கட்டுரையை எழுதுவதற்காக புனே சென்றபோது, ஏராளமான பெண்கள் சமூக சேவைக்காக அன்பு, இரக்கம், கருணை, அக்கறை ஆகிய சிறந்த குணங்களை அளவில்லாமல் காட்டி மகிழ்ந்ததைக் கண்டேன். தத்துவ இயலில் முதுகலைப் பட்டம் படித்துவிட்டு மும்பையில் சரஸ்வத் வங்கியில் பல ஆண்டுகள் நல்ல சம்பளத்தில் பணிபுரிந்துவிட்டு, அதைத் துறந்துவிட்டு, ஆதரவற்ற, அன்புக்கும் அக்கறைக்கும் ஏங்குவோருக்குத் துணையாக இருந்து சமூக சேவையில் ஈடுபடுகிறார் ரேணுதாய். அவர் செய்த மகத்தான சேவை புனே நகரில் புத்வார் பெத் என்ற இடத்தில் தெருவில் சுற்றித் திரிந்த பாலியல் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு காட்டியதுதான். அங்கே ஆயிரக் கணக்கானோர் வயிற்றுப் பிழைப்புக்காக விலைமாதர்களாக இருக்கிறார்கள். ரேணுதாயின் மனத்தை மிகவும் வருத்தியது அந்தப் பெண்களின் குழந்தைகளும் அதே போன்ற அவலமான தொழிலில் இறங்கும் அபாயம்தான். ஏராளமான பெண்குழந்தைகள் கடத்தப்படுவது இன்னொரு கவலைதரும் சம்பவங்களாக இருக்கின்றன.

விபசார பகுதியில் வலுக்கட்டாயமாக வைக்கப்பட்டிருந்த 9 வயது சிறுமியை மீட்டு புனேயில் தான் நடத்தும் இல்லத்தில் வைத்துக் காப்பாற்றிய சம்பவம் குறித்து அவர் விவரித்தது மனத்தைப் பிசைந்தது. அங்கே குழந்தைகள் கல்வி கற்கிறார்கள். ஆரம்பத்தில் அந்தச் சிறுமியை இப்படிக் கொண்டுவந்து பராமரிப்பதை அவளது தாய் ஒப்புக் கொண்டாள். ஆனால், அவளுக்குப் பணக் கஷ்டம். வேறு வழியின்றி சிறுமிகளைக் கடத்துவோரிடம் அந்தக் குழந்தையை விற்றுவிட்டாள். மீண்டும் அந்தச் சிறுமியை மீட்க ரேணுதாய் எடுத்த பல முயற்சிகள் தோல்வியடைந்தன.

அச்சிறுமியைப் பாலியல் தொழிலில் திணித்தவரிடம் திரும்பத் திரும்பக் கேட்டார் ரேணுதாய். அதற்கு அவன் ‘‘அவள் பெங்களூர் விபசார விடுதியில் வசிக்கிறாள். ஏன் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்? என்கிறான்.

9 வயது சிறுமிக்கு இந்த நிலை.. நினைத்தால் மனம் வேதனையில் அழுகிறது!



ரஷீதா பகத்



நமது பூமியை பாதுகாப்போம்

அன்புள்ள சக ரோட்டரி சங்கத்தினர்களே,

அமெரிக்காவின் ஓரிகன் மாகாணம் போர்ட்லாந்தில் 1990ம் ஆண்டு RI மாநாடு நடைபெற்றது. அப்போதைய ரோட்டரி தலைவர் பாலோ கோஸ்டா பேசுகையில், ''ரோட்டரி அமைப்பு இந்தப் பூமிக் கிரகத்தைப் பாதுகாப்பதற்குக் குரல் கொடுக்கவும் அப்பணிக்குத் தலைமை தாங்கவும், இயற்கை வளங்களைக் காக்க அறப்போரில் ரோட்டரி சங்கத்தினர் அனைவரையும் ஈடுபடுத்தவும் உரிய நேரம் வந்துவிட்டது'' என்று கூறினார்.

ரோட்டரி சங்கத்தினர் தங்களது சமூக திட்டங்களில் சுற்றுச்சூழல் பிரச்சினைகளான மரம் நடுதல், நீர், நிலம், காற்று, ஆகியவற்றை மாசுபடாமல் காத்தல், அடுத்த தலைமுறைக்குப் தூய்மையான பூமியை விட்டுச் செல்லுதல் ஆகிய-வற்றில் ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்தினார்.

ரோட்டரி அமைப்புளின் 11 லட்சம் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தலா ஒரு மரத்தை நடவேண்டும் என்று கோஸ்டா கேட்டுக் கொண்டார். ஆனால், அதற்கு மேலாகப் பணியாற்றிய நாம் ரோட்டரி ஆண்டு இறுதியில் மொத்தம் மூன்றரை கோடி மரங்களை நட்டிருக்கிறோம். அவற்றில் பல மரங்கள் இன்றும் வளர்ந்து வருகின்றன. நட்ட மரங்கள் தங்களது வேலையைச் செய்தபடி சுற்றுச்சூழலை மேம்படுத்தி வரும்போது, துரதிர்ஷ்ட வசமாக ரோட்டரி அந்த அளவுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உரியவற்றை செயல்படுத்தவில்லை.

அதனால்தான், இந்த ஆண்டின் தொடக்கத்தில், பாலோ கோஸ்டாவின் மாதிரியைப் பின்பற்றி ரோட்டரி சங்கத்தினர் ஒவ்வொருவரும் தலா ஒரு மரத்தையாவது நட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். 12 லட்சம் மரங்கள் நடுவது என்று இலக்கு நிர்ணயித்து, அதற்கு மேலாக சாதிப்பது என்பது என் இலக்கு. மரங்களை நடும் பணியை ரோட்டரி சங்கத்தினர் தொடர்ந்து ஆர்வம் செலுத்துவர் என்று எதிர்பார்த்தேன்.

சுற்றுச் சூழல் பிரச்சினைகள் நம் ஒவ்வொருவருடனும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய எல்லாவற்றிலும் பிணைந்துள்ளன. மாசு உலகம் முழுவதும் சுகாதாரத்தைப் பாதிக்கிறது. நகர்ப்புறங்களில் வசிப்போரில் 80 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பற்ற வகையில் சுவாசிக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால், 2050ம் ஆண்டில் கடல்களில் மீன்களை விட பிளாஸ்டிக் கழிவுகளே அதிகம் இருக்கும். வெப்பமும் அதிகரிப்பது ஏற்கெனவே பதிவுகளில் தெரிகிறது. 1880ம் ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரையில் உலகம் முழுதும் ஆண்டு சராசரி வெப்ப நிலை 2 டிகிரி ஃபாரன்ஹீட் (அதாவது 1.1 செல்சியஸ்) அதிகரித்து வருகிறது. இந்த பருவ நிலை மாற்றத்துக்கு மனிதர்கள்தான் காரணம். இதைத் தடுக்கா விட்டால், மனிதகுலம் அழிதல் நிச்சயம். முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமான செயல்பாடுகளும் உண்மையான பாதிப்பை ஏற்படுத்துவதற்காக நாம் காட்டும் திறமையும் தேவைப்படுகின்றன.

ஐநா மன்றத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர் பான் - கீ மூன் கூறியபடி, இன்னொரு திட்டம் நமக்குக் கிடையாது. காரணம் இன்னொரு பூமி நமக்குக் கிடையாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்தப் பூமி நம் எல்லோருக்கும், நமது குழந்தைகளுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் சொந்தானது. நாம்தான் இதைப் பாதுகாக்க வேண்டும். மாற்றத்தை உருவாக்க ரோட்டரியில் உள்ள நம் எல்லோருக்குமே இது அவசியம்.

இயான் H.S. ரிஸ்லி,
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்

ஒன்றாகக் கைகோர்த்து போலியோவை ஒழிப்போம்

அன்புள்ள ரொட்டேரியன்களே,
குழந்தைகளின் ஆரோக்கியமே தாய்மார்களின் ஆனந்தம்.

ரோட்டரி, நம் சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி, ரோட்டரி ஃபவுண்டேஷனின் ஆதரவுடன் உலகளவில் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அவர்களுக்கு ஆரோக்கியமான, நீண்ட ஆயுள் கிடைக்க வேண்டும் என்பதற்காக, ரோட்டரி இயன்றளவு உயர்தர நலக்காப்பு வசதிகளைப் பெற்றுத்தர முயற்சிக்கிறது. வசதியுள்ளோரைப் போலவே ஏழை எளிய குடும்பங்களின் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான, ஆனந்தமான எதிர்காலத்துக்கான வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்பதை உறுதிசெய்ய, நாம் தரமான நலக்காப்புக் குரிய வசதியை விரிவுபடுத்தித் தருகிறோம்.

மருத்துவம் மற்றும் நலக்காப்புத் துறைகளில் ஏராளமான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ள இன்றைய காலத்திலும் கூட, ஊட்டச்சத்துக் குறைபாடு, போதாத நலக்காப்பு, தரம் குறைந்த துப்புரவு ஆகியவற்றால் ஒவ்வொரு ஆண்டும் ஐந்து வயதுக்குட்பட்ட 59 லட்சம் குழந்தைகள் மரணிக்கிறார்கள் என்று மதிப்பீடு கூறுகிறது.

ரொட்டேரியன்களால் இத்தகு விபரீதங்கள் நடப்பதைத் தடுக்க முடியும். இதில், குழந்தைகளுக்குத் தடுப்பூசிகளைப் பெற்றுத் தருவதே பெரிய சவால். உதாரணமாக, ரோட்டரியின் திட்ட வியூகத்தில் போலியோவை ஒழிப்பதற்குரிய வலுவான கட்டமைப்பு இருக்கிறது என்ற போதிலும், சில முன்னுரிமையான அம்சங்கள் மற்றும் செயல்பாடுகளில் மீண்டும் தனிக்கவனம் செலுத்த வேண்டிய அவசரத் தேவை உள்ளது. இதில், நோய் குறித்த சமூகக் கண்காணிப்பு, நோய்த்தடுப்புப் பரவலாக்கத் திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவது, நோய்ப் பரவலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் சக்தியை வளர்த்துக் கொள்வது போன்றவை அடங்கும்.

ரோட்டரி தனது உலகளவிலான வளங்களைத் திரட்டி போலியோவை கிட்டத்தட்ட ஒழித்துவிட்டது, இன்னும் சில குழந்தைகள் மட்டுமே எஞ்சியுள்ளனர். இருப்பினும், ரொட்டேரியன்களும் மற்றவர்களும் விடாது இதற்காக உழைக்கவேண்டும்.' இதுதான் ஏறக்குறைய ஒழிந்துவிட்டதே, சரி அடுத்ததைப் பார்ப்போம்' என்று மக்கள் நினைப்பது இயல்பே, ஆனாலும் முற்றிலும் ஒழிக்கப்படவில்லை என்பதே உண்மை. நாம் அடுத்ததைக் கவனிக்கும் முனைப்பில், இதற்கான வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால், போலியோ வைரஸ் மீண்டும் தலைதூக்கும் ஆபத்து ஏற்படும்.

சென்ற ஆண்டு, நான் D 3830 மாநாட்டுக்காக மனிலா சென்றிருந்த போது ரொட்டேரியன்களிடம் ஒரு செய்தியைக் கேள்விப்பட்டேன்: 1979ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் ரொட்டேரியன்களும் பிலிப்பைன்ஸ் சுகாதார அமைச்சகத்தின் பிரதிநிதிகளும் ஒன்றுசேர்ந்து பணியாற்றி போலியோ சொட்டு மருந்து மூலமான நோய்த்தடுப்புத் திட்டத்தை ஒரு சோதனை ரீதியாக செயல்படுத்தினார்களாம். அவர்களுக்கு ஆதரவாக நூற்றுக்கணக்கான தன்னார்வலர்கள் களத்தில் இறங்கி மனிலாவில் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளித்திருக்கிறார்கள். அப்போதைய இன்டர்நேஷனல் பிரசிடென்ட் ஜேம்ஸ் L. போமர் ஜூனியர் ஒரு குழந்தையின் வாயில் முதல் போலியோ சொட்டு மருந்தை விட்டு, பிலிப்பைன்ஸ் போலியோ நோய்த்தடுப்புத் திட்டத்தை முறையாகத் துவக்கி வைத்தார். அந்நாட்டின் சுகாதார அமைச்ச ரான என்ரிக் M. கார்சியாவுடன் ஒரு MoU ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார், அதன்படி ரோட்டரி இன்டர்நேஷனலும் பிலிப்பைன்ஸ் அரசும் ஒன்றிணைந்து $7,60,000 செலவில் அறுபது லட்சம் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு வழங்க உறுதிகொண்டனர்.

ரோட்டரி, போலியோ பிளஸ் பரப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்திய, பிறகு உலகளவிலான போலியோ சம்பவிப்பு எண்ணிக்கை 99 சதவீதத்துக்கு மேல் குறைந்தது, இப்போது வெறும் மூன்றே நாடுகளில் மட்டும் - ஆப்கானிஸ்தான், நைஜீரியா மற்றும் பாகிஸ்தான் - இது உள்ளது. இருந்தாலும், போலியோவை ஒழிப்போம் திட்டத்துக்கான பங்களிப்பை நாம் விடாது தொடர வேண்டும். கடைசியாக போலியோ ஏற்பட்ட சமயத்திலிருந்து மூன்று ஆண்டுகள் கழிந்த பிறகே போலியோ இல்லாத உலகம் என்று சான்றளிக்க, குறைந்தது 2020 வரையில், நோய்த்தடுப்புச் செயல்பாடுகளுக்கு, தன்னார்வலர்களும் நிதியுதவியும் தேவைப்படுகிறது. போலியோ இல்லாத உலகம் படைக்க ரோட்டரிக்கு ஆதரவு அளிப்பது ஒவ்வொரு ரொட்டேரியனின் கடமை. போலியோ என்னும் சாபத்தைத் துடைத்தொழித்து ரோட்டரி ஏற்படுத்திய மாற்றத்தை உலகுக்குக் காண்பிக்கும் நாளே மனித குலத்தின் உண்மையான வெற்றி நாளாகும்.

C. பாஸ்கர்,
இயக்குனர், ரோட்டரி இண்டர்நேஷனல்.

உலகளாவிய மானியத்திட்டம் — ஓர் பயனுள்ள வளம்

உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி சங்கத்தினரைச் சந்திக்கும் வகையில் நான் விஜயம் செய்யும்போது புதிய மாதிரி மானியத் திட்டம் அடிக்கடி வருகிறது. இந்த உலகளாவிய மானியத் திட்டத்தில் (Global grants) பங்கேற்க ஒரு ரோட்டரி சங்கமோ, ஒரு மாவட்ட ரோட்டரி சங்கமோ ஆர்வம் காட்டுவதில்லை என்பது எப்போதும் அதிருப்தி தருகிறது.

அதற்கான காரணங்களை அடிக்கடி நான் கேட்பது என்ன தெரியுமா? உலகளாவிய மானியத் திட்டம் சிக்கலாக இருக்கிறது என்பதுதான். அவர்கள் ஏராளமாகப் பணிகளை இழுத்துப் போட்டுக் கொள்கிறார்கள். ஏராளமாக நிதியும் கேட்கிறார்கள். அல்லது, மாவட்ட அளவில் ஒதுக்கப்படும் நிதியின் (District Designated Funds) தொகுப்பு கோரிக்கைகளை நிறைவு செய்வதற்கு ஏற்ப பெரிய அளவில் இல்லை என்பது இன்னொரு காரணம். இருந்தாலும், இது சாதகமானதாகவே இருக்கிறது. 2016-17ஆம் ஆண்டில் TRFன் நூற்றாண்டு நிறைவில் 1,260 உலகளாவிய மானிய உதவிகள் அளிக்கப்பட்டன. இது முந்தைய ஆண்டை விட 8 சதவீதம் அதிகமாகும். அத்துடன், இந்த ரோட்டரி ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தின் தொகை அளவு கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் கிடைத்ததை விட அதிகமாகவே இருக்கிறது.

இது போன்றவை குறித்து உங்களது தகவல்கள், கருத்துகள் எனக்கு உதவிகரமாக இருக்கின்றன. ஆன்லைன் மூலம் மானிய உதவி பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது, பரிசீலனை செய்து உதவும் வழிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதனால், உலகளாவிய மானிய உதவிக்கான நடைமுறை நேரம் மிச்சப்படுகிறது. 2016-17ம் ஆண்டில் உலகளாவிய மானியம் பெறுவதற்கான விண்ணப்பம் பெறப்பட்டு சராசரியாக 129 நாட்களில் முதல் தவணை நிதி அளிக்கப்பட்டு விட்டது. 2017-18ம் ஆண்டில் கடந்த பிப்ரவரி முதல் தேதி வரையில் இந்த கால அளவு 107 நாட்களாகக் குறைந்தது.

உங்களது ரோட்டரி சங்கம் உலகளாவிய மானிய உதவித் திட்டத்தில் பங்கேற்காவிட்டால், தற்போதுள்ள நிதி ஆதாரம் குறித்து இன்னொரு பார்வை செலுத்துங்கள். ரோட்டரி மானிய மையத்தின் grants.rotary.org என்ற புதிதாக வடிவமைக்கப்பட்ட புதிய இணைய தளத்தில் பாருங்கள். இணையத்தின் வலப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த நிதி ஆதாரம் என்ற பகுதியில் தேடிப்பாருங்கள்.

நமது ஃபவுண்டேஷனின் செலுத்தப்படாத அல்லது நிலுவையில் உள்ள மானியப் பிரிவின் பணியாளர்கள் வல்லுநர்களின் துணையுடனும், TRFன் மொத்த அனுபவத்தின் அடிப்படையிலும் உங்களுக்கு உதவத் தயாராக இருக்கிறார்கள். Rotary Support Center தொடர்பு கொள்ள வேண்டியத் தகவல்கள். ஒரே நாளில் தெரிவித்து விடும். இதற்கான மின்னஞ்சல்: rotarysupportcenter@rotary.org

TRF தொழில்நுட்ப ஆலோசனைப் பிரிவின் சேவகர்கள் (Cadre) குழுவாகச் செயல்படுகிறார்கள். அவர்கள் தொழில்நுட்ப யோசனைகளையும், ரொட்டேரியன்களின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் உரிய ஆலோசனைகளையும் வழங்குகிறார்கள். தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல்: contactcadre@rotary.org

ரோட்டரி மானியங்கள் வித்தியாசமான வாய்ப்பை நமக்கு அளிக்கின்றன. யதார்த்த வாழ்க்கைகுத் தேவையான புதிய சிந்தனைகளை வரவேற்கவும் உலக அளவிலோ, உள்ளூர் அளவிலோ நிலையான தாக்கத்தை ஏற்படுத்தவும் நாம் இருக்கிறோம்.

Paul A. Netzel

பால் A நெட்சல்
ரோட்டரி அறக்கட்டளை
அறங்காவலர் குழுத்தலைவர்

What are your challenges?
I want to hear your thoughts.
Email me at paul.netzel@rotary.org

Häcker

kitchen. germanMade.

DELHI	MUMBAI	BENGALURU	KOCHI	COIMBATORE	CHENNAI	HYDERABAD	AHMEDABAD	LUDHIANA	JAIPUR	INDORE	THRISSUR	MANGALURU
9313134488	9322987229	9740999350	9895058285	9500210555	9442081111	9700058285	9879538977	9815048222	9414058718	9425803599	7025991000	7899119955

E-mail: info@hacker-kitchens.com
Website: www.haecker-india.com / www.haecker-kuechen.com

குழந்தைக் கடத்தலுக்கெதிராக போராடும் வீரர்

ரஷீதா பகத்

ரொட்டேரியன் சதானந்த் பாகவத் மற்றும் தீபா பாகவத் புனேவில் உள்ள ரேணுதாயின் வீட்டில் குழந்தைகளுடன்.

புனேயில் பாலியல் தொழிலிலிருந்து பல சிறுமிகளையும் குழந்தைத் தொழிலாளரிலிருந்து பல சிறுவர்களையும் பாதுகாக்க, இந்த பெண் கவசத்தை எடுத்திருக்கிறாள். இதற்காக அவருக்கு நிறைய தைரியமும் இரக்கக் குணமும் தேவையாக இருக்கிறது. தகுதிகள் அவரிடம் நிறைய இருக்கிறது.

ஒரு சாதாரண கட்டடத்தின் நடைபாதையில், இப்போது நாகரீகமான கூரை அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் காரணம் புனேயில் கொடைத்தன்மை கொண்ட ரொட்டேரியனான ரேணு கவாஸ்கர், புனேயில் பிரபலமான ரேணுதாய், இவர் 50 குழந்தைகளுடன் உரையாடிக்கொண்டிருக்கிறார். அவர்களுக்கு இவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என தெரிந்தால் மனிதநேயம் இன்னும் நிலைத்திருக்கிறது என நீங்கள் நம்புவீர்கள். 4 லிருந்து 11 வயதுள்ள ஒளிரும் கண்கள் கொண்ட, அறிவான, குதூகலமான இந்தச் சிறுவர்களும் சிறுமிகளும், வாழ்க்கையின் கடுமையான துயரம், வன்முறை, கடத்தப்படுவது மற்றும் விபச்சாரம் போன்ற ஆபத்திலிருந்து கிட்டத்தட்ட மீட்கப்பட்டவர்கள்.

அவர்கள் ஆயிரக்கணக்கான பாலியல் தொழிலாளிகள் வசிப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ள புனேயின் புத்வார் பெத் சிவப்பு விளக்குப் பகுதியைச் சேர்ந்த பாலியல் தொழிலாளிகளின் குழந்தைகள் ஆவர், தைரியமும் மன உறுதியும் மட்டுமல்லாது ஆச்சரியப்படத்தக்க இரக்கமும் கருணையும் கொண்ட சமூக சேவகர் ரேணுத்தாய் தனிநபராக அவர்களை கலவரமான சூழலிலிருந்து வெளியேற்றி அன்பும் பராமரிப்பும் கொண்ட இவரின் அரவணைப்பு வட்டத்துக்குள் கொண்டுவந்தார். இவர் ஆரம்பித்த ஏகலவியா அறக்கட்டளையின் உதவியுடன், குழந்தைகள் ஒரு தனியார் பள்ளிக்குச் செல்கிறார்கள், அத்துடன் கூடுதலான பாடங்களையும் அவருடைய சிறிய

வீட்டுப்பள்ளியிலும் பெறுகிறார்கள், அங்கே பாடுவது, ஆடுவது மற்றும் சிரிப்பது மட்டுமல்லாமல் கனவுகளும் காண்கிறார்கள்.

என்னை வரவேற்ற புதிதாக மலர்ந்த முகங்கள், பார்வையாளரைப் பற்றிய உற்சாகத்துடனும் தெரிந்து கொள்ள வேண்டிய ஆர்வத்துடனும் இருந்தனர். ‘‘நீங்கள் போன பிறகு உங்களைப் பற்றி இவர்கள் நிறையக் கேள்விகள் கேட்கப்போகிறார்கள்’’ என்று சிரிந்துக்கொண்டே சொல்கிறார் ரேணுதாய். மேலும், ‘‘அத்துடன் நீங்கள் நன்றாகப் படித்தால் இவரைப்போன்று உங்களால் வர முடியும் என்று நான் அவர்களிடம் சொல்வேன்’’ என்றார்.

ரோட்டரி தொடர்பு

புனே லட்சுமி ரோடு ரோட்டரி சங்கம் (D 3131) உடனான ரேணுதாயின் தொடர்பு நான்கு வருடங்களுக்கு முன்பு தொடங்கியது. தங்களுடைய சங்கத் தலைவரின் தொடக்கக் கூட்டத்தில், ரேணுதாயின் பேச்சை இதன் முன்னாள் தலைவர் சதானந்த் பாகவத் கேட்டார். ‘‘அவருடைய பள்ளிக்கு நாம் கண்டிப்பாகச் சென்று அவருடன் இணைந்து ஏதோ ஒரு வழியில் செயலாற்ற வேண்டும் என நினைத்தேன். அங்கே செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது என்பதைக் கண்டறிந்தேன்’’. என்றார் பாகவத்.

ரேணுதாய் இரு அமைப்புகளை நடத்துகிறார்; ஒன்று புத்வார் பெத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு, இன்னொன்று தெருவிலிருக்கும் குழந்தைகளுக்கு.

அவர் இவரைச் சந்தித்த போது, இவரைப் பற்றிய கதைகள் அவருக்கு அதிர்ச்சியளித்தது. ஒருமுறை, சில விருந்தினர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், ஒரு 8 வயது பையன் இவரிடம் கேட்டான்: ‘‘அஜ்ஜி (தாதி) உங்களுடைய நண்பர்கள் உங்களைப் பார்க்க வருகிறார்கள், ஆனால் நீங்கள் ஏன் சிவப்பு சேலை கட்டவில்லை, லிப்ஸ்டிக் போடவில்லை? என் தாயாருடைய நண்பர்கள் அவர்களைப் பார்க்க வரும்போது அவர் எப்பொழுதுமே சிவப்பு சேலை கட்டி, லிப்ஸ்டிக் போடுவார்கள்.’’

இன்னொரு தடவை, இந்த குழந்தைகளுக்கான சிறிய பள்ளியுடன் இணைந்த ரேணுதாயின் வீட்டில், 8 வயது சிறுவனுடன் பேசும்போது, ‘‘நான் டீ சாப்பிடப் போகிறேன், உனக்குப் பால் வேண்டுமா?’’ என அவனிடம் கேட்டார். அதற்கு அவன் சொன்னான்: 'இல்லை, நான் பீர் சாப்பிடுவேன்.' அதனால், உனக்கு எப்படி பீர் தெரியும் என்று நான் கேட்டேன். என்னுடைய அம்மாவின் நண்பர்கள் என்னிடம் 100 அல்லது 150 ரூபாய் கொடுத்து வீட்டுக்கு எதிரே இருக்கும் கடையில் பீர் வாங்கி வரச்சொல்வார்கள். ஆனால் அவர்கள் பாதி குடித்துவிட்டு மீதியை வைத்துவிட்டுச் சென்றுவிடுவார்கள், அது வீணாகிவிடும் என்று நான் குடிப்பேன்’’ என்றான்.

ஆனால் இதே சங்கத்தின் முன்னாள் தலைவரான அவருடைய மனைவி தீபா பாகவத் சொல்வது இதயத்தை நொறுங்கச் செய்வதாக இருக்கிறது. வேறு இடம் எதுவும் இல்லையாதலால், அடிக்கடி அவர்களின் தாயார் வாடிக் கையாளர்களுடன் இருக்கும் போது, அந்த குழந்தைகள் கட்டிலுக்கு அடியில் இருக்கவேண்டியுள்ளது.

ஆனால் எனக்கு முன்பாக இருந்த காட்சிகள், மகிழ்ச்சியும் குதூகலமும் நிறைந்த குழந்தைகள் வகுப்பறையில் இருக்கிறார்கள் - உண்மையில் கட்டடத் தொழில் செய்துவரும் பாகவத் தான் நடைக்கூடத்தின் இந்தக் கூரையை அமைத்தார்..’’1 இலட்ச ரூபாயை விட குறைவாகத் தான் ஆனது’’ என்று சிரித்து, ‘‘இந்த குழந்தைகள்

ரேணுதாய்.

ரேணுவின் கதை

ரேணு 13 வயதாக இருக்கும்போது, அவர்களின் அம்மா பார்கின்ஸன்'ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருந்ததால் அவரின் சிறுவயது மகிழ்ச்சியாக இல்லை. ''எனக்கு 25 வயதாக இருக்கும்போது அவர் இறந்துவிட்டார். நாங்கள் மும்பையில் இருந்தோம். அந்த 12 வருடங்கள் மிகவும் கொடூரமானவை. என்னோட அப்பா மிகவும் மனமுடைந்து இருந்தார். தாயார் இறப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் இவர் புற்றுநோயால் இறந்துவிட்டார். அதனால் என்னுடைய பால்ய பருவம் சந்தோஷமில்லாமல் இருந்தது.''

தத்துவவியலில் மேற்படிப்பு படித்ததால் சரஸ்வத் வங்கியில் நேரடியாக அதிகாரி பணி கிடைத்தது.'' ஒரு பெண் ஆதரவாளரான நாராயணன் கவாஸ்கரை திருமணம் செய்துகொண்ட அதிர்ஷ்டசாலி நான். வெளியே சென்று சமுதாயத்திற்கு நல்லது செய்ய அவர் என்னை ஊக்கப்படுத்தினார். பெண்களுக்கு முழுச் சுதந்திரம் கிடைக்க வேண்டும் என அவர் நம்பினார், என்னுடைய வாழ்க்கையில் நடந்த எல்லா நல்ல விஷயங்களுக்கும் நான் அவருக்கு மிகவும் கடன்பட்டிருக்கேன். நான் செய்த எல்லா நல்ல விஷயங்களுக்கும் அவர் தான் வழிகாட்டினார்.

''ஒருவர் வேலை பார்த்தால் போதும் என்று சொல்லி, அவரை ராஜினாமா செய்யத் தூண்டினார், ''எல்லா நேரமும் படிக்கிறேன், வெளியே சென்று மக்களுக்கு உதவி செய்கிறேன்''. ஆனால் அவருடைய மணவாழ்வு வெறும் 11 வருடங்களில் முடிந்துவிட்டது, 42 வயதில் அவர் மாரடைப்பால் இறந்து விட்டார், 7 மற்றும் 9 வயதுள்ள இரு குழந்தைகளுடன், 34 வயதான ரேணுவை விட்டுப் பிரிந்து விட்டார்.

ஆனால் அவர் சமுதாயத்திற்கு வேலை செய்ய வேண்டும் என்ற விதையை அவருக்குள் விதைத்தார்; ''புத்தகங்கள் படிக்குமாறும், அன்பும் ஆதரவும் கிடைக்காதவர்களுக்காக பணி செய்யுமாறும் அவர் என்னிடம் சொன்னார்.'' 20 வருடங்களுக்கு முன்பு அவர் மும்பையிலிருந்து புனேவிற்கு செல்ல முடிவெடுத்தார்.

ஏன் என்று கேட்டதற்கு, ''மும்பை ஒரு பெருநகரம் மற்றும் பெரியது, அத்துடன் இது போல வேலை செய்வதற்கான இடத்தைக் கண்டுபிடிப்பதும், நிதி திரட்டுவதும் கஷ்டமானது. புனேயில் இதயம் இருக்கிறது, அது எனக்கு எல்லாமே கொடுத்திருக்கிறது'' நீங்கள் நேர்மையானவர் என மக்கள் ஒருமுறை நம்பி விட்டால், அவர்கள் மிகுதியாக கொடுக்கிறார்கள். நான் இந்த ரொட்டேரியன்களிடம் ஏதாவது கொடுங்கள் என்று எப்போதும் கேட்டதில்லை. அவர்களாகவே என்னிடம் வந்து கேட்டார்கள். இதுதான் புனேயில் சமூக மற்றும் சமுதாயச் சேவையின் சிறப்பு. அவர்கள் உங்களை யாசிக்க வைக்க மாட்டார்கள்.''

புனேயில் ரேணு, ஒரு பிரபலமான சமூக சேவகரான விஜயா லாவாதே என்பவரை சந்தித்தார். ''அவர் என்னை புத்வார்பேத்திற்கு எலும்பு முறிந்த ஒரு குழந்தையைக் கவனித்துக்கொள்வதற்காக அழைத்துச் சென்றார், ஒரு புதிய உலகம் எனக்கு திறந்தது. பெண் யாராவது ஒரு ஆண் வருவானா என்று காத்திருந்து நிற்கிறாள், நிற்கிறாள், நின்று கொண்டேயிருக்கிறார்கள். ஏனென்றால் அவளுக்கும் அவளுடைய குழந்தைக்குமான அடுத்த சாப்பாடு அவரிடமிருந்து தான் கிடைக்கும்.''

அவர் மெதுவாக குழந்தைகளுடனும் அவர்களின் அம்மாக்களுடனும் அந்த பகுதியில் இணைந்து விட்டார். ''ஒரு இரக்கமுள்ள பில்டர் இந்த இடத்தை கொடுத்து, இது சட்டச் சிக்கலில் இருப்பதால் யாருமே இதை ஆக்கிரமிக்க வரமாட்டார்கள், இதை நீங்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன் என்றார். இது எங்களின் 11வது வருடம்!''

ஆரம்ப காலகட்டத்தில் சில குண்டர்களால் அவர் பாதிக்கப்பட்டார். ஏனெனில் அடுத்த தலைமுறை அவர்களின் பிடியிலிருந்து நழுவுவதை அவர்கள் கண்டனர், ''ஆனால் அவரின் நேர்மையான செயலால் சில போலீஸ்காரர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் ஆதரவும் கூட அவருக்குக் கிடைத்தது.''

அவர் தன்னுடைய மகள் கௌரியுடன் அந்த பகுதிகளுக்குச் சென்று தாய்மார்களிடம் பேசுவார், ''அவர்கள் தங்களின் பிள்ளைகளை அங்கிருந்து அழைத்துச்செல்ல சந்தோஷமாக அனுமதித்தார்கள். இந்த குழந்தைகளுக்கு அவர்களுடைய குழந்தைப்பருவத்தைக் கொடுக்க முயற்சி செய்கிறேன்ம்.அவர்கள் விளையாடுகிறார்கள், பாடுகிறார்கள், ஆடுகிறார்கள் மற்றும் இங்கே வாழ்கிறார்கள்.'' அனைவரும் ஒரு தனியார் பள்ளியான ஆதர்ஷ் வித்யாலயாவிற்குச் செல்கிறார்கள். அவர்களின் படிப்புக் கட்டணங்கள் முன்னாள் மாணவர்களால் செலுத்தப்படுகிறது.

கூடுதலான கற்பித்தலும் அவருடைய இடத்தில் கொடுக்கப்படுகிறது மற்றும் ரொட்டேரியன்களும் உதவி செய்கிறார்கள், குறிப்பாக கணக்கு மற்றும் ஆங்கிலத்திற்கு. மஹாராஷ்ட்ராவின் புகழ்பெற்ற பாடகி பாகவத்தின் சகோதரி வர்ஷா பாவே இவர்களுக்கு இசை கற்றுக்கொடுக்கிறார்.

நிறைய நேரம் திறந்தவெளி நடைக்கூடத்திலேயே இருக்கிறார்கள் என்பதால் வெயில், மழைக்காக இதைச் செய்தோம். முதலில் நான்கு வருடங்களுக்கு முன் இதை அமைத்தோம், நேற்று தான் மறுபடியும் சீரமைத்தோம்'' என்றார்.

அவருடைய சங்கத்தின் தலையீட்டின் காரணமாக, விரைவிலேயே சமையலறையின் தளம் மாற்றியமைக்கப்பட்டு ஒரு மேடை போடப்பட்டது. ரொட்டேரியன்களிடமிருந்து விரைவிலேயே பள்ளிச் சீருடைகள், பாடப்புத்தகங்கள், நோட்டுகள், பள்ளி பைகள் மற்றும் மேஜைகளைப் பெற்றனர். ''அவர்கள் தரையில் உட்கார்ந்து எழுதுவதற்கு குனிகிறார்கள். இதனால் அவர்களின் முதுகு என்னவாகும் என்பதை நினைத்துப்பாருங்கள். ஒருவருடைய முதுகு வளைந்திருந்தால் அவருடைய அறிவும் மழுங்கிருக்கும் அத்துடன் மழுங்கியிருக்கிற அறிவு ஒருபோதும் நிமிராது'' என்று புதுமையான தத்துவம் சொல்கிறார் பாகவத்!

இந்தக் குழந்தைகள் சந்தோஷமாக அவர்களுக்கும் ஏதோ கிடைத் திருக்கிறது என நினைக்கிறார்கள். அடுத்து பிறந்தநாள் கொண்டாட்டம் பற்றி கேள்வி எழுந்தது. அவர்களின் பள்ளியில் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளின் பிறந்தநாளை வீட்டில் கொண்டாடுவார்கள் என தெரிந்துவைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒருபோதும் இதை அனுபவித்ததில்லை. இப்பொழுது ரொட்டேரியன்கள், ரேணுதாயின் குழந்தைகளின் பிறந்தநாளை கேக் வெட்டி, குழந்தைக்கு புத்தாடை வழங்கி கொண்டாடுகிறார்கள்! 50 குழந்தைகள் தினமும் இங்கே 10 மணிக்கு வந்து 6 மணிக்குத் திரும்புகிறார்கள் என நினைக்கிறேன்.

கனவுகள் ஏராளம்

சில கலந்துரையாடல்கள் வேடிக் கையாக இருக்கும், குழந்தைகள் அவர்களின் கனவுகளை சொல்வார்கள், ஆனால் அவை எல்லைகளுக்கு உட்பட்டிருக்கும். தருண் என்ற 4ஆம் வகுப்பு படிக்கும் சிறுவன், நிறைய சிறுவர்களுக்கும் சில சிறுமிகளுக்கும் இருக்கும் ஆசையை வெளிப்படுத்தினான் - அவன் போலீஸில் சேர விரும்புகிறான். அதேபோல சலோனியும். ஏன் என்று கேட்டதற்கு'' மக்களுக்கான நியாயம் கிடைக்க'' என்று இயல்பாகச் சொல்கிறாள். ''அவர்களுடைய பார்வையில் போலீஸ் மக்களை அடிப்பது மட்டுமல்ல இலஞ்சம் வாங்குபவர்களாகவும் இருக்கிறார்கள்; அவர்கள் அப்பாவி மக்களின் பணத்தைப் பறிக்கிறார்கள், எனவே இது போன்ற மக்களுக்கு நியாயம் கிடைக்க, இவள் உதவி செய்ய விரும்புகிறாள்'' என ரேணுதாய் விளக்கினார்.

இவள் போலீஸாக வந்து ஒரு நல்ல வேலை கிடைத்தால், இவளால் இவள் அம்மாவை இந்த பகுதியிலிருந்து மீட்க முடியுமா என அவளிடம் தன்மையாகக் கேட்டேன். ''நான் முதலில் ஒரு நல்ல வீடு வாங்கி என்னுடைய குடும்பத்தை ஒன்றுசேர்ப்பேன் (அவள் சகோதரி மனிஷா இங்கே இருந்தாலும், அவளின் மற்ற சகோதரர்களும் சகோதரிகளும் தனியாக இருக்கிறார்கள்) என்னுடைய இரண்டு சகோதரர்களும் ஒரு கேரேஜில் வேலை

செய்கிறார்கள், ஆனால் என்னுடைய வீட்டில் எல்லாரும் ஒன்றாக இருப்போம்'' என்றாள் உற்சாகமாக. உடன்பிறந்தவர்கள் அனைவரும் ஒன்றாக இருக்கிறார்கள், அவர்களின் அம்மா அடிக்கடி இங்கே பார்க்க வருகிறார்கள்.

சிறுமிகள் எல்லோரும் அவங்களுடைய எதிர்காலம் பற்றியும் அவர்களின் அம்மாவை தற்போதைய துயரத்திலிருந்து மீட்பது பற்றியும் திட்டங்களைப் பகிர்ந்து கொள்வதை நான் பார்க்கிறேன். சிறுவர்களும் அதையே விரும்புகிறார்கள், ஆனால் அதை வெளிப்படுத்தாமல் வைத்திருக்கிறார்கள். மறுபுறம், அனுராதாவிடம் அவள் அம்மாவிற்கு என்ன செய்ய விரும்புகிறாள் எனக் கேட்டதற்கு ''அவர்கள் உடல்நலமில்லாமல் மிகவும் கவலையோடு இருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது எதைச் செய்கிறார்களோ அதைத் தொடர்ந்து செய்ய நான் அவர்களை விடமாட்டேன், ஏனென்றால் அவர்கள் சந்தோஷமாக இல்லை. நான் செவிலியராகி, ஒரு நல்ல வேலை கிடைத்த பின்னர் அவர்களை அங்கிருந்து அழைத்து வந்து விடுவேன்.''

மிகச் சில பேர் கதாநாயகனாக விரும்புகிறார்கள்! ''எனக்குப் பிடித்த கதாநாயகன் சல்மான் கான்'' என்று சிரிக்கிறான் ரோஹன். நன்றாக நடனமாடக்கூடிய ராஜேந்திரா சல்மான்கான் மாதிரி வர விரும்புகிறான். உடனே ரேணுதாய், ''ஆனால் பெரிய பசங்களுக்கு சல்மான் கானை பிடிக்காது, ஏனென்றால் அவர் யாரையோ கொலை செய்திருக்கிறார் என அவர்கள் நினைக்கிறார்கள்'' மற்ற சிறுவர்கள் சூப்பர்மேன் ஆக மாற விரும்புகிறார்கள். ''போலீஸ்'' என மறுபடியும் ஒரு சேரக் குரலெழுப்புகிறார்கள், ரேணுதாய், ''ஒரு விஷேஷமான பரிமாணம் இங்கே இருக்கிறது; அவர்களும் அவர்களுடைய அம்மாக்களும் போலீசால் நிறைய தொல்லைகள் அனுபவித்திருக்கிறார்கள், அதனால் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள விரும்புகிறார்கள், அதோடு ஹீரோக்களும் அதேயே தான் செய்கிறார்கள்.'' என்றார். அனுராதாவின் தங்கை லட்சுமி ஒரு ராணுவ வீராங்கனையாக விரும்புகிறாள். ''நாட்டையும், சமுதாயத்தையும், அவள் அம்மாவையும் பாதுகாக்க அதுதான் ஒரே வழி என்று அவள் நம்புகிறாள். இந்த குழந்தைகள் மற்றவர்கள் அவர்களைப் பாதுகாப்பதை விட அவர்கள் மற்றவர்களுக்குப் பாது காப்பை கொடுக்க நினைப்பதை நீங்கள் பார்க்கலாம். கனவுகள் வித்தியாசமானவை; மற்ற குழந்தைகள் வெற்றிகரமாகவும் சந்தோஷமாகவும் இருக்க விரும்பும் போது, கவலைகளை விட்டு வெளிவர விரும்புகிறார்கள்'' என்று பெருமூச்சு விடுகிறார்.

குழந்தைக் கடத்தல்

இந்த குழந்தைகளை குறித்த பேரார்வம் மற்றும் ஆத்மார்த்தம், அவர்களுக்கு அவர்களுடைய குழந்தைப் பருவத்தை திருப்பித் தருவதற்கான உறுதி இவற்றைத் தவிர ரேணுதாயின் முக்கிய நோக்கமாக இருப்பது, அவரால் முடிந்தவரை குழந்தைக் கடத்தலைத் தடுப்பதாகும். எல்லா சிறுமிகளும் கடத்தப்படுவது ஒரு முடிவுக்கு வரும் என்பதைப் பற்றிய எந்தவிதச் சந்தேகமும் அவருக்கு இல்லை. ''ஆனால் சிறுவர்களும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என நினைக்க வேண்டாம். ரோஹனைப் பாருங்கள், அவன் ரொம்ப அழகான பையன், அவனுக்கும் அது தெரியும்! ஆனால் அவனும் பெரிய ஆபத்தில் இருக்கிறான்.''

காதல் திருமணத்தில் சிக்கிக்கொண்ட பெண்களை இந்தச் சிவப்பு விளக்கு பகுதிக்கு வசப்படுத்தி

அமெரிக்க ரோட்டரி சங்கத்தை எதிர்பார்த்தல்

புனேயில் ஏகலவ்யா அறக் கட்டளை நடத்தும் விடுதியில் 50 ஆதரவற்ற குழந்தைகள் கூடுதல் படிப்பு பெறுகிறார்கள், இப்போது அந்த கட்டடம் ஒப்பந்ததாரர் கட்டுமானத்தைத் தாமதித்ததால் புனே மாநகராட்சியிடம் சில ச ட்டரீதியான வழக்குகளைச் சந்தித்தது. 20 வருடங்களாக இந்த வழக்கு தேங்கியிருந்தது. குழந்தைக் கடத்தலைத் தடுக்க ரேணுதாய் ஆரம்பித்த பின்பு, 11 வருடங்களுக்கு முன்பு, ''எப்படியோ இந்த கட்டடம் யாரும் பயன்படுத்தாமல் இருக்கிறது, நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை நீங்கள் ஏன் இதைப் பயன்படுத்தக் கூடாது?'' என்று கேட்டார்.

இப்போது வழக்கின் தேதி கொடுக்கப்பட்டு தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது. ''ஒரு வேளை இந்த கட்டடம் நகராட்சிக்கே சென்றுவிட்டால், இந்தக் குழந்தைகள் மறுபடியும் அந்த நரகத்திற்குத் தான் செல்வார்கள் என நாங்கள் நினைத்தோம். அதனால் ஒரு நிரந்தரமான இடத்தை அவர்களுக்குக் கொடுக்க நாங்கள் முயற்சித்து வருகிறோம். அமெரிக்காவில் உள்ள எங்களது ஒரு NRI நன்கொடை யாளரிடமிருந்து 4 கோடி ரூபாய் நன்கொடை கிடைத்திருக்கிறது. இந்த குழந்தைகளுக்கு இந்த வருடத் திற்குள்ளே ஒரு நல்ல 7000 சதுர அடியில் கட்டடம் கட்டுவதற்கான நிதி தயாராக இருக்கிறது'' என்றார் புனே லட்சுமி ரோடு RC-யின் முன்னாள் தலைவர் சதானந்த் பாகவத்.

ஆனால் வரியைச் சேமிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் நன்கொடையாளர், அமெரிக்காவில் உள்ள ஒரு தன்னார்வ அமைப்பு மூலம் அமெரிக்காவில் உள்ள அவர்களின் அறக்கட்டளையிலிருந்து இந்த பணத்தை நன்கொடை கொடுத்துள் ளார். அமெரிக்க ரோட்டரி சங்கம் இந்த பணத்தைப் பெற சம்மதித்தால் மட்டுமே இது நடக்கும், அதன் பின்னர் மீட்கப்பட்டவர்கள் சரியான கல்வியும் ஒரு நல்ல வாழ்க்கையும் பெற உறுதிசெய்வதற்காக புனேயில் உள்ள ரொட்டேரியன்களுடன் இணைந்து திட்டத்தைச் செயல்படுத்தலாம்.

கோவாவிற்கு அருகிலுள்ள குடாலில் புனேயிலிருந்து 6-7 மணிநேர பயணத்தொலைவில் ஒரு நிலத்தை பெற்றதாக பாகவத் கூறினார். ''குழந்தைகள் தூரத்தில் கொண்டு செல்லப்படுவது சம்மதமா என நாங்கள் பாலியல் தொழிலாளிகளிடம் பேசினோம். அதற்கு,'' அவர்களை எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் கொண்டுசெல்லுங்கள். இந்த சூழலிலிருந்து அவர்களை வெளியேற்றிச் செல்லுங்கள் (mahol se unhe nikal do),'' என்று அவர்கள் சொன்னார்கள்.

புனேயின் புறநகரில் ஆம்பகேனில் இந்த குழந்தைகளுக்கான ஒரு கட்டடத்தைக் கட்ட 6,000 சதுர அடியில் ஒரு நிலத்தை பார்த்து வைத்துள்ளார். ''மேலும் மற்ற வாய்ப்புகளும் இருக்கிறது, ஆனால் இதற்குத் தேவையான தொகையாகிய சுமார் $600,000 அதிகம் என்பதால் அமெரிக்காவில் ஒரு ரோட்டரி சங்கத்தை இன்னும் கண்டறிய முடியவில்லை. அமெரிக்காவில் ஒரு கூட்டாளி சங்கத்தைக் கண்டறிந்த பின்புதான் இந்தக் குழந்தைகளின் நிச்சயமற்ற எதிர்காலத்திலிருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும்,'' என்றார் பாகவத்.

கூட்டிவந்து விடுகிறார்கள். இங்கிருந்து தப்பிப்பது சாத்தியமில்லை'' என்கிறார் ரேணுதாய். அத்துடன் இதயம் நொறுங்கிவிடுகிற மாதிரி, ஒன்பது வயது சிறுமியை மீட்ட ஒரு கதை சொல்கிறார். அவள் தன்னுடைய அம்மாவால் விற்கப்பட்டாள், ''அவள் கடன்பட்டிருந்தாள், அது எங்களுக்குத் தெரியாது. அவள் ஒரு அழகான சிறுமி, நாங்கள் கடுமையாக முயற்சி த்தோம், ஆனால் அவள் காணாமல் போய்விட்டாள். தரகரிடம் பேசி அவளைத் திரும்ப அழைத்துவர முயற்சித்தோம், அவர்களில் ஒருவன் சொன்னான்: 'நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள், அவள் இப்பொழுது பெங்களூர் வியாபாரத்தில் இருக்கிறாள், இங்கு இல்லை.' அது 15 வருடங்களுக்கு முன்னர், என்னுடைய வேலையைத் தொடங்கும்போது நடந்தது. அதற்குப் பின், ஒவ்வொரு சிறுமியும் சிறுவனும் கூட பாதுகாக்கப்பட வேண்டும் என்று நான் புரிந்துகொண்டேன்; அழகாக இருப்பது இப்பகுதியின் சாபம் போல.'' சிறுமிகளைத் திருமணத்தில் சிக்கவைத்து விபச்சாரத்துக்கு அழைத்து வருவது தவிர, சிறுவர்களும் உணவு, மது எடுத்துவருவதற்கும் மற்றும் இதர வேலைகளுக்கும் குழந்தைத் தொழிலாளியாக பயன்படுத்தப்படுகிறார்கள். ''அந்தக் குழந்தை சந்தோஷமாக இருக்கும். ஏனென்றால் சாப்பாடு தான் அவர்களுக்கு அவசியம், படிப்பு இல்லை, அதோடு குழந்தைத் தொழிலாளி ரொம்ப மலிவாகக் கிடைக்கும்.''

ரேணுதாயின் வீட்டில் குழந்தைகள் கல்வி கற்கின்றனர்.

தெருக் குழந்தைகளின் நிலை

மற்றொரு இடத்தில் அவர் 62 தெருக் குழந்தைகளை மீட்டு பள்ளிகளில் சேர்த்திருக்கிறார். ''ஆனால் இன்னும் 62,000 சிறுவர்கள் கிராமத் திலிருந்து வந்து நடைபாதைகளில் தங்கியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். உன்னால் முடிந்த அளவுக்குச் செய் என்று நான் எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன். என்னுடைய மகள் கௌரி என்னுடன் இருந்து என்னுடைய வேலைகளை எல்லாம் பார்த்துக் கொள்வாள்''

''தெருவிலிருக்கும் மற்ற குழந்தைகளுக்கு என்னாவாகும்?''

''அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.தெருக்களில் தங்கிருப்பவர்கள் திருட்டு, கொலை அல்லது பாலியல் தொழிலில் ஈடுபடலாம். மாற்று வழி எதுவும் இல்லாததால் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்கள்; போதைப்பொருள் பயன்படுத்து கிறார்கள். அவர்களுக்கு யார் வேலை கொடுப்பார்கள்? புனே ரயில் நிலையத்தில், நிறையக் குழந்தைகள் சுற்றிக்கொண்டு இருப்பதை நீங்கள் பார்க்கலாம். அவர்களுக்கு எங்கள் முகங்களைத் தெரியும், அதனால் எங்களைப் பார்த்தவுடனே ஓடிப்போய்விடுவார்கள். அவர்களுக்கு இங்கு வருவதற்குப் பிடிக்கவில்லை. ஜெயிலில் இருப்பது போல நெனைக்கிறார்கள். அதோட யாரு அவர்களுக்கு போதைப்பொருள் தருவது? பிச்சையெடுத்து சாப்பிடும் அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள்''.

அரசாங்கத்திலிருந்து ஒரு கடுமையான முயற்சி எடுக்கும் வரை, ''இந்தக் குழந்தைகளை மீட்க முடியாது, கடத்தப்படுவது தொடரும் அல்லது குற்றச் செயல்களில் முடியும்'' என இவர் கவலைப்படுகிறார்

சிறுமிகளில் எத்தனை சதவீதம் பேர் தன்னுடைய தாயாரின் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என இவர் நினைக்கிறார்?

'நேரடியாக கொஞ்சம் தான், அம்மாக்கள் அவர்களுடைய பெண் குழந்தைகள் இந்த நரகத்தில் விழுவதை விரும்பமாட்டார்கள்.'' ஆனால் அந்தப் பெண்கள் திருமணம் செய்கிறார்கள். அதிகமாக காதல் திருமணம், ஆனால், ''அவர்களுக்கு என்ன நடக்கிறது என்று நமக்குத் தெரியாது. திருமணம் செய்த ஆட்களில் சில பேர் ஏற்கனவே திருமணம் ஆனவர்கள், அவர்கள் கடைசியில் கைவிட்டுவிடுவார்கள். அவர்கள் பெரும்பாலும் கையில் ஒரு குழந்தையுடன் திரும்பி வருவார்கள்'' .

அந்தக் குழந்தைகளின் தந்தைகள் அவர்களைப் பார்க்க வருவார்களா என்று கேட்டதற்கு,''ஆனால் பெரும்பாலும் அது தவறான அடையாளமாக இருக்கும். அம்மா காட்டுகிற யாரையோ அந்தக் குழந்தை ஒத்துக்கொள்கிறது; அவன் சென்ற பின்பு, அடுத்து ஒருத்தன் வருவான். ஆனால் அவர்கள் அவனையும் ஏற்றுக்கொள்வார்கள், ஏனென்றால் அவர்கள் வாழ்கிற இடத்தில் வன்முறை அதிகம் நடக்கும், அதனால் அவர்களைப் பாதுகாப்பதற்கு ஒரு ஆண் துணை, வேண்டும். அவர்கள் இந்த வன்முறையைத் தினமும் பார்க்கிறார்கள், சில நேரத்தில் அம்மாவின் படுக்கைக்குக் கீழே இருந்துகொண்டு.''

மிகுந்த ஆச்சரியம், அவர்களின் அம்மாக்கள் அடிக்கடி கொடூரத்திற்கு உட்படுத்தப்படுவதைப் பார்ப்பதால், இந்த குழந்தைகள் பெண்களைப் பலவீனமானவர்கள் என்று கருதுகின்றனர்.■

கேள்விக்கணை

ரோட்டரி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேரி ராஸின் ரோட்டரி தன்னிடம் ஏற்படுத்திய மாற்றங்களைப் பற்றி விவரிக்கிறார்

RIPE *பேரி ரஸ்ஸின்*

ராஸின் எந்தக் காரியத்தை முடிக்க வேண்டும் என்று எடுத்துக் கொண்டாலும் அதை எதுவும் தடுக்க முடியாது. 'ஒன் ரோட்டரி சென்டர்' மையத்தில் இணைந்ததும் ஐந்து நாள் பயிற்சித் திட்டத்தை சுருக்கி, ஒன்றரை நாள் சர்வதேசக் கூட்டமாகக் குறைக்கிறார். அவரது தலைமை உரையில், 'தூண்டுகோலாக இருங்கள்' (Be the Inspiration) என்ற தலைப்பிலான அவரது உரையில், எனது ஆளுமை எல்லோரது கருத்துகளையும் கேட்பதும் அதையடுத்து முடிவெடுப்பதும் என் ஆளுமை. பின்னர் அடுத்த விஷயத்தை நோக்கிச் செல்வது. இப்படி சீராகவும் வேகமாகவும் முன்னேறுகிறோம் என்று குறிப்பிடுகிறார்.

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் ஹைதியில் 2010ம் ஆண்டு ஏற்பட்ட நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிப்பது, மீட்புப் பணிகளில் ராஸின் ஈடுபட்டது குறிப்பிடத் தக்கது. ரோட்டரி அமைப்பினர் நிதியுதவியுடன் 105 தனித்தனித் திட்டங்களைச் செயல்படுத்தினார்.

என்னிடம் ஒவ்வொரு திட்டத்தின் தனித்தனி விவரமும் முழுமையாக உள்ளது. இதற்காக 132 பக்கங்கள் கொண்ட விவர அறிக்கையும் இருக்கிறது. எல்லோரும் என்னிடம் எப்படி இதைச் சாதித்தீர்கள் என்று கேட்கிறார்கள். ஆனால், இதை மகிழ்ச்சியோடு உற்சாகமாகச் செய்கிறேன் என்கிறார்.

மருத்துவமனையின் நிர்வாகியாக அவர் பணியாற்றிய போது அவரது ஆளுமைத் திறன் சிறந்த வகையில் பயன்பட்டது. பஹாமாஸ் நகரில் அமெரிக்க சுகாதார நல நிர்வாகிகள் கல்லூரியில் முதல் ஃபெலோஷிப் பெற்ற அவர் 37 ஆண்டுகள் பணியாற்றிய பின் அண்மையில் மருத்தவர்கள் மருத்துவமனை சுகாதார நல அமைப்பின் தலைவராக ஓய்வு பெற்றார். தற்போது ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார். 1980ல் ரோட்டரி சேவையைத் தொடங்கிய அவர், ரோட்டரியின் மிக உயர்ந்த விருதான 'தன்னை மிஞ்சிய சேவை' (Service Above Self) விருதினைப் பெற்றிருக்கிறார். ராஸினும் அவரது மனைவி எஸ்தரும் TRF மிக முக்கியமான பெரிய நன்கொடையாளர்கள்.

The Rotarian இதழின் முதன்மை ஆசிரியர் ஜான் ரெஸாக், மூத்த எழுத்தாளர் டயானா ஸ்கோபெர்க் ஆகியோர் அமெரிக்கா இலினாய்ஸ் மாகாணம் இவான்ஸ்டோனில் உள்ள காபி அருந்தகத்தில் ராஸினைக் கடந்த அக்டோபர் மாதம் சந்தித்தனர். அப்போது, புகைப்படம் எடுத்துவிட்டு, அவருடன் கலந்துரையாடினர்.

தி ரோட்டேரியன் (TR) : ரோட்டரி சங்கம் பேரிடர் மீட்புப் பணிகளை மட்டும் செய்யும் அமைப்பு அல்ல. அண்மையில் நேர்ந்த மோசமான இயற்கைப் பேரிடரின்போது முதலில் சேவைபுரிந்தவர் என்ற முறையில், ஏதாவது மாற்றங்களை நாம் ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

ராஸின்: ஆம், ரோட்டரி இன்டர் நேஷனல் பேரிடர் மீட்பு இயக்க மல்ல, ஆனால், பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் நன் கொடையாளர்களுக்கும் இடையில் தகவல் பரிமாறிக் கொள்ளவும் உதவிக் கரம் நீட்டுவதில்

தூண்டுகோலாகவும் இருக்க விரும்புகிறேன். உலகம் முழுதும் உள்ள ரோட்டரி அமைப்பினர் பேரிடர் குறித்து அறிந்தவுடனே உதவி கோருகிறார்கள். அவர்களுக்குத் தேவையான வகையில் உதவுவதற் காக அவர்களுடன் சரியாகத் தொடர்புகொள்ள வேண்டியிருக்கிறது. ஏதோ பழைய துணிமணிகளைக் கொடுத்து உதவி செய்வது மட்டும் சரியல்ல. காரணம் அவர்கள் அதைக் கேட்கவில்லை. முதலில் பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதியில் வசிப்போரின் குரலைக் கேட்க வேண்டும் அவர்களது தேவைகள் அன்றாடம் மாறக் கூடும். எனவே, தகவல் தொடர்பு மிக முக்கியம். நமது இணையதளத்தில் தகவல்களை ஒவ்வொரு பேரிடர் நேரும் சமயத்திலும் புதுப்பித்துக் கொண்டிருக்க வேண்டும்.

பேரிடர் பாதித்த பகுதிகளில் உதவுவதற்காக ரோட்டரி செயல் பாட்டுக்குழு இருக்கிறது. அந்தக் குழுவுக்கு RI அமைப்பின் பணியாளர்களுடன் இணைந்து செயல்படும் வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. இன்று சேவை புரிவதை விட உடனடியாக வேகமாகச் செயல்பட முடியும். முதலில், பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு பாதுகாப்பாக இருக்கிறீர்களா? இங்கே நாங்கள் துணையாக இருக்கிறோம். ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? என்று சில வார்த்தைகள் கேட்டாலே போதும். அவர்கள் தாங்கள் தனிமைப்படவில்லை என்று உணர்வார்கள். அதையடுத்து, நாம் அளிக்கும் நிவாரண உதவிகளை ஏற்கெனவே களத்தில் உள்ள சேவை புரியும் ஏஜென்சிகள் மூலம் எப்படிப் பெறுவது என்று ஆலோசனை கூறவேண்டும்.

TR : இப்படித் தகவல் களைப் பகிர்ந்து கொள்ள சங்கங்களை ரோட்டரி சார்ந்திருக்க வேண்டுமா?

ராஸின்: ரோட்டரி சங்கங்களும் மாவட்ட அமைப்புகளும் களத்தில் இருக்கின்றன. அவர்களுக்குத்தான் என்ன நடக்கிறது என்று தெரியும். RI அமைப்பில் உள்ள யாரையாவது எப்போது, எப்படி, யார் தொடர்புகொள்வது என்பது அவர்களுக்குத் தெரியும். இருவருக்கும் தொடர்பை ஏற்படுத்தி தருகிறோம்.

பேரிடர் நேரும் பகுதியில்

2018 ரோட்டரி சர்வதேச மாநாட்டில் RIPE பேரி ராஸினும் அவர் துணைவியார் எஸ்தரும்.

நீங்கள் இருந்தால், உங்கள் நண்பர்கள் வலியுறுத்துவதால், உடனடியாக நிவாரணம் அளிப்பீர்கள். இது இயல்பு. அதைத் தொடர்ந்து ரோட்டரி அமைப்பின் மிகப் பெரிய நடவடிக்கை நீண்டகால மீட்பு முயற்சி ஆகும்.

ஹைதியில் நில நடுக்கம் ஏற்பட்டு 8 ஆண்டுகள் ஆகின்றன. ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பு அங்கே இருந்தது. பல அமைப்புகள் நிவாரண உதவிகளை அளித்தன. ஆனால், அதன் பின் அவை சென்றுவிட்டன. ரோட்டரி அமைப்பினர் அங்கே பாதிக்கப் பட்டோர் மீண்டும் பழைய நிலை மைக்குத் திரும்பும் வரையில் அவர்கள் பணியில் இருந்தனர். நாம் நிதியை அளிக்கிறோம் என்பதல்ல, அவர்களுக்குப் பரிவுடன் ஆலோனை அளிக்கிறோம், வழிகாட்டுகிறோம்.

TR : பெரிய மாற்றத்தை நோக்கிய தாக்கம் ரோட்டரிக்குத் தேவையா? நமது ஆதாரங்களை எப்படி ஒதுக்கப் போகிறோம்?

ராஸின்: சிறிய திட்டங்களைச் செயல்படுத்த அது போதும். அதைத் தொடர்ந்து மேற்கொள்வோம். ஆனால், மக்களின் வாழ்க்கையை மாற்றும் வகையில், ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் ஏதாவது ஒரு மிகப் பெரிய சேவைத் திட்டத்தைச் செய்வது பற்றி சிந்திக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்காக பணத்தைச் செலவிட வேண்டும் என்பதில்லை. ஹைதியில் செய்தது ஓர் உதாரணம். 60,000 - 70,000 டாலர் வரையில் இளஞ்சிவப்பு நிற ஜீப்களை அங்கு பணியில் இருந்த தாதிகளுக்கு (midwives) அளித்தோம். அங்கு உதவியைப் பெற இயலாத நிலையில் சிக்கிய கருவுற்ற பெண்களின் நலனுக்கான சேவைகளை அவர்கள் மேற்கொள்வதற்காக பாதிக்கப்பட்ட இடத்துக்குச் செல்வதற்காக அந்த ஜீப்கள் வழங்கப்பட்டன. அதன் விளைவாக அங்கு மரணம் குறைந்தது. அது ஒரு நிலைமாற்றம்தான்.

The Rotary Foundation இது நீண்ட காலம் நீடிக்க வேண்டும் என்று கூறியது. ஒரு பணி நீடிக்க வேண்டுமானால், நல்லது செய்ய வேண்டுமானால், நீங்கள் நிலை மாற்றத்துடன் இருக்க வேண்டும். அப்போதுதான் அதுதான் நிறுவன அறங்காவலர்களுக்கும் உலகளாவிய மானிய உதவிக்கும் பொருந்துவது. மாவட்ட ரோட்டரி அமைப்புகள் மாவட்ட அளவிலான மானிய உதவியை எதிர்நோக்கி இருக்கலாம். நம்மிடம் ஆதாரங்கள் உள்ளன. நாம் மாற்றத்தைச் சிந்தித்தால் போதும்.

TR : ஹைதியில் மறு கட்டமைப்புப் பணியில் ஈடுபட்டதன் மூலம் ரோட்டரி குறித்து சாதகமான பாதிப்பு ஏற்பட்டதாகக் கருதுகிறீர்களா?

ராஸின்: ஹைதியின் சில பகுதிகளுக்கு ரோட்டரி வீல் சின்னத்து அமைப்புடன் நீங்கள் சென்றால், உங்களுக்கு நன்றி கூறுவார்கள். அவர்களுக்கு உணவு, குடிநீர், கல்வி வசதிகளை அளித்து மாற்றத்தைக் குறித்து பேசினால், ஹைதி நாடு முழுமைக்கும் நல்ல குடிநீரை வழங்குவதற்கு நாங்கள் மேற்கொண்ட பணியைக் குறிப்பிடலாம். அந்நாட்டுப் பிரதம மந்திரி, ரோட்டரி அமைப்பைச் சேர்ந்தவர். அவரது அரசு ஏஜென்சி

எங்களுடன் நேரடியாக இணைந்து செயல்பட உள்ளது. உலக அளவிலான மானியத்தை விட மிகப் பெரியது இதுவே. அதற்காகத் திட்டமிடலாம். எப்படி சிறு அளவில் செய்வது என்றும் வகுத்துக் கொள்ளலாம். உலகம் முழுதும் உள்ள ரோட்டரி சங்கங்கள், இதில் பங்கேற்பதற்கு ஆர்வம் காட்டும் என்று நம்புகிறேன். இதுதான் மாற்றத்துக்கானது.

TR : உங்களது காலத்தில் வேறு என்ன லட்சியங்களை நிறைவேற்றத் திட்டமிட்டிருக் கிறீர்கள்?

ராஸின்: RI அமைப்பின் நிலையில் என்ன செய்கிறோம் என்பதற்கும் ரோட்டரி சங்கங்கள் நிலையில் என்ன செய்கிறோம் என்பதற்குத் தொடர்பே இல்லை. அந்த இடைவெளியை நிரப்ப விரும்புகிறேன். உறுப்பினர்களை இணைப்பது, நிறுவன உதவிகளை அளிப்பது போன்றவை மூலம் சங்கங்களை வலுப்படுத்து தல், இவற்றைச் செய்யவேண்டும் என்று சில சங்கங்கள் புரிந்துகொள்ள நாம் அவர்களை அணுகுவதில்லை. அதனால், அவர்கள் அவற்றைச் செய்வதில்லை.

புதிய ரோட்டரி சங்கங்களை அமைப் பதற்கான வழிவகைகளைக் காண விரும்பு கிறேன். பல இடங்களில் சங்கங்கள் இல்லை. ரோட்டரி சங்கங்களிடம், நீங்கள் புதிய உறுப் பினர்களைச் சேர்க்க வேண்டும் என்று தொடர்ந்து கூறி வருகிறோம். அவர்களது கலாசாரம் மற்றவர்களை வசீகரிப்பதாக இருப்பதில்லை. ரோட்டரி சங்கங்களின் செயல்பாட்டை அனுபவிக்க வேண்டும். அடுத்து ஒரு ரோட்டரி சங்கத்தை அவர்கள் உருவாக்க வேண்டும். ரோட்டராக்ட் சங்கங்கள் ரோட்டரி சங்கங்களை உருவாக்கலாம் என்பதை எல்லோரும் அறிந்து கொள்ளும்படி செயல்பட்டு வருகிறோம். ரொட்டேரியன்கள் 30 வயதைக் கடந்தால், ரோட்டரி சங்கத்தை அமைத்துக் கொள்ளலாம் என்று அறிவுறுத்த வேண்டும். ரோட்டராக்ட் அமைப்பு என்பது நமது மறைமுகமான கருவியைப் போன்றது. எனவே, ரோட்டராக்ட் அமைப்பினரை புதிய முறையில் ரோட்டரி அமைப்பாக மாற்றுவதற்காக நேரம் ஒதுக்க வேண்டும். அதற்குச் சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வேண்டும். பிரபலங்களை ஒப்பிடும்போது நாம் ஒன்றுமில்லை எனலாம். ரோட்டரி அமைப்பினரும் ரோட்டராக்ட் அமைப்பினரும் சமூக வலைதளங்களைப் பயன்படுத்தி, பொது மக்களிடம் நமக்குள்ள புகழை மேம்படுத்த வேண்டும். இது இன்னொரு பகுதியாகும். ரோட்டரி அமைப்பு என்றால் என்ன என்று நமது சமுதாயம் அறிந்துகொள்ளவேண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ரோட்டரி சங்கங்களும் சமுதாயத்தினருடன் தொடர்புகொண்டு, ரோட்டரி குறித்தும், நாம் என்ன செய்கிறோம் என்பது குறித்தும் ஏன் செய்கிறோம் என்பதையும் அறியச் செய்ய வேண்டும்.

ரோட்டரி சங்கங்கள் தலைமைப் பண்புகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை உறுப்பினர்களுக்கு நடத்த வேண்டும் என விரும்புகிறேன். ரோட்டரியின் புதிய இலக்குக்கான அறிக்கை, மக்கள் ஒன்றிணைந்து மாற்றத்தை உருவாக்குவதற்காகச் செயல்படும் உலகத்தை நமது சமுதாயத்தில் நம்மிடமும் நாம் காணவேண்டும் என்று கூறுகிறது. ரோட்டரி சங்க உறுப்பினர்கள் என்ற வகையில் ஆளுமையை மேம்படுத்துவதற்காகவும் நாம் உள்ளோம் என்பதை ஒவ்வொருவருக்கும் உணர்த்துவதற்கு இது ஒரு சரியான வாய்ப்பாகும்.

TR : ரோட்டரியின் புதிய இலக்கு குறித்த அறிக்கையை நீங்கள் குறிப்பிட்டீர்கள். தன்னை மிஞ்சிய சேவை (Service Above Self) என்ற குறிக்கோள் ஏற்கெனவே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் தலைவரது குறிக்கோளும் வெளியிடப்படுகிறது. இந் நிலையில் இலக்கு அறிக்கை எதற்குத் தேவை?

ராஸின்: ஒரு புதிய இலக்கு அறிக்கை என்பது நீண்ட காலத்திற்கு ஏற்றுக் கொண்டுள்ள இறுதியான மதிப்பீட்டை உலகுக்கே எடுத்துக் கூறுவதாகும். அது உலகை மாற்றுவதற்கான எங்களது குறிக்கோள் என்ன என்று ரோட்டரி அமைப்பினரும் மற்றவர்களும் புரிந்து கொள்ளச் செய்வதாகும். இந்த இலக்கு அறிக்கை ரோட்டரி அமைப்பினரிடமிருந்து உருவாக்கப்பட்டது. இதன் ஒவ்வொரு தொடரையும் அவர்கள்தான் பரிந்துரை செய்தார்கள். இதன் இறுதி முடிவு எதிர்காலத்துக்குத் தேவையான இலக்கு என்ன, பாதை என்ன என்பதைக் காட்டும்.

TR : மேற்கிந்தியத் தீவுகளில் (Caribbean) ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்கள் நல்ல உறவில் இயங்கு கின்றன அதற்கு என்ன காரணம்?

ராஸின்: நான் சார்ந்துள்ள சங்கமே சரியான உத ாரணம். ஒரு ரோட்டராக்டர் எங்கள் அமைப்புக்கு வந்தால், அவர் அன்று வேற்று மனிதர் அல்ல. எங்களது உறுப்பினர் என்றே கருதப்படுவார். அவரும் அந்த உணர்வைப் பெறுவார். இது மிக முக்கியமானது. அதைப் போல் ரோட்டராக்ட் சங்கக் கூட்டங்களுக்கு ரோட்டரி சங்கத்தினரும் அடிக்கடி சென்று பங்கேற்பார்கள். எனவே, எப்போதும் தொடர்பு இருந்துகொண்டியிருக்கும். கடந்த இரு ஆண்டுகளில் ரோட்டராக்ட் சங்கத்தினராக இருந்தவர்கள் ரோட்டரி சங்கத்தினராக 100 சதவீதம் மாறியுள்ளனர் என்று உறுதியாக நம்புகிறேன். எங்களைப் (ரோட்டரி சங்கம்) பற்றி அவர்கள் (ரோட்டராக்டர்கள்) நன்கு அறிந்திருப்பதால் எளிதில் இணைந்துவிடுகிறார்கள். இந்த உறவைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும்.

TR : ரோட்டராக்டரிடமிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

ராஸின்: ரோட்டராக்டர்கள் மிகவும் ஆற்றல் வாய்ந்தவர்கள். அவர்களுக்கு பேரார்வம் உண்டு நல்லதைச் செய்யவேண்டும்

என்ற ஆர்வம் உண்டு. ஒவ்வொருவருக்கும் மற்றவர்களுடன் சேர்ந்து பணியாற்ற விரும்புகிறார்கள். ஆனால், அவர்களே ஆற்றல் இல்லாத சமூக வலைதளங்களைப் பயன்படுத்தத் தெரியாத சங்கங்களுக்கு மாறுவதற்குச் சிரமப்படுகிறார்கள். ரோட்ட ராக்டர்கள் எதிர்கால ரொட்டேரியன் ஆவர். அவர்களுக்கு நாம் உதவ வேண்டும். நாற்பது வயது ஆகும்போது ரோட்டரி அமைப்பில் அவர்களால் என்ன செய்ய இயலும்? இதற்கெல்லாம் பதில் வேண்டும். அதையடுத்தே ரோட்டரி சங்கங்களை அமைக்க வேண்டும். அல்லது ரோட்டரி அமைப்புகளை உருவாக்க அவர்களுக்கு உதவ வேண்டும். அப்போது அவர்கள் செயல்பட முடியும்.

TR : ரோட்டரி தொடர் பில்லாத உங்களது வாழ்க்கை எப்படி

ராஸின்: வாவ்! உண்மையாகச் சொன்னால் அது ரொம்ப கஷ்டம். ரோட்டரி இயக்கத்திற்கு எனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் 37 ஆண்டுகளாகச் செலுத்திவருகிறேன். அது இல்லாமல் எனக்கு நண்பர்களே இல்லை. என்னால் எதையாவது செய்ய முடிந்தால், அது ரோட்டரி மூலமாகத் தான் முடியும். எனது முதல் பேச்சை எப்போதும் உதார ணமாகக் குறிப்பிடுகிறேன். நான் தயாரித்த உரையைத்தான் பேச்சாக நிகழ்த்துவேன். முதல் உரையைப் படிக்கும்போது, முதல் பக்கத்தின் கடைசி பகுதியை வாசித்தபோது, அடுத்த பக்கத்தைத் திருப்புவதற்குள் ஒரே நடுக்கமாக இருந்தது. ரோட்டரி சங்கத்தினர் பேச்சைத் தொடரும்படி கேட்டுக் கொண்டனர். அதையடுத்து மெல்ல மெல்ல பேச்சைத் தொடர்ந்தேன். இப்போது தன்னம்பிக்கையோடு பேசுகிறேன். இந்தத் திறமையை ரோட்டரி அமைப்பு இல்லாமல் என்னால் வளர்த்துக் கொண்டிருக்க முடியாது.

TR : உங்கள் பேச்சை எப்படி தொடங்குகிறீர்கள்?

ராஸின்: உங்களது பார்வை யாளர்கள் யார் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் புரிந்துகொள்வது மிக முக்கியம். ஏதாவது ஒரு வகையில், மிக்க நன்றி என்றோ, ஏதாவது குறிப்பிட்ட சம்பவத்தை நினைவுகூர்ந்தோ அவர்களுடனான தொடர்பை நிலைநாட்டவேண்டும். முடிந்த வரையில் ஒவ்வொரு பேச்சும் தனிப் பட்டதாக இருந்தால், அவர்களது தொடர்பை வலுப்படுத் திக் கொள்ள முடியும்.

TR : ரோட்டரியில் நீங்கள் எதையேனும் மாற்ற விரும்பினால் அது என்னவாக இருக்கும்?

ராஸின்: ரோட்டரியின் சட்ட விதிகள் குறித்த கவுன்சில் (CoL) எங்களது சவால்களில் ஒன்று. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை கூடுவோம். ரோட்டரியின் ஆளுகைக் கொள்கைகளில் மாற்றம் கொண்டுவருவது குறித்து விவாதிப்போம். ஆனால், சட்டத்தை வகுத்து நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு நான்கரை அல்லது ஐந்து ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. உலகம் வேகமாக மாறி வருகிறது. நம் அமைப்புக்குத் தேவையான முடிவுகளை விரைந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. நமது சட்டங்களுக்கான கவுன்சில் அதைப் புரிந்துகொண்டு, மாற்றத்தை மேற்கொள்ள வேண்டும். அதற்காக கவுன்சில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்கு, இணையவழியாக ஆண்டுதோறும் கூடுவது ஒரு வழியாகும். ஆனால், அது சவால். காரணம், ஆன்லைன் வழியாக கடும் விவாதத்தை மேற்கொள்வது கடினம். எனினும், ரோட்டரி அமைப்பு அதைச் செயல்படுத்தும் திறன் கொண்டது எனக் கருது கிறேன்.

TR : நீங்கள் கைவிட இயலாத மரபு?

ராஸின்:எங்களது 4-வழி சோதனைகளை எப்போதும் கைவிட மாட்டேன். தொழில் சேவைகளை எப்போதும் கைவிட மாட்டேன். வாரந்தோறும் சந்திக்கும் கூட்டம் போன்ற சில நடைமுறைகள் கைவிடப்படலாம். அத்தகைய சம்பிரதாயமான வாராந்திரக் கூட்டங் கள் இனியும் தேவையில்லை என நினைக்கிறேன். முக்கியமான பிரச்சி னைகள், நெறிகள், வகைப்பாடுகள் ஆகியவற்றைப் பார்த்தால், அவை நீடிக்க வேண்டியிருக்கிறது. நாம் யார், எதை நம்மை வித்தியாசப் படுத்துகிறது ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். அத்தகைய கோட்பாடுகளை மேம்படுத்த வேண்டும்.■

நாக்பூர் டௌன் டவுன் ரோட்டரி சங்கம்: இரு பசுமையான நினைவுகள்

ரஷீதா பகத்

ஒரு ரோட்டரி சங்க உறுப்பினர் சமூகத்துக்குப் பணியாற்றுவதில் எப்படிப்பட்ட ஆர்வம் கொண்டிருக்கிறார். இதோ ஓர் உதாரணம். தான் வசிக்கும் பகுதியின் மக்களின் வாழ்க்கையையே மாற்றுவதற்காக அவர் ஆற்றிய பணிதான் இந்தக் கட்டுரை.

பிரதிக்ஷா மாயி என்ற அந்தப் பெண் D 3030ன் நாக்பூர் டௌன் டவுன் உறுப்பினர். அங்கூர் சீட்ஸ் என்ற நிறுவனத்தின் பொது மேலாளராகவும் அவர் இருக்கிறார். அவர் தனது ரோட்டரி சங்கம் அமைந்துள்ள மகாராஷ்டிர மாநிலத் தின் விதர்பா பகுதியில் உள்ள விவசாயிகளின் நிலையைப் பார்த்து வேதனைப்பட்டார்.

விதர்பா விவசாயிகளின் நிலை அடிக்கடி ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாக வருவதுண்டு. வறட்சி போதாதென்று, இந்த ஆண்டு இளஞ்சி வப்பு அந்துப்பூச்சி (Pink bollworm) என்ற ஒருவகைப் பூச்சி பருத்திப் பயிரை நாசமாக்கி விட்டது. பருத்திதான் அந்தப் பகுதியின் மிக முக்கியமான வாழ்வாதாரம்.

இந்தப் பூச்சித் தொல்லையைத் தடுக்க விதர்பா பகுதியின் பல விவ சாயிகள் பூச்சிகொல்லி மருந்தினை ஏராளமாகப் பயன்படுத்தினர். ரசாயன மருந்துகளை அளவுக்கு அதிகமாகப் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காமல் தெளிந்ததால் பல விவ சாயிகள் ரசாயனத்தினால் பாதிக்கப் பட்டு உயிரிழந்துவிட்டனர். இது அரசியலில் பிரச்சினையைக் கிளப்பிவிட்டது என்றார் பிரதிக்ஷா.

இவர் விவசாயப் பொருட்கள் வணிகத்தில் ஈடுபடுவதால், விவ சாயிகள் தொடர்பாக ஏதாவது சேவைத் திட்டம் மேற்கொள்ளலாம் என்று நினைத்தார். அதன்படி ரசாயன பூச்சிகொல்லி மருந்துகளைத் தெளிக்கும்போது, பாதிப்பு நேராமல் இருக்க விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பயிற்சி அளிப்பது, முன் னெச்சரிக்கை நடவடிக்கையை அவர்கள் மேற்கொள்வது ஆகியவை குறித்த பயிற்சியை மேற்கொள்வதற்காக தனது நிறுவனத் தின் மேலிடத்தின் அனுமதியையும் பெற்றார்.

எங்களது சங்கத் தலைவர் விஜய் தாக்கரே, செயலாளர் டாக்டர் ரிஷிகேஷ் மாயி ஆகியோர் இதற்கு இசைவு தெரிவித்தனர். மூவரும் சேர்ந்து இதற்கான திட்டத்தை வகுத்தோம். எங்கள் சங்கம் நாக்பூருக்கு 35 கி.மீ. தொலைவில் கும்தாலா என்ற கிராமத்தைத் தத்து எடுத்துள்ளது. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளிடையே ரசாயன பூச்சிகொல்லியினால் ஏற்படும் தீங்கு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி னோம் என்றார் பிரதிக்ஷா.

நாக்பூர் டௌன் டவுன் உறுப்பினர்கள் விவசாயப் பெருமக்களுடன்.

அந்தக் கிராமத்தின் விவசாயிகளில் 90 சதவீதம் பேர் பருத்திப் பயிர் விவசாயத்தைத்தான் மேற்கொள்கிறார்கள். அது தவிர மற்றவர்கள் மிளகாய்ப் பயிர் விளைவிக்கிறார்கள். விவசாயக் குடும்பங்களில் பெண்களுக்குப் பயிற்சி அளிப்பதில் கூடுதலான அக்கறை எடுத்துக் கொண்டோம். ஆண்களுடன் விவசாயம் செய்வதால், அவர்களுக்குக் கூடுதல் கவனம் தேவை. சிலர் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் என்பதால், அவர்கள்தான் பூச்சி கொல்லி மருந்துகளைப் பயிரின் மீது தெளிக்கிறார்கள் என்று பிரதிக்ஷா கூறினார்.

கும்தாலா கிராமம் மற்றும் அருகில் உள்ள பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இதற்கு, மும்பையில் உள்ள இந்திய பருத்தி மேம்பாட்டு சங்கமும் (Indian Society for Cotton Improvement) அங்க்கூர் சீட்ஸ் நிறு வனமும் ஏற்பாடு செய்தன. நாக்பூர் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் எச்.எல். சாவல், டாக்டர் சுபாஷ் பொதுகே ஆகியோர் நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டனர். அவர்கள், ரசாயன பூச்சிகொல்லி மருந்துகளைப் பயன்படுத்தும்போது சட்டப்பூர்வமாக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்குவதற்காக அவர்கள் அழைக்கப்பட்டனர். அத்துடன், உயிரி ரசாயனங்களைப் பயன்படுத்தும்போது, சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு நேராதது குறித்தும் விவரித்தனர்.

ரசாயன பூச்சிகொல்லி மருந்துகளைத் தெளிக்கும்போது, என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து அங்க்கூர் சீட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த வல்லுநர்கள் செயல் விளக்கம் அளித்தனர். அத்துடன் அங்கிருந்த சில விவசாயிகளுக்கு பாதுகாப்பு உபகரணங்கள், கையுறை, தொப்பி, கண்களுக்குப் பாதுகாப்புக் கண்ணாடி, முகமூடி ஆகியவை வழங்கப்பட்டன.

தொட்டியிலிருந்து தட்டுக்கு

இச்சங்கம் இன்னொரு புதுமையான திட்டத்தையும் நிறைவேற்றியிருக்கிறது. ரோட்டரி போர்டில் உறுப்பினராகவும் டௌன்டவுன் பஸ் (Downtown Buzz) என்ற ரோட்டரியின் மாத இதழின் ஆசிரியராகவும் உள்ள பிரதிக்ஷா எடுத்துக் கொண்ட முயற்சியில் உருவானது தொட்டியிலிருந்து தட்டுக்கு (Pot to Plate) என்ற திட்டம். இந்த எளிமையான திட்டம் ரசாயன பூச்சிகொல்லி மருந்துகளால் பாதிக்கப்படாத இயற்கை உற்பத்திப் பொருட்களின் முக்கியத்துவத்தை ரோட்டரி அமைப்பினருக்கு அறிவுறுத்துவதற்கானது. தங்களுக்குத் தேவையான காய்கறி, கீரைகளைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்வது குறித்தும் விளக்குவதற்காக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தங்களது வீடுகளின் மொட்டை மாடிகளிலோ, தோட்டப் பகுதிகளிலோ சிறிய சிறிய தொட்டிகளில் காய்கறிச் செடிகளை எப்படி வளர்ப்பது என்று ரோட்டரி உறுப்பினர்களுக்கு வழி காட்டுதல் அளிக்கப்பட்டது.

இந்த ஆரோக்கியமான, காய்கறி உணவைச் சாப்பிடுவதற்காக மட்டுமின்றி, சுற்றுச்சூழலையும் பாதுகாக்க வேண்டியுள்ளது என்றார். அவர் ஆசிரியராக இருக்கும் டௌன்டவுன் (Downtown Buzz) ஜூன் மாத இதழுடன் சிறு சிறு பாக்கெட்டுகளில் தக்காளி, மிளகாய், கத்திரிக்காய், பீன்ஸ், காராமணி போன்ற விதைகளைப் போட்டு இலவசமாக விநியோகிக்கச் செய்தார். அவை ரோட்டரி சங்கத்தின் 100 உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி, மாவட்ட அலுவலர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

அப்போதுதான் உறுப்பினர்கள் இதழில் ரோட்டரி உறுப்பினர் சைஷ் கஷிகர் எழுதிய கட்டுரையையும் படித்து எப்படி காய்கறி விதைகளைச் சிறு தொட்டிகளில் வளர்க்கலாம் என்பதை அறிந்து கொண்டனர்.

பசலைக் கீரை, கொத்துமல்லி, வெந்தயக் கீரை போன்றவற்றை மாடித் தோட்டத்தில் வளர்த்தால், வீடே பச்சைப் பசேல் என்று பசுமையாகக் காட்சி தரும். அத்துடன் ஆரோக்கியமான இயற்கை காய்கறிகளிலிருந்து உணவு தயாரித்து உண்டு வாழலாம் என்றார்.

எதிர்பார்த்தபடியே ரோட்டரி இயக்கத்தினரும் அவர்களது குழந்தைகளும் இவ்வாறு விதைகளை விதைத்து செடி வளர்ப்பதில் ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்றனர். அதன் மூலம் நல்ல பலனையும் அவர்கள் அடைகிறார்கள்.

இதையடுத்து தொட்டியிலிருந்து தட்டுக்கு திட்டம் விரைவாகப் பிரபலமடைந்துவிட்டது. அதையொட்டிய புகைப்படங்களை ரோட்டரி சங்கத்தினர் தங்களுக்குள் பரிமாறிக் கொண்டனர். தங்கள் வீட்டுத் தோட்டத்தில் போட்ட விதையில் முதல் முதலாகச் செடி முளைத்து, தக்காளியும் மிளகாயும் காய்த்ததைப் பார்த்து குதூகலமடைந்த உணர்வையும் பகிர்ந்து கொண்டனர்.

அண்மையில் நடந்த மாவட்ட மாநாட்டில் இந்த தொட்டியிலிருந்து தட்டுக்கு... திட்டத்தை மாவட்ட ஆளுநர் K. சுந்தரராஜனும் பல்வேறு ரோட்டரிகளின் அமைப்பினரும் பாராட்டினர் என்று பிரதிக்ஷா கூறினார்.

TORONTO 2018

Rotary

ROTARY: MAKING A DIFFERENCE

Join the Traditional South Asian Reception

RI Convention, Toronto

Invite your global partners who support your service projects.
Bring your Rotary friends to show how Rotary works globally.
Opportunity to meet all the world leaders of Rotary.

Venue:
The Ritz-Carlton Hotel
Ball Room, 181, Wellington Street West, Toronto,
ON M5V 3G7, Canada. Tel: +1 416-585-2500

We cordially invite
the Rotary family of South Asia
to a traditional reception
on Saturday, June 23rd, 2018
at The Ritz-Carlton Hotel
between 5.00 pm - 7.00 pm

RID C. Basker
& Malathi Basker

Chairman - PDG R. Theenachandran
& Vasanthi Theenachandran

Registration Fee: INR 5,000 / US $ 75 per person

Payment can be made by cheque payable at par or DD favouring
R. THEENACHANDRAN payable at MADURAI, TAMIL NADU and send to:

PDG R. Theenachandran, Chairman - South Asian Reception
Devi House, 281-4, Sivagangai Main Road, Gomathipuram, Madurai - 625020 Tamil Nadu, India.
Tel: +91 452 4370027, Mob: +91 94430 53301 E-mail: theena3000@gmail.com

District Wise TRF Contributions as on February 2018

(in US Dollars)

District Number	APF	PolioPlus	Other Restricted	Endowment Fund	Total Contributions	EREY Donors (in numbers)	EREY %
India							
2981	24,995	1,215	0	0	26,211	147	3.4%
2982	44,158	226	2,725	0	47,109	208	7.7%
3000	38,178	7,159	88,541	0	133,878	1,822	36.0%
3011	69,639	414	75,106	0	145,159	185	6.1%
3012	38,482	6,693	46,590	3,016	94,780	213	6.1%
3020	27,796	21,542	49,950	42,478	141,766	76	1.8%
3030	923	22,724	1,050	0	24,697	3	0.1%
3040	6,163	0	36,518	0	42,681	30	1.4%
3053	6,252	78	22,129	0	28,459	19	0.6%
3054	3,500	203	215,150	0	218,853	13	0.2%
3060	57,809	740	30,206	18,000	106,755	550	14.4%
3070	32,200	148	25,793	789	58,931	165	5.6%
3080	101,888	13,742	15,578	92	131,300	165	5.1%
3090	508	0	2,500	0	3,008	2	0.1%
3100*	8,419	0	0	0	8,419	41	2.6%
3110	63,658	2,848	60,631	0	127,136	157	4.1%
3120	80,667	508	50,000	0	131,175	110	3.8%
3131	256,142	(3,900)	257,521	66,297	576,059	804	15.8%
3132	46,925	1,106	7,875	16,000	71,906	136	3.1%
3141	459,590	17,634	571,789	33,785	1,082,798	877	17.2%
3142	218,411	3,053	350	(1,000)	220,814	466	17.3%
3150	51,297	12,458	9,050	62,000	134,805	251	7.0%
3160	105,341	1,000	0	0	106,341	148	6.3%
3170	23,015	7,789	17,707	0	48,511	287	5.4%
3181	55,469	637	0	78	56,184	363	12.0%
3182	46,501	0	20,843	0	67,345	425	13.5%
3190	101,489	15,925	37,145	16	154,575	72	1.4%
3201	111,432	7,991	163,642	15	283,081	150	2.9%
3202	24,501	3,719	0	1,016	29,235	82	1.7%
3211	72,144	0	0	43,846	115,991	83	1.9%
3212	221,545	34,472	32,500	1,000	289,517	420	11.4%
3231	82,490	1,400	121,250	45,914	251,054	75	3.0%
3232	117,187	21,310	89,351	600	228,448	184	5.0%
3240	68,277	342	0	8,367	76,986	257	8.8%
3250	48,537	100	0	10,000	58,637	172	4.9%
3261	23,769	100	0	0	23,869	90	3.8%
3262	71,982	150	0	0	72,132	248	7.5%
3291	51,139	25,075	58,789	6,202	141,205	48	1.3%
India Total	**2,862,417**	**228,600**	**2,110,277**	**358,512**	**5,559,805**	**9,544**	**7.0%**
3220 **Sri Lanka**	101,553	10,293	6,940	1,217	120,004	437	22.9%
3271 **Pakistan**	33,101	57,410	1,050	0	91,561	79	5.5%
3272 **Pakistan**	15,977	1,523	0	1,000	18,500	50	1.8%
3281 **Bangladesh**	361,546	13,830	208,628	85,037	669,041	549	9.7%
3282 **Bangladesh**	84,478	1,766	0	1,000	87,243	361	9.6%
3292 **Nepal**	117,125	20,239	245,713	0	383,077	562	12.8%
South Asia Total	**3,576,195**	**333,661**	**2,572,609**	**446,766**	6,929,231	**11,582**	**7.0%**
World Total	**75,851,189**	**23,776,338**	**10,625,332**	**16,142,661**	**126,395,520**		

** Non-districted*

Source: RI South Asia Office

ரோட்டரியில் கார்ப்பரேட் உறுப்பினர் திட்டம்?

ரஷீதா பகத்

சில நாடுகளின் ரோட்டரி சங்கங்களின் முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக அமைந்தால், கார்ப்பரேட் நிறுவனங்களை உறுப்பினர் ஆக்கும் முறைக்குக் கதவு திறந்துவிடப்படும் என்று ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் C. பாஸ்கர் தெரிவித்தார். புதிதாகப் பொறுப்பேற்கும் மாவட்ட ரோட்டரி ஆளுநர்களுக்காக ஹைதராபாதில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற திஷா பயிற்சியின்போது பேசிய அவர் இதைத் தெரிவித்தார்.

உலகளாவிய உறுப்பினர் மாதிரித் திட்டம் குறித்து ரோட்டரி இன்டர்நேஷனல் போர்டு ஆராய்ந்து வருகிறது. எல்லாம் சுமுகமாக நடைபெற்றால், வரும் ஜூலை 1ஆம் தேதி முதல் கார்ப்பரேட் உறுப்பினர் முறை நடைமுறைக்கு வரும் என்றார்.

ஹைதராபாத்தில் திஷா பயிற்சி நிகழ்ச்சியில் DGEக்கள்.

மிகச் சரியாக நடத்தப்பட்ட இந்தப் பயிற்சிக்கு ரோட்டரி முன்னாள் மாவட்ட ஆளுநர் சாம் படிபன்ட்லா தலைமை வகித்தார். 180 பேர் கலந்துகொண்டனர். ரோட்டரி உறுப்பினர்களும் மாவட்டத் தலைவர்களும் தரமான பேச்சினை நிகழ்த்தினர் என்பது குறிப்பிடத் தக்கது. இது ரோட்டரி சங்கங்களை வலிமையோடும் துடிப்போடும் இயங்க வழிவகுத்தது.

மாவட்ட ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் மட்டுமின்றி ரோட்டரி ஒருங்கிணைப்பாளர்கள், ரோட்டரி நிறுவனத்தின் மண்டலத் தலைவர்கள், ரோட்டரி மக்கள் ஒருங்கிணைப்பாளர்கள், நிறுவன வெகுமதி ஆலோசகர், இலங்கை, நேபாளம் உள்பட 39 மாவட்டங்களிலிருந்தும் வந்துள்ள மாவட்டத் தலைவர்கள் இதில் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கு ரோட்டரி இன்டர்நேஷனல் தெற்காசிய அலுவலகத்தின் (RISAO) பிரதிநிதிகளாக அதன் தலைவர் ராஜீவ் ரஞ்சனுடன் சஞ்சய் பார்மர், ஜதிந்தர் சிங் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். அமெரிக்கா இவான்ஸ்டன் நகரைச் சேர்ந்த நயீஷ் ஷா ரோட்டரி குளோபல் பரிசுகள் குறித்து விவரித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய இயக்குநர் பாஸ்கர், இந்தியாவில் ரோட்டரி சங்கம் குறிப்பிடத் தக்க அளவு வளர்ச்சி பெற்றுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் நாம் கண்டுள்ள வளர்ச்சி உலகையே வியக்கச் செய்துள்ளது. தி ரோட்டரி நிறுவனத்திற்கு (TRF) கொடையளிப்பதில் நாம் இரண்டாவது இடத்தை வகிப்பதாலும், நமது மண்டலப் பகுதிகளில் வியக்கத் தக்க திட்டங் களைச் செயல்படுத்துவதாலும் தற்போது ஒட்டுமொத்த ரோட்டரி உலகமும் நம்மை மதிக்கிறது. இருந்தாலும், இது போதாது. காரணம், நம் நாட்டில் எதிர்கொள்ள ஏராளமான சவால்களும் சிக்கல்களும் உள்ளன. புதிய நடைமுறைகளை அமைக்க வேண்டியிருக்கிறது. புதிய இலக்குகளை உறுப்பினர்கள் துணையுடனோ, ரோட்டரி நிறுவனத்தின் உதவியுடனோ நிர்ணயிக்கும்போது, அது நடைமுறைக்கு உரியதாகவும் அடையக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

முன்பெல்லாம் ரோட்டரி இன்டர்நேஷனல் போர்டில் மிகப் பெரிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதாக உறுதியளித்தார்கள். அப்போதெல்லாம் அந்த இலக்குகளில் 60 சதவீதம் மட்டுமே நிறைவேற்ற முடிந்தது. எனவே, இதில் பின் தங்கியிருக்காமல், நடைமுறைக்குச் சாத்தியமாகும் இலக்குகளையே வகுக்கும்படி அறிவுறுத்துகிறேன் என்றார் பாஸ்கர்.

உங்கள் சங்கங்களுக்குச் சேவை புரியுங்கள்

பயிற்சி நிகழ்ச்சி இரு தரப்பு விவாதங்களுடன் நடைபெற்றது. பல்வேறு குழுக்களாகப் பிரிந்து விவாதங்கள் நிகழ்த்தப்பட்டன.

மாவட்ட அமைப்புகள் ரோட்டரி சங்கங்களுக்கு உதவுவதற்காகவே இயங்குகின்றன என்பதை மாவட்ட ஆளுநர்களாகத் தேர்வானவர்கள் மனத்தில் கொள்ள வேண்டும். ரோட்டரி அமைப்புகளின் ஒட்டுமொத்த செயல்பாடுகளும் ரோட்டரி சங்கங்களுக்கு எப்படி உதவுவது, பலப்படுத்துவது என்ற நோக்கத்திலேயே இருக்கவேண்டும். ஆனால், நமது மண்டலங்களில் அதற்கு மாறாகவே நடக்கிறது. ஆளுநர்களும், மாவட்டங்களும் ஒருவருக்கு ஒருவர் உதவாமல், தனித்தனியாகவோ போட்டியைப் போலவோ நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். ரோட்டரி சங்கங்கள் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும், TRF-யிடமிருந்து நிதி பெறுவதற்கும் மாவட்ட ஆளுநர் துணைபுரிய குழுவை அமைக்க வேண்டும். ஆனால், அப்படி உண்மையாகவே நடக்கிறதா? நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள் என்று கேள்வி எழுப்பினார் பாஸ்கர்.

பணியில் இப்படி ஒரு சோர்வு இருக்கும் என்று கடந்த ஆண்டு நான்

RID C. *பாஸ்கர், திஷா சந்திப்புத் தலைவர் சாம் படிபன்ட்லா மற்றும்* RPIC *ராஜா மைக்கெல்.*

நினைக்கவில்லை. ஆனால், கடந்த சில மாதத்தில் இப்படி ஒரு நிலையை உணர்ந்தேன். நாம் எப்போதும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். எனவே, மாவட்ட ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக் கப்படுவோர் அந்தந்த மாவட்ட ரோட்டரி கூட்டங்களிலும், இதர பயிற்சி நிகழ்வுகளிலும் தலைவர்கள், செயலர்களுக்குப் பயிற்சி அளிப்பது தான் தங்களது பணி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மாவட்ட ஆளுநர்களாகத் தெரிவுபெறுவோர் மாவட்டந்தோறும் பயிற்சிகள் நடப்பதை உறுதி செய்ய வேண்டும். சங்க அலுவலர்களுக்காகத்தானே ஒழிய எல்லோருக்கும் அல்ல என்று பாஸ்கர் வலியுறுத்தினார்.

சங்கங்கள் சுயேச்சையானவை

இயக்குநர் பாஸ்கர் மேலும் பேசு கையில், ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் சுதந்திரமாக இயங்கக் கூடியவை என்பதை மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் புரிந்துகொள்ள வேண்டும். ஏதாவது ஒரு சில ரோட்டேரியன்கள் போதிய அளவு இயங்காவிட்டாலோ, சந்தேகத் துக்குரிய செயல்களில் ஈடுபட்டாலோ அவர்களை ரோட்டரி சங்கத்திலிருந்து நீக்குவதற்கு ரோட்டரி சங்கத் தலைவர்களுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. மாவட்ட ஆளுநர்களுக்கு அல்ல. காரணம் ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் நமது சட்டம், விதிமுறைகளின் படி தன்னிச்சையாக இயங்கக் கூடியது. புதிதாகப் பொறுப்பேற்கும் மாவட்ட ஆளுநர்கள் இது குறித்து தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப் படுவோருக்கான பயிற்சிக் கருத் தரங்கில் விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவர்களது சட்ட விதிகளை எப்படி மாற்றியமைத்துக் கொள்வது என்றும் அறிவுறுத்தவேண்டும் என்று கூறினார்.

ரோட்டரி மாவட்ட அமைப்புகளில் குறைந்தபட்சம் 20 பேராவது உறுப் பினர்களாக இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று கூறிய பாஸ்கர், 2019ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி நமது மண்டலத்தில் எந்த சங்கத்திலும் 20க்குக் குறைவான உறுப்பினர்கள் இல்லை என்று உறுதி அளிக்கவேண்டும். 20க்கும் குறைவானோர் இருக்கும் சங்கங்களை இணைத்துவிடவேண்டும் என்றார்.

அப்போது கூடியிருந்தவர்கள் உறுதியான குரலை எழுப்பினர். அதையடுத்துப் பேசிய பாஸ்கர், நான் செயலூக்கம் கொண்டவன். எதையும் சுலபமாக மறந்துவிடு வதில்லை. தொடர்செயலை மேற் கொள்வேன். மாவட்ட உறுப்பினர்கள் தலைவர்கள் 100 டாலர் TRF க்கு அளிக்க வேண்டும் என்று அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட குலாமிடம் (வாஹன்வதி) நான் உறுதியளித்திருக்கிறேன். குலாம் முன்பு 1,000 டாலர் தரவேண்டும் என்று கேட்டிருந்தார். ஆனால், நான்தான் அதை 100 டாலராகக் குறைத்தேன். இங்கே ஹிட்லர் போலச் செயல்படுவது நான் மட்டுமல்ல என்றார் பாஸ்கர்.

DGEக்கள் தங்கள் மாவட்ட தலைமைக் குழுக்களுக்குப் பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று பாஸ்கர் கேட்டுக் கொண்டார். ரோட்டரி அமைப்பை விட்டு ஏன் விலகுகிறார்கள் என்று

சங்கங்கள்தான் தங்களது இலக்குகளை அறிவித்துள்ளன. ஜூலை மாதத்துக்குள் ஒவ்வொரு சங்கமும் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

அத்துடன், ரோட்டரியின் நோக்கம் நலிந்தோர்க்குத் தொண்டு புரிவதே. எனவே, சமுதாயத்துக்குத் தேவையான திட்டங்களைச் செயல்படுத் துங்கள். TRF ரோட்டரியின் மாவட்ட வளர்ச்சி நிதியாக (DDF) 5.2 கோடி டாலர் வைத் திருக்கிறது. அதை மாவட்ட ரோட்டரி நிறுவனக் கமிட்டியின் (DRFC) மூலமாக பயனுள்ள வகையில் செலவழியுங்கள். பல சங்கங்கள் TRFக்கு எதையும் தரவில்லை. இதை ஏற்றுக் கொள்ள முடியாது. உங்களது மாவட்டத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தபட்சம் 100 டாலர் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள். அப்படியாவது 26.5 டாலர் கொடுப்பார்கள். அது மிகவும் குறைவாக இருக்கும் என்றார் பாஸ்கர்.

ஐந்தாண்டு ஆய்வு நடத்தப் பட்டது. அது அவர்களிடம் பகிர்ந்து கொள்ளப்படும். அது குறித்து தொடர் நடவடிக்கை மாவட்ட உறுப்பினர் தலைமைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

'எனது ரோட்டரி' என்ற நிகழ்ச்சியில் பங்கேற்பது கட்டாய மாகும் என்று கூறிய அவர், 'ரோட்டரி சென்ட்ரல்' அமைப்பில் 30 சதவீதம்

TRFன் முன்னுரிமைகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர் வாஹன்வதி மாநாட்டில் பேசியபோது, DGEக்கள் போலியோ இல்லாத உலகை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

மாவட்டத்துக்கு வெளியே பயிற்சித் திட்டம்

மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர், மாவட்ட தலைவர்கள் ஆகியோருக்கான திஷா பயிற்சி நிகழ்ச்சியில், ரோட்டரி இன்டர் நேஷனல் இயக்குநர் C. பாஸ்கர் மாவட்ட அளவிலான பயிற்சிக்கான விதி, வழிகாட்டு நெறிகளை விவரித்தார்.

DGE-க்களுக்கு சங்கத் தலைவர் மற்றும் செயலாளராகத் தேர்வுப் பயிற்சி கருத்தரங்குகள் மிக முக்கியமானவை, ரோட்டரி சங்கங்கள் சரியாகச் செயல்பட்டால்தான் நீங்கள் நிர்ணயித்த இலக்கு களை அடைய முடியும். பயிற்சி நிகழ்வுகளை கவனத்துடன் மேற்கொள்வதுடன், வேறு எதுவும் இந்தப் பயிற்சியை நீர்த்துப் போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். சிலர் இந்தப் பயிற்சியை வெளிநாடுகளுக்கும் எடுத்துச் செல்ல முயன்றனர். அதை நான் தடுத்துவிட்டேன். அடுத்த ஆண்டு உங்கள் பயிற்சியை வெளி மாவட்டத்திற்கு எடுத்துச் சென்று நடத்துவதற்கும் அனுமதி பெற்றாக வேண்டும் என்றார்.

இந்தப் பயிற்சித் திட்டத்தை நடத்துவது பெரிய செலவாகிறது என்று இந்தியாவிலிருந்து ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்புக்குப் பல்வேறு புகார்கள் வந்துள்ளன. வெளிநாட்டுப் பயணத்தில் எல்லோருக்கும் ஆசை இருப்பதை அறிவதாகக் கூறிய அவர், பயிற்சித் திட்டம் மிகவும் புனிதமான பணியாகும். அதில் பங்கேற்க எல்லா மாவட்டத் தலைமைகளும் அழைக்கப்பட வேண்டும்.

ரோட்டரி தலைவரின் கையேட்டை மாவட்ட ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் அந்தந்த மாநில மொழிகளிலும் தயாரித்து அச்சிட்டு, சங்கக் கூட்டங்களில் வழங்க வேண்டும். அப்போதுதான் சங்கக் கூட்டங்கள் முறையாக நடத்தப்படும் கடந்த ஆண்டு, எனது சொந்தச் செலவில் அவ்வாறு செய்தேன். இந்த ஆண்டு அதை நிறுத்திவிட்டேன். எனவே, இனிமேல் நீங்கள்தான் அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

கையேடுகள் பல்வேறு மாநில மொழிகளில் தயாரிக்கப்பட்டு சிடி, பென்டிரைவ், அல்லது இணையவழியாக ஒவ்வொரு மொழியிலும் அனுப்பப்படலாம். அதிலிருந்து அச்சிட்டுக் கொள்ளலாம். அச்சிட்ட பிரதிக்கு ரூ.30-40 வரை ஆகலாம். சங்கத்தின் கூட்டங்கள் 45 நிமிடத்துக்குள் நிறைவடைய வேண்டும். அது மட்டுமின்றி, மாவட்ட ஆளுநர்கள் சங்கங்களுக்கு விஜயம் செய்வதை எவ்வளவு சீக்கிரம் தொடங்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தொடங்கிவிடுங்கள். ரோட்டரி சங்கங்களின் பிரச்சினைகள் என்னென்ன என்று கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளையும் தெரிவிக்க இயலும். பொறுப்பேற்ற பின் 9 மாதங்களில் உங்களது விஜயங்களை நிறைவு செய்து விடுங்கள். எல்லாத் தகவல்களையும் மின்னஞ்சல் மூலமாகவே பரிமாறிக் கொள்ளுங்கள். அலுவல் பொறுப்பில் உள்ள நிர்வாகிகளுக்கு தனிப்பட்ட மின்னஞ்சல் இல்லாவிட்டால், அவர்களை பணியில் வைத்திருக்காதீர்கள் என்றார்.

ரோட்டரி சங்கங்கள் தொகை எவ்வளவு குறைவாக இருந்தாலும் அதைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தைத் தூண்டவேண்டும். கடந்த ஆண்டு TRFற்கு சர்வதேச அளவிலும் தெற்காசிய, இந்திய அளவிலும் பெரிய சாதனை ஆண்டாகும். அதிலும் முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி அறங்காவல் குழுத் தலைவராக இருந்த நிலையில், இந்தியாவில் உள்ள நமக்குப் பெருமையாகும்.

அறங்காவல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரான் பர்ட்டன் கடந்த ஆண்டு சாதனையின் அடிப்படையில், அடுத்த ஆண்டு 38 கோடி டாலர் என்ற இலக்கை நிர்ணயித்துள்ளார்.

வாகன்வதி பேகையில், உலகம் முழுதும் உள்ள குழந்தைகளுக்காக போலியோவை ஒழிப்பது மட்டுமின்றி, ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் உறுப்பினர்கள் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும். அடுத்து, எல்லாவற்றிலும் நமது திட்டங்களின் மதிப்பீட்டைக் கணக்கிடுவதுடன் அது நீடித்திருக்கச் செய்யவும் வேண்டும். மூன்றாவதாக இயக்குநர் பாஸ்கர் ஏற்கெனவே கூறியதுபோல் ரோட்டரியின் மாவட்ட வளர்ச்சி நிதியைப் (DDF) பயன்படுத்தி, சமூகத்துக்கு நல்ல பணியை ஆற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என்றார்.

சில மாவட்டங்களில் உள்ள நிதி அதிகமாக உள்ளது. நமது மண்டலத்தில் உள்ள பிற மாவட்டங்களில் திட்டங்களைச் செயல்படுவதற்குத் தேவையான அளவுக்கு நிதியைத் திரட்ட முடிவதில்லை. எனவே, ரோட்டரி மாவட்ட வளர்ச்சி நிதி பெற்றிருக்கும் மாவட்டங்கள் நிதி தேவைப்படும் ரோட்டரி மாவட்டங்களின் நலன்களையும் கவனிக்க வேண்டும். ரோட்டரி அமைப்பினர் தி ரோட்டரி நிறுவனத்திற்கு (TRF) நிதி அளித்துள்ளதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, அந்த நிதியைச் சேமிக்காதீர்கள். சமூகத்துக்குப் பயன்படுத்துங்கள். நான்காவது முன்னுரிமை, நிரந்தர நிதியத்தை உருவாக்க வேண்டும். அறக்கட்டளை நிதியத்துக்குத் தூண்டுகோலாகவும் இருக்க வேண்டும். நிரந்தர நிதியம் ரோட்டரியின் எதிர்காலத் தேவைக்கான நிதியாகும். தற்போது 2.5 கோடி டாலராக உள்ள நிதியை 2025 ஆம் ஆண்டில் 200 கோடி டாலராக உயர்த்துவது என்பது நமது இலக்கு. அதில் கிடைக்க உள்ள வட்டித் தொகையை நினைத்துப் பாருங்கள் என்றார்.

பழைய ரொட்டேரியன்களுடன் தொடர்பில் இருங்கள். சரியான நேரத்தில் என்னைப் போல அவர்களை ரோட்டரியில் ஈடுபடச் செய்யுங்கள். 1978ம் ஆண்டு நான் குரூப் ஸ்டடி எக்ஸ்சேஞ்ச் குழுவில் (GSE) இடம்பெற்றிருந்தேன். ரோட்டரியில் இணையும்படி நான் 1979ம் ஆண்டு அழைக்கப்பட்டேன். GSE குழு உறுப்பினராக இருந்து ரோட்டரி மண்டல நிறுவன ஒருங்கிணைப்பாளர் (RRFC) குழுவில் இணைந்து, தற்போது TRFல் அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளேன். ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாம் ஒவ்வொருவரும் மனித சமுயாத்திற்கு வேலை செய்வதற்காக சிறந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

ரோட்டரி அமைப்பை நன்கொடையாளர் அடிப்படையைக் கொண்டதாக மாற்றி, சமூகப் பணிகளை விரிவுபடுத்த வேண்டும். சேரிட்டி நேவிகேட்டர் நிறுவனம் ஆரோக்கியமான நிதிநிலை, வெளிப்படைத் தன்மை ஆகிய இரு திறன்களுக்காக ரோட்டரி அமைப்புக்கு நான்கு நட்சத்திர அந்தஸ்தை அளித்துள்ளது. சேரிட்டி நேவிகேட்டர் என்ற அமைப்பு அமெரிக்காவில் 9000 அறக்கட்டளைகளை மதிப்பீடு செய்துள்ளது.

TRF 2017ஆம் ஆண்டில் நான்கு நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுள்ளது. இது இந்த நிலையைப் பெறுவது தொடர்ந்து 10ஆவது ஆண்டாகும். தன்னார்வத் தொண்டு

RISAO தலைவர் ராஜீவ் ரஞ்சன், RRFC அவினாஷ் போத்தார், RC ஷோக் குப்தா, EMGA அஷோக் பஞ்சவானி, RPIC ஆஷிஷ் தேசாய் மற்றும் RRFC விஜய் ஜலான்.

நிறுவனங்களுக்கான அட்டவணையிலேயே மேலிடத்தில் இருக்கிறது என்றார்.

ஜதீந்தர் சிங் ஆன்லைன் வழிகளைப் பயன்படுத்தி விரிவான விளக்கவுரை நிகழ்த்தினார். உறுப்பினர்களிடமிருந்து வசூலிப்பது குறித்த பட்டியல் எப்படித் தயாரிக்கப்படுகிறது என அவர் விளக்கினார். உரிய நேரத்தில் ரோட்டரி சங்கத் தலைவர்கள் செயல்படாவிட்டால் நீக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் பட்டியலில் நீடிக்கும். அதை மாற்ற இயலாது. அதனால், அவர்களிடமிருந்து பெறவேண்டியவை குறித்த விவரமும் நீடிக்கும்... என்றார்.

ரோட்டரி ஒருங்கிணைப்பாளர்கள் அசோக் குப்தா, ராஜேந்திர ராய், RRFCக்கள் விஜய் ஜலான், அவினாஷ் போத்தர், ரோட்டரி மக்கள் ஒருங்கிணைப்பாளர்கள் (RPICs) ஆஷிஷ் தேசாய், ராஜா மைக்கேல், அறக்கட்டளை மற்றும் பிரதான வெகுமதி ஆலோசகர் (EMGA) அசோக் பஞ்வானி ஆகியோர் மாவட்ட ஆளுநர்களிடம் ரோட்டரியின் அடுக்கு நிலையில் உள்ள ஒவ்வொரு அமைப்புகளின் தற்போதைய நிலை குறித்து சுருக்கமாக விளக்கி, இலக்குகள் குறித்தும் விவாதித்தனர்.

புதிய ஆளுநர்களையும் முதன்மைக் குழுவினரையும் வரவேற்று ஒருங்கிணைப்பதே சந்திப்பின் நோக்கம், என்று சாம் படிபண்ட்லா கூறினார். புதிய விஷயங்களை அறிந்து ஒருவருக்கு ஒருவர் ஊக்கப்படுத்திக் கொள்வது, அறங்காலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர், ரோட்டரி சங்கத்தினர், RRFCs, RPICs, EMGA, RISAO ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநருடன் விவாதிப்பது ஆகியவையே நோக்கமாகும்.

இதன் மூலம் கிடைத்த தகவல்களையும் ஆற்றலையும் மாவட்ட குழுக்களுடன் பகிர்ந்து கொள்வது சவாலாகும். இந்த முக்கிய இலக்கை திஷா மனத்தில் கொண்டிருக்கிறது. அதற்கு வகை செய்யும் விதத்தில் உரையாடவும் விவாதிக்கவும். அதற்கான பயனுள்ள, வழிகளைக் காணவும் வேண்டும். தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பயிற்க் கருத்தரங்குகள் போன்றவற்றை மாவட்ட அளவிலான நிகழ்ச்சிகளிலும், கூட்டங்களிலும் நடத்த வேண்டும் என்று முன்னாள் மாவட்ட ஆளுநர் சாம் படிபன்ட்லா கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மாவட்ட ஆளுநர் J.ஆப்ரகாம் பங்கேற்றோரை வரவேற்றார். போக்குவரத்து ஏற்பாடுகளை திஷா செயலாளர் TVR மூர்த்தி மேற்கொண்டார்.■

ஊழலைச் சகித்துக் கொள்ளவேண்டாம்

TRF அறங்காவலர் (தேர்வு) குலாம் வாஹன்வதி, RID C. பாஸ்கர் மற்றும் EMGA அஷோக் பஞ்ச்வானி.

திஷா பயிற்சி நிகழ்வில் அறங்காவலராகத் தெரிவு செய்யப்பட்ட குலாம் வாஹன்வதி பேசினார். ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த மிகச் சில பேர் இந்தியாவில் உள்ள சங்கத்தின் புகழுக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் ஊழல் காரியங்களைச் செய்கிறார்கள் என்று கவலை தெரிவித்தார்.

அறங்காவல் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரான் பர்ட்டன் அடுத்த ஆண்டு TRFக்கு 38 கோடி டாலர் நிதியைத் திரட்டுவது என்று இலக்கு நிர்ணயித்திருக்கிறார். இந்த இலக்கை அடைவதற்கு இந்தியாவின் பங்களிப்பு மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறிய அவர், TRF எப்போதும் நம்மிடம் (இந்தியா) நிறைய எதிர்பார்க்கிறது. அதற்கு இசைவு தெரிவித்துப் பதிலையும் கூறியிருக்கிறோம். நிதியுதவி செய்வதில் கடந்த ஆண்டு நாம் இரண்டாவது இடத்தில் இருந்தோம். இப்படி இருக்கும் நிலையில் ஏதோ ஒரு சிலர் மட்டும் நமது பெயருக்குக் களங்கம் கற்பிக்க எப்படி அனுமதிப்பது?

அமெரிக்கா சான்டியாகோவில் நடைபெற்ற RI கூட்டத்தில் மாவட்ட ஆளுநராகத் தேர்வு பெற்றோர் கலந்து கொண்ட கூட்டத்தில் ரோட்டரியின் மூத்த தலைவர்கள் முன்னாள் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர், TRF அறங்காவலருமான K.R. ரவீந்திரன், இயக்குநர் பாஸ்கர் அறங்காவலர் சுஷீல் குப்தா உள்ளிட்டோருடன் தானும் பேசியதாக வாஹன்வதி, கூறினார்.

அங்கு பரிமாறிக் கொள்ளப்பட்ட தகவல்கள் வருத்தமளித்தன. அது குறித்து என்னிடம் நீங்கள் பேசியதை அடுத்து, உங்களுக்கும் அது கவலை தருகிறது என்பதை அறிவேன். எத்தனை ரோட்டரி சங்கத்தினர் இப்படி ரோட்டரியின் புகழுக்குக் களங்கம் ஏற்படும் வகையில் செயல்படுகிறார்கள்? 20 பேரா? 30 பேரா? 40 பேரா?. அப்படியே 40 பேராகட்டும், இருந்தாலும், நம் நாட்டில் ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தம் 1.4 லட்சம் என்று இருக்கும்போது, இப்படிப்பட்ட பேர்வழிகளின் எண்ணிக்கை வெறும் 3.003 சதவீதம் தான்! நம்மை இழிவுபடுத்துவதற்கு இவர்களை அனுமதிக்கிறோம். நீங்கள் எல்லோரும் நாளைய தலைவர்கள். இந்திய TRFன் மீது சேற்றை வாரி இறைப்பதற்கு யாரையும் அனுமதிக்கக் கூடாது.

இதுபோன்ற விரும்பத்தகாத செயல்களை நாம் சகித்துக் கொள்ளக் கூடாது. அறக்கட்டளையினர் கேட்கிறார்கள் என்பதற்காக மட்டுமல்ல, ஆட்சேபகரமான இந்தச் செயல்களை நாம் எல்லோருமே சகித்துக் கொள்ள மாட்டோம் என்பதற்காகத்தான். இந்த விஷயத்தில் நமக்கு மட்டுமல்லாமல் நன்கொடையாளர்களுக்கும் கடமைப் பட்டவர்கள் நாம் என்றார் வாகன்வதி.

கெஜ்ஹா பள்ளியில் சுகாதார வசதிகள்

ஜெய்ஸ்ரீ

தில்லி அசோகா ரோட்டரி சங்கம் (D 3012), ஆஸ்திரேலியாவின் பாக்ஸ் ஹில் சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் (D 9810) ஆதரவுடன் உத்தரப் பிரதேசம் நொய்டா அருகில் உள்ள கெஜ்ஹா பள்ளியில் பழைய கழிவறைகளைப் புதுப்பித்ததுடன், புதிதாக சிலவற்றையும் கட்டித் தந்துள்ளது. அத்துடன், மாணவர்களின் சுகாதாராத்துக்காகக் கைகழுவும் வசதியையும் ஏற்படுத்தித் தந்துள்ளது. 30 ஆயிரம் டாலர் செலவிலான இந்த சுகாதாரத் திட்டம் தி ரோட்டரி ஃபவுண்டேஷன் உலகளாவிய நிதியத்தின் (TRF's global grant) கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவுடன் இணைந்து 11 அரசுப் பள்ளிகளில் சுகாதார வசதிகளை நவீனமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வேர்ல்டு விஷன் இந்தியா என்ற குழந்தைகளுக்கான தன்னார்வத் தொண்டு அமைப்பும் துணை புரிகிறது.

இந்தக் கட்டமைப்புக் கூடுதல் வசதித் திட்டத்தை மத்திய கலாசாரம், சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை இணையமைச்சர் முகேஷ் சர்மா தொடங்கிவைத்தார். யுனிசெப் (இந்தியா) அமைப்பின் நீர், சுகாதாரம், தூய்மை (WASH) திட்டத்தின் நிபுணர் பிரதிபா சிங் முன்னிலையில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் TRF அறங்காவலரும் WinS அமைப்பின் சுகாதாரப் பிரசார இயக்கக் கமிட்டியின் தலைவர் சுஷீல் குப்தா, WinS கமிட்டி உறுப்பினரும் முன்னாள் மாவட்ட ஆளுநருமான ரமேஷ் அகர்வால், ஆஸ்திரேலியா, பாக்ஸ் ஹில் சென்டிரல் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த மார்க் பல்லா, மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

மாற்றுத் திறனாளிகள் கழிவறைகளை எளிதாகப் பயன்படுத்துவதற்காக உதவும் வகையில் சாய்வுப் பாதை (ramps) அமைத்தும் பள்ளிக்கு இதர வசதிகளையும் ரோட்டரியினர்

WinS செய்திகள்

ரோட்டரி இந்தியா தேசிய வின்ஸ் அங்கீகாரக் கமிட்டி (Rotary India National WinS Recognition Committee), என்ற அமைப்பு TRF, RID C பாஸ்கர் மற்றும் WinS அமைப்பின் சுகாதாரப்பிரசார இயக்கக் கமிட்டியின் தலைவர் சுஷீல் குப்தாவுடன் கலந்து ஆலோசித்து அமைக்கப்பட்டுள்ளது. முன்பு அமைக்கப்பட்ட மாவட்ட அங்கீகாரக் கமிட்டிகளுக்கு மாற்றாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய அமைப்பு தகவல்களைச் எடுத்துச் செல்லவும் இலக்குகளை அடைவதில் ஆர்வம் காட்டும் சங்கங்களுக்குக்கு மேலும் உதவி புரியம். இந்த அமைப்பு 2020ம் ஆண்டு வரையில் செயல்படும். இந்த அமைப்பில் 12 ரொட்டேரியன்கள் இடம்பெற்றுள்ளனர். PDGs ரமண் அனேஜா, சர்ப்ஜீத் சிங், R. ரகுநாத், கணேஷ் G. பட், அர்ஜித் K. என்டோ, பிந்து சிங், ரமேஷ் அகர்வால், முன்னாள் தலைவர்கள் ஹேமந்த் ஜகதாப், பாலசுப்பிரமணியம் ஆகியோர் உள்ளனர். PDG சாம்ப சிவராவ் படிபண்ட்லா (D 3150) தலைவராகவும், ஏ.பி. மஹாபத்ரா (D 3262) து.தலைவராகவும், ரமேஷ் அகர்வால் (D 3054) செயலாளராகவும் பணிபுரிவர்.

இந்த அமைப்பில் பணிபுரிய இலக்கு நிர்ணயித்துள்ள 5 நாடுகளிலிருந்து 46 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் வின்ஸ் போட்டி மானிய உதவியின் முதல் கட்டப் பணிக்கு (Phase I of the WinS Competitive Grants) 13 பேரின் விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் 10 ஆயிரம் மதிப்பீட்டில் பல்வேறு சமுதாயத் தேவைகளை மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்வர்.

பள்ளிகளில் WASH திட்டத்திற்கான வழிகாட்டுக் குழு 6 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. அவற்றில் இரண்டாவது கட்டப் பணிக்கு இந்தியாவிலிருந்து D 3131 மற்றும் 3211 தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதற்கான நிதி ஒதுக்கீடு 1,50,000 முதல் 5,00,000 டாலர் வரை ஆகும்.

அமைத்துக் கொடுத்தனர். சிறுவர்களைக் கொண்டு மாதிரி நாடாளுமன்றம் (Bal Sansad) அமைக்கப்பட்டது. அந்த நாடாளுமன்றத்தில் சிறுவர்கள் சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை ஆகியவை குறித்தும், சக மாணவர்கள் அதைப் பழக்கப்படுத்திக் கொள்ளவும் உரிய பிரசாரத்தை மேற்கொள்ள வகை செய்யப்பட்டது. பிரசாரத் தூதுவர்களான இந்தப் பள்ளிச் சிறுவர்கள், தங்களது வீடுகளுக்கும் இத்தகவல்களை எடுத்துச் சென்று, திறந்தவெளிக் கழிப்பிடத்தைக் கைவிட்டு, கழிவறைகள் கட்டுவதற்கான தேவை குறித்து பெற்றோர்களுக்கு அறிவுறுத்த வகை செய்யப்பட்டது.

Wins *தலைவர் சுஷில் குப்தா, உறுப்பினர் ரமேஷ் அகர்வால் மற்றும் அமைச்சர் முக்கேஷ் சர்மா கெஜ்ஷா பள்ளியில் சுகாதார வசதிகளை துவக்கிவைக்கின்றனர்.*

பள்ளிக்குழந்தைகள் குழுவாக கை கழுவும் பழக்கத்தை செய்துகாட்டுகின்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய பள்ளி முதல்வர் ஹரியாலி ஸ்ரீவஸ்தவ், இந்நிகழ்ச்சியில் பங்கேற்று ஏராளமானோர் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டியது வியப்பாக இருந்தது. இதையொட்டி, பள்ளியில் அடுத்த மாணவர் சேர்க்கையின்போது, புதிதாக மாணவர்களைச் சேர்ப்பது குறித்து நிறைய பேர் விசாரித்தனர். ரோட்டரி சங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார். இதற்கான பயிற்சித் திட்டத்தில் ஆசிரியர்களும் பங்கேற்று, சிறுவர்களுக்கு அறிவுறித்தி கண்காணிக்கவும் வழி செய்யப்பட்டது.

ரோட்டரி சங்கத்தின் பணிகளைப் பாராட்டிய அறங்காவலர் குப்தா, சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை விஷயத்தில் பழக்கவழக்கத்தில் மாறுதல் ஏற்படுவதும், அது நீடித்து இருக்க வேண்டும் என்பதை தனக்குள்ள அக்கறை என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் மகேஷ் சர்மா, குழுவாகச் சென்று கைகழுவுதல் என்ற பயிற்சி முறை நல்ல நடைமுறையாகும் என்றும், அத்துடன், தேவையானபோது உடனுக்குடன் சரியான நேரத்தில் கைகழுவுவதை அவர்கள் வாடிக்கையாகவே கொள்வர் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த ரோட்டரி சங்கத்தின் முன் முயற்சிகள் பிற உள்ளூர் பள்ளிகளுக்கும் தூண் டுதலாக இருக்க வேண்டும். ரோட்டரி சங்கத்தின் உதவியை நாடி இது போன்ற நடவடிக்கைகளை அவர்களும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வடிவமைப்பு
L. குணசேகரன்

கலாம் அறிவியல் ஆய்வகம்

ரஷீதா பகத்

ரோட்டரி ஜல்னா மிட் டவுண் (D 3132) தலைவர் அனுஜ் கார்வா தில்லி விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தார். விமானநிலையத்தில் அவர் கண்ட ஒரு காட்சி அவரை இழுத்தது. அங்கு இந்திய விமானப் படை ஓர் உருவகப்படுத்தும் அமைப்பு (simulation kiosk) அமைத்திருந்தது. ஓர் விமானம் எப்படியெல்லாம் இயங்குகிறது என்பதை இளம் பயணிகள் அறிந்துகொள்வதற்காக மேசையில் வைக்கப்பட்டுள்ள இரு கம்ப்யூட்டர்கள், அதில்தான் விமான இயக்கத்தை நேரிலே பார்ப்பது போன்ற உருவகக் காட்சி காட்டப் படுகிறது. இப்படி ஒரு நேரடிக் காட்சி விளக்கம் ஊக்கமளிப்பது போல் இருந்தது. அதே நேரம் எனக்குள் பல சிந்தனைகளையும் அது கிளறிவிட்டது. நமது கல்வி முறையை எவையெல்லாம் பாதிக்கின்றன என்று சிந்தனை வந்தது என்று அவர் நினைவுகூர்ந்தார்.

தனியார் பள்ளிகளில் தங்களது மாணவர்களின் அறிவியல் ஆர்வத்து க்குத் தீனி போடும் வகையில் இது போன்ற அறிவியல் வசதிகளை ஏற்படுத்துவதற்கு இயலும். ஆனால், அரசுப் பள்ளிகளோ அடிப்படை கல்வியை அளிப்பதற்கே மிகுந்த சிரமத்துக்கு ஆளாகின்றன.

உடனே சில அரசுப் பள்ளிகளிலாவது இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற படிப்புகளைக் கற்பதிலாவது இத்தகைய வசதிகளை ஏற்படுத்தித் தருவது எப்படி என்பது குறித்து என் மனம் தீவிரமாக யோசித்துக் கொண்டே இருந்தது.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் A.P.J. அப்துல் கலாம் மற்றும் ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்தின் வழிகாட்டியாக இருந்த PRIP கல்யாண் பானர்ஜி ஆகியோர் அறிவியலில் காட்டிய ஆர்வத்தை அடுத்து ஏற்பட்ட தூண்டுதலால் ஜல்னா மிட் டவுண் ரோட்டரி சங்கம் மாணவர்களிடையில் அறிவியல் கல்வியைத் தொடர்வதற்குத் தூண்டுகோலாக அமையும் வகையில், அறிவியல் சார்ந்த உபகரணங்களின் மூலம் அறிவை விரிவு செய்யத் திட்டமிடப்பட்டது என்றார்.

அதன் விளைவாக டாக்டர் அப்துல் கலாம் பெயரில் ஆய்வகத்தை உருவாக்குவது என முடிவுசெய்யப் பட்டது. அதுதான் உருவக ஆய்வகம். எந்த இடத்திலிருந்தும் ஒரு இணையத் தொடர்புள்ள கணிப்பொறியின் மூலமாகவும் இந்த ஆய்வகத்துடன் காட்சி நிலையில் தொடர்புகொண்டு அறிவியல் சார்ந்த புதிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கலாம் கிட்ஸ் என்று பெயரிடப் பட்டுள்ள இந்த ஆய்வகம் டேனிஷ் நாட்டு கூட்டாண்மையுடன் உருவாக்கப் பட்டுள்ளது. இதில் எவ்வளவு மாணவர்கள் வேண்டுமானாலும்

ஜல்னா மிட்டவுன் தலைவர் அனுஜ் கார்வா PRIP கல்யாண் பானர்ஜீ மற்றும் DG வியாங்கடேஷ் சன்னா அவர்களுக்கு அறிவியல் ஆய்வகம் பற்றி விளக்கம் அளிக்கிறார்.

உறுப்பினர்களாகச் சேரலாம். அதற்கு மிக மிகக் குறைந்த சந்தாக் கட்டணமே வசூலிக்கப்படும்.

இந்த ஆய்வகம் பல விருதுகளைப் பெற்றிருக்கிறது என்றார் அனுப் கார்வா.

முதல் ஆய்வகத்தை ஜல்னாவில் உள்ள RHV ஆங்கிலப் பள்ளியில் ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் பானர்ஜி தொடக்கிவைத்தார். அவர் பேசுகையில், இளைய தலைமுறையினர் குறிப்பாக பள்ளிச் சிறுவர்கள் காட்டும் கணினியில் நுண்ணறிவு பெற்றுத் திகழ்வது வியப்பை அளிக்கிறது.

அதே சமயம் எங்களைப் போன்ற மூத்த தலைமுறையினர் தகவல் தொழில்நுட்பத்தைப் பார்க்கும்போது, மலைப்பாகவும் அச்சமாகவும் இருக்கிறது. எனக்கு ஏதாவது தகவல் வேண்டுமென்றாலோ, எதையாவது அறிந்துகொள்ள நினைத்தாலோ என் 11 வயது பேரனின் உதவியைத்தான் நாடுகிறேன். அவன் சில விநாடிகளில் கேட்டதைக் கொண்டு வந்துவிடுகிறான். இது வியப்பளிக்கிறது. இளைய தலைமுறையினரின் அறிவாற்றலையும் தகவல் தொழில்நுட்ப விழிப்பையும் பார்த்துப் பெருமைப்படுகிறேன்.

இளைய தலைமுறையில் தலைவர்கள் உருவாக்குவது குறித்து பதிலளித்த பானர்ஜி, இன்றைக்கு

PRIP *கல்யாண பானர்ஜீ ஆய்வக திறப்பு விழாவில்*

நீங்கள் பணம் படைத்தவராக இல்லாதது ஒரு பொருட்டே அல்ல. பல இளம் தலைமுறையினர் 22 வயது மட்டுமே இருந்தாலும் கோடீஸ் வரர்களாக இருக்கிறார்கள். ஜீன்ஸ், டீ ஷர்ட் அணிந்து கொண்டு, நான் சம்பாதிப்பதை விட 10 மடங்கு மேல் பணம் ஈட்டுகிறார்கள். அறிவாற்றல், நேர்மை, நாணயம், உழைப்பு ஆகியவற்றுடன் இணைந்து எல்லாவற்றையும் பெறுகிறார்கள்.

நேர்மை, நாணயம் ஆகியவற்றை வலியுறுத்திப் பேசிய பானர்ஜி, மகாத்மா காந்திஜியின் வாழ்க்கையில் அரிய சம்பம் ஒன்றைக் குறிப்பிட்டார்.

காந்திஜி நாக்பூர் சிறையில் இருந்தபோது, கஸ்தூர்பா அவரை தினமும் சந்திப்பார். ஒரு சமயம் சிறையில் பணியாளர்கள் வெளியே சென்றிருந்தனர். 20 நிமிடம் கழித்துத் திரும்பி வந்து பார்த்தபோது, காந்தியும் கஸ்தூர்பாவும் நீண்டநேரம் எதுவும் பேசாமல் கைகளை மட்டுமே பற்றியிருந்ததைக் கண்டனர்.

அவர்கள் வியப்படைந்து நின்றபோது மகாத்மா காந்திஜி, சிறைச்சாலை விதிகளின்படி காவலர்கள், ஊழியர்கள் இருக்கும் போதுதான் பேச வேண்டும். நீங்கள் இருவரும் வெளியே சென்று விட்டதால்,நாங்கள் பேசுவதை நிறுத்தி விட்டோம். நீங்கள் திரும்பி வந்த பிறகே பேசுவதற்குக் காத்திருந்தோம் என்றார்.

இந்தக் கதையைக் குறிப்பிட்ட பானர்ஜி, இதுதான் உண்மையான நேர்மை. ஆத்மாவிலிருந்து வெளிப் படுவதுதான் நேர்மை என்றார்.

திட்டத்தின் தலைவர், சங்கத்தைச் சேர்ந்த அனுப் பன்சால் பேசுகையில், இது ஏராளமானோருக்கு கணிப்பொறி சாதனத்தின் மூலம் பல விஞ்ஞானி களை நாளைக்கு உருவாக்கப் பெரிதும் உதவும் என்றார்.

மேலும், ஜல்னா பகுதியில் உள்ள பல அரசுப் பள்ளிகளில் இது போல் இணைய வசதியுடன் கூடிய போதிய கணிப்பொறிகளைத் தந்து, மெய்நிகர் ஆய்வகத்தை (virtual lab) அமைப்பதற்கு ரோட்டரி சங்கம் விரும்புகிறது என்றார். இவற்றின் மூலம் இயற்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவற்றில் 31 வகையான அறிவியல் பரிசோத னைகளை நிகழ்த்தலாம்.

இந்த ஆய்வகத்தின் செயலாக்க வடிவமைப்பில் விநாடி வினாக்கள், கோட்பாட்டுகள் ஆகியவை இடம்பெற்றிருக்கும். இவை மாணவர்களின் புரிதல் திறன் கருத்தியலைப் பரிசோதிக்கத் துணை புரியும். பல்வேறு கணித நுண்ணாய்வுத் திறன்களில் போதிய பயிற்சி பெற இது உதவும். மேலும், அறிவியலுக்கும் யதார்த்த உலகுக்கும் இடையில் தொடர்பையும் ஏற்படுத்தும் என்றார் கார்வா.

கலாம் கிட்ஸ் திட்டத்தின் அம்சங்கள்:

- இரு வழி உரையாடலுடன் கூடிய கணினிகள் கொண்ட 31 தனித்துவம் மிக்க ஆய்வக உருவகங்கள் (lab simulations).
- ஹார்வார்டு, கேம்பிரிட்ஜி, டேனிஷ், இம்பீரியல் கல்லூரி, அமெரிக்காவின் எம்ஐடி கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டங்கள்
- மாணவர்கள் காட்சிவழியான கல்வி பெற வசதி.
- ஒரு மேசை, இணையதளத்துடன் ஒரு கணிப்பொறி மட்டுமே போதும்.
- ஐந்தாவது வகுப்பு முதல் உயர்நிலைக் கல்வி பெறும் மாணவர்களுக்கு ஏற்றது.

மேலும் விவரங்களுக்கு மின்னஞ்சல்: *anujkarwa@gmail.com*

அலமாரியில் கண்டது

ஜெய்ஸ்ரீ

படிப்போம், நடப்போம், ஜெயிப்போம்!





தலைமை தாங்கத் தயாராகுங்கள்! **(Get ready to lead)** என்ற ஆங்கில நாவலைப் படிக்க வாய்ப்பு கிடைத்தது. முழுக்க நேர்மறைச் சிந்தனை, ஊக்குவிக்கும் தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைப் பயிற்சிக்குத் தேவையான குறிப்புகளுடன் நகைச்சுவை கலந்து நாவல் எழுதப்பட்டுள்ளது.

நூலாசிரியர் பொறுப்பு டைமையை குறித்து பேசுகையில், தனது சொந்த அனுபவங்களையே குறிப்பிடுகிறார். தந்தையின் மறைவு செய்தியைக் கூட அச்சகப் பணியாளர்களிடம் தாமதமாகவே தெரிவிக்கிறார். அச்சகப்பணியில் தாமதமும் நேரக் கூடாது என்பதிலும் வாடிக்கையாளர்களுக்கு கொடுத்த உறுதியை காப்பாற்ற முனைப்பாக இருந்திருக்கிறார்.

நாவலின் ஆசிரியர் G. ஒளிவண்ணன். ரோட்டரி 3232 மாவட்டத்தின் முன்னாள் ஆளுநராக இருந்தவர். நாவலை வெளியிட்டோர் : எமரால்டு பப்ளிஷர்ஸ், சென்னை. போன் : +91 44 2819 3206 /4214 6994. email: *info@emeraldpublishers.com*

ரோட்டரி விநாடி வினாப் புத்தகம் (Rotary Quiz Book)

உலகத்திலேயே ரோட்டரியின் Shelter Box மிகப் பெரிய திட்டம் என்பது தெரியுமா? இத்திட்டம் 8 நாடுகளில் 5,000 ரோட்டரி சங்கங்களில் செயல்படுகிறது. 1979ம் ஆண்டு RIPE ஜேம்ஸ் போமர் சங்கங்களுக்கு சவால் விட்டார். ரோட்டரி அல்லாத ஒருவரை தனது பெயரில் நன்கொடை அளிப்பதன் மூலம் பால் ஹாரிஸ்ஃபெலோ வாக (Paul Harris Fellow) தேர்ந்தெடுக்க முடியுமா? பிக்கிஸ்வில்லி என்ற அமெரிக்க ரோட்டரி சங்கம் அன்னை தெரசா பெயரில் நன்கொடை அளித்தது என்பது தெரியுமா?

இதுபோன்ற பல சுவையான தகவல்களை விநாடி வினா புத்தகம் மூலம் அறியலாம். இந்த புத்தகத்தை முன்னாள் தலைவர்களான நாராயணா ஷக்ரிதாயா (மும்பை பந்துூப் ரோட்டரி சங்கம் D 3141), காந்த்தி சோலங்கி (ரோட்டரி மெட்ரோ, D 3142) ஆகியோர் தொகுத்து தயாரித்துள்ளனர். புதிய உறுப்பினர்களுக்கு நன்கொடையாகவும், ஊக்கமளிப்பதாகவும் இருக்கும். ரோட்டரி சங்கேத சொற்கள், சுருக்க வடிவங்களையும் தெரிந்து கொள்ளலாம். இந்தப் புத்தகத்தை நாராயணா ஷக்ரிதாயா, (கைபேசி 98212 67367, 98209 67367) காந்தி சோலங்கி (98670 26464) ஆகியோரைத் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்

விலை ரூ.100.

இதோ, மாற்றுத் திறனாளிகளுக்கு ஒரு ரோட்டரி சங்கம்

ரோட்டரி நியூஸ் குழு

பெங்களூர் ரோட்டரி சங்கம் கடந்த பிப்ரவரியில் மாற்றுத் திறனாளிகளுக்கென்று ஒரு ரோட்டரி சங்கம் உருவாக்கப்பட்டு சாதனை படைத்திருக்கிறது.

இருபது உறுப்பினர்களுடன் உதய மாகியுள்ள இந்த ரோட்டரி சங்கம் குறித்து பெங்களூர் ரோட்டரி சங்கத் தலைவர் ஸரீர் பத்தா, இது குறித்து நாங்கள் கடந்த எட்டு மாதங்களாகவே விவாதித்து வந்தோம். இப்படி ஒரு புதுமையான நவீன தனித்தன்மை வாய்ந்த ஒரு ரோட்டரி சங்கத்தை அறிவிப்பது எங்களுக்குப் பெரிய மகிழ்ச்சியை அளிக்கிறது என்றார்.

ரோட்டரி பெங்களூர் திறனாளிகள் என்ற பெயரில் உருவாகியுள்ள இந்த சங்கத்தின் கூட்டத்தில் பேசிய அவர், இந்தப் புதிய சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கும் இருபது பேருமே சிறப்புக்கு உரியவர்கள். தீரச் செயல் என்ற வார்த்தையை நீங்கள் உங்களது வாழ்க்கைச் சம்பவத்தின் அடிப்படையிலேயே விளக்குங்கள். நீங்கள் எதிர்கொண்ட சவால்களைக் கூட கூறுங்கள். இப்போது நீங்கள் உலகுக்கு நற்பணிகளை ஆற்றுவது என்று முடிவு செய்துவிட்டீர்கள். நீங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவதுடன் நிற்காமல், உங்களை எதிர்பார்த்து உதவி தேவைப்படுவோருக்கும் உதவுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

ஹோமிபாபா, PRID பாண்டுரங்க செட்டி ஆகிய ஒப்பற்ற தலைவர்களைக் கொண்டு செயல்பட்டு வந்த பெங்களூர் ரோட்டரி சங்கம் புதிதாக உருவாகியுள்ள மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட இந்த ரோட்டரி சங்கம் துடிப்போடு இயங்கவும், வெற்றிகரமாகச் செயல்படவும் அனைத்து உதவி களையும் அளிக்க உறுதி பூண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய சங்கத்தின் தலைவர் ஜஸ்டின் ஃபிலிப்ஸ், ப்ரெய்ல் எழுத் தில் தயாரிக்கப்படும் ரோட்டரி யின் இன்சைட் (Insight) இதழின் ஆசிரியராகவும் பொறுப்பேற்றுள்ளார். நிகழ்ச்சியில் அவர் பேசியபோது, நாங்கள் புதிய பயணத்தைத் தொடங்கியிருந்தாலும் ரோட்டரி இயக்கம் பின்பற்றி வரும் பண்பாட்டையும் கலாசாரத்தையும் தொடர்ந்து கடைப்பிடிப்போம். RI அமைப்பு வகுத்துத் தந்த விதிகளைத் தொடர்வோம், கடைப்பிடிப்போம் என்று உறுதிமொழி அளிக்கிறேன். நான்கு வழி சோதனைகளையும் என்றென்றும் மேற்கொள்வோம் என்றும் பிரமாணம் செய்கிறோம் என்று குறிப்பிட்டார்.

பார்வையற்ற ஃபிலிப். கிடார், கீ போர்டு ஆகிய இசைக் கருவிகளை இசைப்பதற்கு அவர் பயிற்சி அளித்து வருகிறார். அவர் சந்தை ஆய்வுக் கம்பெனிகளுக்காக படியெடுக்கும் தொழில் நிபுணராக (transcriptionist) பணியாற்றி வருகிறார். மேலும், மின்னஞ்சல், வாட்ஸ்-அப் ஆகியவை மூலம் உலகளாவிய மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்விப் பயிற்சியையும் அளித்து வருகிறார்.

சங்கத்தின் செயலாளர் பிரதீப் K, ஓரளவு பார்வையிழந்த சாஃப்ட்வேர் தொழில் நிபுணராக இருக்கிறார். சர்வானி ராமச்சந்திரன் விபத்தில் ஊனமடைந்த இவர் IBM நிறுவனத் தின் நிதி ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார்.

ரோட்டரி பெங்களூர் மாற்று திறனாளிகள் சங்கம் நான்கு முக்கிய திட்டங்களைச் செயல்படுத்த திட்ட மிட்டுள்ளது. அரசாங்கமும் சிறு அங்காடி உரிமையாளர்களும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வசதிகளைத் தங்களது இடங்களில் செய்து தரவேண்டும் என்றும், மாற்றுத் திறனாளிகளுக்கென்று தனி வேலைவாய்ப்பு முகாம் நடத்துவது வதற்கு கோரிக்கை விடுப்பது, மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கென்று கிராமப்புறத்தில் தனிப் பள்ளிக்கூடம் அமைக்கக் கோருதல், பார்வையற்றோருக்கு ப்ரெய்ல் மூலம் படிக்கும் வகையில் தலா ரூ.25 ஆயிரம் செலவில் திரைகளை அமைப்பதற்கு நிதி உதவி செய்யக் கோருதல் ஆகியவற்றுக்கான பிரசாரங்களில் ஈடுபட இந்த அமைப்பு திட்ட மிட்டுள்ளது.

மாற்றுதிறனாளிகள் சங்கத்தினருடன் PRID பாண்டுரங்க செட்டி, DG ஆஷா பிரசன்னக்குமார், பெங்களூர் ரோட்டரி சங்கத்தலைவர் ஸரீர் பத்தா மற்றும் செயலாளர் R கிரீஷ்.

பிரேசில் நாட்டவரை அசத்திய தமிழ்நாடு!

ஜெய்ஸ்ரீ

ஓ, உங்களது இதமான விருந்தோம்பலும், உங்களது கொண்டாட்டங்களில் தெரியும் கம்பீரமும் எங்களைக் கட்டிப்போட்டுவிட்டது..! என்று மனம் குதூகலிக்கக் கூறினார் இஸபெல் ரெஜினா ஸ்செய்ட். பிரேசில் (D 4670) நாட்டைச் சேர்ந்த இவரோடு நான்குபேர் கொண்ட நண்பர்கள் பரிமாற்றக் குழு இந்தியா வந்திருந்தது. அக்குழுவுடன் கலந்துரையாடியபோது தான் இஸபெல் ரெஜினா இப்படி உணர்ச்சி பொங்கக் கூறினார். அந்தக் குழுவினரை D 3000 மாநாட்டில் வரவேற்று உபசரித்தனர். ரோட்டரி அமைப்பு நடத்திய மாவட்ட ரோட்டரி மாநாட்டையொட்டி இந்தச் சந்திப்பு நடந்தது. அந்தக் குழுவில் இஸபெல் மட்டுமே ஆங்கிலம் பேசுபவர். அவர் கால்நடை மருத்துவராக அங்கு பணியாற்றிவருகிறார். அந்த குழுவின் தலைவர் எகிடியோ தல்லகோனால். இவர் இயந்திரப் பொறியாளர். இக்குழுவில் க்ளெஸியா மரியா அல்ஃபயா என்ற ஆசிரியரும், கிறிஸ்டைனா டயஸ் என்ற உளவியல் நிபுணரும் இடம்பெற்றிருந்தனர். இஸபெல், க்ளெஸியா, கிறிஸ்டைனா ஆகிய மூன்று பெண்களும் இந்தியாவின் பாரம்பரிய உடையான பருத்திச் சேலையை அணிந்திருந்தனர்.

புதுக்கோட்டையில் பொங்கல் திருநாளையொட்டி நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டி அவர்களை வெகுவாக ஈர்த்தது. ஆக்ரோஷமாக வரும் காளையை மனிதர்கள் அடக்குவதைப் பார்க்கும்போது, ஸ்பெய்ன் நாட்டில் நடைபெறும் காளையுடன் நடத்தும் சண்டையைப் போல் உள்ளது என்றார் இஸபெல்.

தமிழ்நாட்டில் பத்து நாட்கள் தங்கி பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் நன்றாக அறிந்துகொண்ட பிறகு குழுவின் தலைவர் எகிடியோ பிரேசில் நாட்டுக்குப் பயணமானார். மற்ற மூவரும் தில்லிக்குப் புறப்பட்டார்கள். அங்கே மாவட்ட ரோட்டரி ஆளுநராகத் தேர்ந்தெடுக் கப்பட்ட சுபாஷ் ஜெயின் அவர்களை வரவேற்றார். ஆக்ராவில் தாஜ்மகாலுக்குச் சென்றனர். ரிஷிகேஷுக்குச் சென்றபின் தங்களது நாட்டுக்குத் திரும்பினர்.

தமிழ் நாட்டின் பல சிறு நகரங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு சிறிது காலமே தங்கியிருந்தாலும் விதவிதமான அனுபவங்களை அவர்கள் கண்டனர். ஆலயங்கள், கிராமீயக் கலை நிகழ்ச்சிகள் ரசித்து வியந்தனர். அவர்கள் தங்கியிருந்த செட்டி நாட்டு அரண்மனையின் கம்பீரம் ஆகியவற்றை அனுபவித்து ரசித்தனர் என்று வெளிநாட்டுப் பயணிகளுக்குத் துணையாக இருந்த மாவட்ட தோழமை பரிமாற்றக் குழுவின் தலைவரான P. குமரப்பன் கூறினார். இப்படி பலவித சுற்றுலாப் பயண அனுபவத்தைப் பெற்ற அந்த வெளிநாட்டுக் குழுவினர் கிராமத்தில் நடைபெற்ற குமரப்பனின் மருமகனின் திருமணத்திலும் கலந்துகொண்டது கூடுதலான அனுபவமாகும்.

திண்டுக்கல்லில் மன நல இயக்க த்துக்கான திட்டப் பணிகளும் கரூரில் தொழிற்பயிற்சி மையத்தின் செயல்பாடுகளும் அவர்களை கவர்ந்துவிட்டன. வத்தலகுண்டு

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் கிரிஸ்டியேனாவும் க்ளேசியாவும்.

குமரப்பன் வீட்டு திருமண நிகழ்ச்சியில் பிரேஸில் நாட்டவர்.

வில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் பங்கேற்ற அனுபவத்தை இஸபெல் நினைவுகூர்ந்தார். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய தேசிய கொடியுடன், எங்களது பிரேசில் நாட்டுக் கொடியும் பறக்கவிடப் பட்டது. எங்கள் நாட்டுக்கு அவர்கள் செய்த கவுரவத்தைப் பார்த்து வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டோம். நாங்கள் அணிந்திருக்கும் இந்த சேலைகளை அந்தப் பள்ளியின் முதல்வர்தான் பரிசாக அளித்தார் என்றார்.

மதுரைக்கு அருகில் உள்ள கடம்பவனம் என்ற சுற்றுலாப் பகுதியை சுற்றுப்புறத்தின் சு கத்தையும் அங்கு நடைபெற்ற கிராமியக் கலைநிகழ்ச்சிகளையும் அனுபவித்தனர்.மதுரை இன்னோ வெட்டர்ஸ் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் அவர்களுக்காகச் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தனர்.

குமரப்பன் தலைமையில் 10 பேர் கொண்ட குழு வரும் மே மாதம் பிரேசில் நாட்டுக்குப் பயணமாகிறது. அந்த நாட்டின் பாரம்பரியம் பண்பாடு, விருந்தோம்பல் அனுபவிப்பதற்காக அவர்கள் பயணம் செய்யப் போகிறார்கள்.■

வீட்டு வாசலில் ஒரு ரத்த வங்கி

ரோட்டரி நியூஸ் குழு

பூனா ரோட்டரி சங்கம், D 3131, சமீபத்தில் Zylog plastalloysஇன் ஆதரவுடன் ஒரு இரத்த சேகரிப்பு வேனை நன்கொடையாக வழங்கியது. ரூ.35 லட்சம் மதிப்புள்ள இந்த வேனில், சேகரித்த இரத்தத்தை வங்கி/மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வரை பாதுகாப்பாக வைப்பதற்காக இரண்டு டீப் ஃபிரீசர்களும், இன்வர்ட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

DG அபய் காட்கில் அவர்கள், PDG வினய் குல்கர்னி, DGND ராஷ்மி குல்கர்னி மற்றும் சங்கத் தலைவர் பிரகாஷ் தெலங் ஆகியோர் முன்னிலையில், BJ மருத்துவக் கல்லூரி மற்றும் சசூன் பொது மருத்துவ மனை டீனான டாக்டர் அஜய் S. சந்தன்வாலேயிடம், வேனை ஒப்படைத்தார்.

'இரத்த வங்கிகள் அல்லது மருத்துவமனைகளிலிருந்து வெகு தொலைவில் வாழும், இரத்த தானம் செய்ய ஆர்வமாக இருப்பவர்களுக்காகவே நாங்கள் இந்த திட்டத்தைக் கொண்டு வந்தோம்.' என்று தெலங் கூறினார். DG கட்கில், ரோட்டரி-CSR இன் முயற்சி நிறை வேறியதால்

அஞ்சலி தெலாங், DGND *ரஷ்மி குல்கர்ணி, பூனா சங்கத்தலைவர் பிரகாஷ் தெலாங்,* PDG *வினய் குல்கர்ணி, ராஜேஷ் பால் மற்றும்* Rtn. *அனில் பரமார் இரத்த சேகரிப்பு வண்டியுடன்.*

மகிழ்ச்சியடைந்துள்ளார், மேலும் பல சங்கங்களும் இது ஊக்கமளிக்கும் என்று நம்புகிறார். 'சமூகங்களை மேம்படுத்த, ரோட்டரி யுடன் கார்ப்பரேட் நிறுவனங்கள் இணைந்தால் பல நன்மைகள் நடக்கக் கூடும்.' என்று கூறினார்.

1936 ஆம் ஆண்டு தொடங்கப் பட்ட 80 வயதாகும் இந்த சங்கம், மருத்துவமனையுடன் நீண்ட கால உறவு கொண்டிருக்கிறது. குழந்தைகள் வார்டுக்கு ஒரு மனித பால் சேகரிப்பு வேன் மற்றும் பல்வேறு மருத்துவ உபகரணங்களையும் நன்கொடையாக அளித்துள்ளது. மகாராஷ்டிரா முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள் தங்கள் இரத்த சேகரிப்பு முயற்சி களுக்கு இந்த வேனின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள தெலங் அழைப்பு விடுக்கிறார்.■

வாரணாசியின் அழகு





வாரணாசி குறித்து பளபளப்பான புத்தகம் தயாராகியுள்ளது. பனாரஸின் புத்தகம் (The Book of Banaras) என்ற தலைப்பிலான இந்த ஆங்கிலப் புத்தகத்தைப் பனாராஸ் ரோட்டரி சங்கம் (D 3120) திரு. வேத் பிரகாஷ் மாவட்ட ஆளுநராக இருந்தபோது (2015-16) தயாரிக்கப்பட்டது. வாசகர்களை குதூகலமான வண்ணமயமான ஆன்மிகத் தலங்களுக்கு இட்டுச் செல்லும்.



Japanese temple

Left: Dhamekh Stupa

ஏராளமான வண்ணப் படங்களுடன் உள்ள இந்தப் புத்தகத்தை டாக்டர் விஸ்வநாத் பாண்டே எழுதி, வடிவமைப்பையுடன் மனீஷ் காட்ரி தயாரித்துள்ளார். உலகின் தொன்மை நகரமான வாரணாசியின் பல்வேறு இடங்கள் குறித்து நுணுக்கமான விவரங்கள் இடம்பெற்றுள்ளன. கங்கை நதி, தர்கா, மசூதிகள், ஆலயங்கள், விழாக்கள், கண்காட்சிகள், வாரணாசியின் வாழ்க்கை ஆகிய பல்வேறு அம்சங்களை நேரில் பார்ப்பது போன்ற உணர்வை இப்புகைப்படங்கள் ஏற்படுத்தும்.

Alamgir Mosque / Beni Madhav ka Darera, Panch Ganga Ghat

Maa Ganga Temple near Manikarnika Ghat.

Right: Mulagandhakuti Vihara



Designed by Krishnapratheesh S

நற்பணி புரிவதற்கு ரோட்டரி — கார்ப்பரேட் காட்டும் நல்லியல்பு

கிரண் ஜெஹ்ரா

பெங்களூரு நகரில் D 3190 ரோட்டரி கர்நாடக கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு குறித்த மாநாடு சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அதில் ஏழு பெண்கள் சாம்பல் நிறமும் வெள்ளையும் கலந்த ஓட்டு நர்களுக்கான சீருடையை அணிந்து கொண்டு புத்தம் புது மின்னணு டாக்சிகளின் சாவிகளைப் பெற்றுக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியைக் கொடியசைத்துத் தொடங்கிவைத்த TRF அறங்காவல் குழுத் தலைவர் பால் நெட்ஸெல் ஒவ்வொரையும் நோக்கி நடந்து சென்று தனித்தனியே வாழ்த்து கள்! என்று கூறி கைகுலுக்கியது நெகிழ்ச்சி அளித்தது.

நிகழ்ச்சியில் பேசிய அவர் மாவட்ட கவர்னர் ஆஷா பிரசன்னகுமாரிடம், ரோட்டரியின் சேவைகளை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் இதர தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் அறிமுகம் செய்தது எத்தகைய புதுமையான சிந்தனை! உங்களுக்கும் உங்களது குழுவுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்! என்று குறிப்பிட்டார். நம்மிடம் உள்ள பிரச்சி னை பணமல்ல. அதற்கான வாய்ப்பும் அல்ல. மாறாக, ஒவ்வொருவரும் தங்களுடன் இணைந் செயல் படுவதற்கான வழிவகைகளைக் காண்பதற்கும், ரோட்டரி சங்கம் எப்படி உங்களுக்கு உதவி செய்வது என்பதற்கும் வாய்ப்பாக இது அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

அறிவியல், தொழில்நுட்ப, பொறியியல் மற்றும் கணித பயிற்சி நிறுவனத்தின் (STEM), TSMT (பெங்களூரு), இந்திய கார்ப்பரேட் சமூகப் பொறுப்புடைமை வலையம் ஆகியவை இணைந்து இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளன. இத்தகைய மாநாடு D 3190 சார்பில் முதல் முறையாக நடத்தப்படுகிறது. இது போல் ஆண்டுதோறும் நடைபெறும் என்று மாவட்ட ஆளுநராக நியமனம் பெற்ற (DGN) சமீர் ஹரியாணி மாநாட்டில் தெரிவித்தார். இம்மாநாட்டில் 170 பேராளர்கள் பங்கேற்றுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

TRF அறங்காவல் குழுத்தலைவர் பால் நெட்ஜெல் ஓர் ஒட்டுநருக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறார். PRID மனோஜ் தேசாயும் உடன் உள்ளார்.



கர்நாடகத்தில் பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றுவதில் பங்களிப்புச் செலுத்தி வரும் பல்வேறு கார்ப்பரேட் நிறுவனங்கள், அமைப்பினர்களைக் கொண்டாடும் விதத்தில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் பங்கேற்றுள்ள சில பேச்சாளர்கள் தங்களது சொந்த செலவிலேயே புதுதில்லி, மும்பை ஆகிய நகரங்களி லிருந்தும் வந்துள்ளனர். ரோட்டரி அமைப்புடன் எப்படி இணைந்து பணியாற்றலாம் என்று காணவும், இந்தியாவின் பெரிய சவால்களாக இருக்கும் கல்வி, சுகாதாரம், சுற்றுச் சூழல் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் உள்ள பிரச்சினை களுக்கு எப்படித் தீர்வு காண்பது என்பதைக் கண்டறியவும் அவர்கள் வந்துள்ளனர் என்று DG ஆஷா குறிப்பிட்டார்.

ரோட்டரி சங்கக் குடையின் கீழ்

மாநாட்டின் அமர்வுகளில் பிலிப்ஸ், IDFC வங்கி, ஆசிம் பிரேம்ஜி ஃபவுண்டேஷன், கேப்ஜெமினி, எம்பஸி, தேசிய அலுமினியம் கம்பெனி (NALCO), இந்தியா கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு வலையம் (India CSR Network), மைண்ட்ரீ ஃபவுண்டேஷன், JSW ஃபவுண்டேஷன், ஸ்டெம் லேர்னிங் (STEM Learning), டெஸ்கோ பெங்களூரு, போஷ் இந்தியா ஃபவுண்டேஷன், அடோப், ப்ரில்லியோ, காக்னிசென்ட் ஆகிய வற்றின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டையொட்டி கல்வி, திறன் மேம்பாடு, மக்கள்நல்வாழ்வு மற்றும் சுற்றுப்புற சுகாதாரம், பசுமை கர்நாடகம், ஊரக வளர்ச்சி ஆகிய தலைப்புகளில் பல்வேறு அமர்வுகள் நடத்தப்பட்டன. ஒத்துழைப்பு, வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை ஆகியவை ஒவ்வொரு அமர்வின் முக்கியமாக அமைந்திருந்தன.

முன்னாள் மாவட்ட ஆளுநர் K.S. நாகேந்திரா இந்த நிகழ்ச்சி யைத் தொகுத்தளித்தார். அவர் பேசுகையில், நாம் பணம் குறித்து மட்டுமின்றி, அதையும் தாண்டி கவனம் செலுத்தவேண்டும். கார்ப்பரேட் சமூகப் பொறுப்புடைமையின் பங்களிப்பு உத்திகளை வகுத்துச் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும். நாம் இணைந்து ஏற்படுத்த இயலும் செயல்களில் கவனம் செலுத்து வதையும் உறுதிப்படுத்த வேண்டும் என்று கூறினார்.

PRID *பாண்டுரங்க செட்டி,* TRF *அறங்காவலர் சுஷில் குப்தா,* TRF *தலைவர் பால் நெட்ஜெல் மற்றும்* PRID *மனோஜ் தேசாய்.*

பிலிப்ஸ் நிறுவனத்தின் இயக்குநர், மக்கள் தொடர்பு அலுவலர் சுமதி ராவ் பேசுகையில், நாம் இணைந்து மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த இயலும். தனித்தனியாக உள்ள நிறுவனங்களை ஒன்றுசேர்த்து ஒரு குடையின் கீழ் கொண்டுவருவதுதான் இன்று தேவைப்படுகிறது என்றார்.

அப்போது மாவட்ட ஆளுநராக நியமனம் பெற்ற ஹரியாணி, அந்த குடையாக இருப்பது இதே அறையில் இருக்கும் அமைப்புதான். அதுதான் ரோட்டரி என்று பதிலளிக்கும் விதத்தில் குறிப்பிட்டார்.

தாமஸ் ராய்ட்டர்ஸ் நிறுவனத்தின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்புடைமைப் பிரிவின் தலைவர் அர்ச்சனா சஹாய், ரோட்டரி அமைப்பும் மாணவர்களும் கலந்துரையாடுவது மிகச் சிறந்த நாட்களாகும் என்று கூற, IDFC வங்கியின் திட்ட இயக்குநர் அருண் நாதன் ரோட்டராக்டர் என்ற முறையில் நான் நிறைய கற்றுக் கொண்டேன். அதை ரோட்டரியின் நலனுக்காகத் திருப்பிச் செலுத்துவதற்கும் நல்லது புரிவதற்கான தருணம் இது என்றார்.

அவர்கள் (ரோட்டராக்டர்கள்) ரோட்டரியன்களாகிவிட்டனரா என்று கேட்கப்பட்டபோது, அர்ச்சனா இன்னும் இல்லை என்று பதிலளித்தார்.

இந்த நிகழ்ச்சியின்போது, போஷ் இந்தியா ஃபவுண்டேஷன், பாகீரதி டிராவல்ஸ், காக்னிசென்ட் ஃபவுண்டேஷன் , கோல்ட்மேன் சாஷ்ஸ், இன்டெல் இந்தியா, ஜீப், கர்நாடக மாநில மின்னணு மேம்பாட்டுக் கழகம், ஆர்க்கள் இந்தியா டிசிஎஸ், தாம்சன் ராய்ட்டர்'ஸ ஆகிய நிறுவனங்களுக்கு நல்ல சேவை புரிவதற்கான ரோட்டரி கார்ப்பரேட் விருதுகள் வழங்கப்பட்டன.

முன்னாள் ரோட்டரி இன்டர் நேஷனல் இயக்குநர் மனோஜ் தேசாய் பேசுகையில், கார்ப்பரேட் சமூகப் பொறுப்புடைமை குறித்தும் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் எதிர்பார்க்கப்படுவது குறித்தும் இன்று நிறைய தெரிந்து கொண்டேன் என்றார்.

டீச் (TEACH) அமைப்பு குறித்தும், ரோட்டரி இந்தியா அமைப்பு கைலாஷ் சத்யார்த்தி ஃபவுண்டேஷனுடன் கூட்டிணைவு ஏற்படுத்திக் கொள்வதற்காக ஆஷா கிரண் எடுத்துக் கொண்ட முன் முயற்சிகள் குறித்தும் தேசாய் குறிப்பிட்டார். முன்னாள் ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் சுசீல் குப்தா ஒட்டுமொத்த சமூகத்திலும் ஏற்படும் நடத்தை மாற்றத்தை வரவேற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். அத்துடன், ரோட்டரி அமைப்பின் நீர், சுகாதாரம், தூய்மை (Water, Sanitation and Hygiene - WASH) என்ற முன் முயற்சி கள் குறித்தும் பார்வையாளர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

ரோட்டரியை விடச் சிறந்த பங்காளி இல்லை

கார்ப்பரேட் தலைவர்களிடம் பேசிய நெட்ஸெல், இந்தியாவில் கார்ப்பரேட் சமூகப் பொறுப்புடைமைக்கான

வாய்ப்புகள் மிகப் பெரியவை. ரோட்டரியின் மதிப்பீடுகளும் கார்ப்பரேட் சமூகப் பொறுப்புடைமையும் இணக்கமானவை.

யாரையும் யாரும் ஓரங்கட்டாமல், இணைந்து செயல்படலாம் என்று குறிப்பிட்ட அவர், உலகில் சிறந்த ஃபவுண்டேஷன்களும், மனிதாபிமான அமைப்புகளும் இருக்கின்றன. இந்நிலையில், ரோட்டரி ஏன் மிகச் சிறந்த அமைப்பாகவும், சிறந்த கூட்டாளியாகவும் திகழ்கிறது என்று விளக்கினார்.

உலகில் பிற அமைப்புகளை விட 200 நாடுகளைச் சென்றடைந்துள் ளது ரோட்டரி. இதில் 35 ஆயிரம் சங்கங்களும் அவற்றில் 12 லட்சம் ரோட்டரி அமைப்பினரும் உள்ளனர். உலகில் அநேகமாக ஒவ்வொரு சமூகத்திலும் எத்தகைய பிரிவுகளிலும் ரோட்டரி அமைப்பு ஊடுருவிப் பணியாற்றும் திறன் கொண்டது. அத்துடன், பல்லாயிரம் தொண்டர்களுடன் பொதுமக்கள், அரசுத் தலைவர்கள், கூட்டாளிகள், என பல தரப்பட்டவர்களுக்கு இடையில் பெரிய இணைப்பாளராகவும் ரோட்டரி அமைப்பு திகழ்கிறது. இவை மட்டுமின்றி, நாம் என்ன சொல்கிறோமோ அதையே செய்து காட்டுகிறோம் என்றும் நெட்செல் கூறினார்.

TRF குறித்து விளக்கிய அவர், அந்த ஃபவுண்டேஷன் புனிதமானது. உலகம் முழுவதும் உறுதி பூண்டுள்ள 15 அறங்காவலர்களுடன் இயங்கி வரும் அமைப்பாகும். ரோட்டரியின் பரோபகார குணத்தால் நிதி திரட்டுதல், உதவித் தொகைகள், மானியங்களை வழங்குதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த 100 ஆண்டுகளில் ரோட்டரி மொத்தம் 430 கோடி டாலர் (சுமார் 27952.15 கோடி) திரட்டி, பல்வேறு பணிகளுக்காக முதலீடு செய்துள்ளது. நாம் சிறந்த வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களைக் கொண்டிருக்கிறோம் என்பதற்காக இந்த விளக்கம் தரப்படுகிறது. இதைத் தொடர்ந்து மேற்கொள்வோம். வரும் நூற்றாண்டுகளில் பல மனிதாபிமானத் திட்டங்களுக்கு ஆதரவளிப்போம் என்றார்.

ரோட்டரின் திறன் குறித்து போலியோவை ஒழிப்பதற்காக முயற்சி தான் ரோட்டரிந் திறனைப் பற்றிய மிகப் பெரிய நடவடிக்கையாகப் பேசப்படுகிறது என்று கூறிய

TRF *தலைவர் பால் நெட்ஜெல் ஓட்டுநர் ஒருவருக்கு கார் சாவி கொடுக்கும் பொழுது* DG *ஆஷா பிரசன்னகுமார்,* TRF *அறங்காவலர் சுஷீல் குப்தா,* PDG KS *நாகேந்திரா மற்றும் பெங்களூர் ஆர்ச்சார்ட்ஸ் சங்கத்தின்* VG *கிரண்குமார் ஆகியோர் உள்ளனர்.*

நெட்செல், உலகம் முழுவதும் போலியோ ஒழிப்புக்காக 1985ம் ஆண்டு ரோட்டரி அமைப்பினர் தொடங்கியது முதல், கடந்த இரு ஆண்டுகளுக்கு முன் 247 மில்லியன் டாலர் (சுமார் ரூ. 1605.62 கோடி) திரட்டியது வரையில் பல்வேறு பணிகளை நினைவுகூர்ந்தார். போலியோ ஒழிப்பு இயக்கத்துக்காக ரோட்டரி மேற்கொண்ட முயற்சியின் தாக்கம் 2007ம் ஆண்டு தெரிந்தது. அப்போதுதான் பிலி மெலிந்தா கேட்ஸ் ஃபவுண்டேஷனும் ரோட்டரியுடன் இணைவதாக அறிவித்தது என்றார்.

இந்த ஆண்டு உலகில் கடைசி போலியோ பாதிப்பை இந்த ஆண்டில்தான் பார்க்க முடியும். இதையடுத்து, இந்த உலகம் போலியோ இல்லாத உலகம் என்று அறிவிக்க 36 மாதங்கள் ஆகும்.

ஆனால், இந்த 36 மாதங்களில் ரோட்டரி அமைப்பினரும் இதில் ஈடுபடுவோரும் கொண்டுள்ள ஆர்வத்தை எப்படி செயல்படுத்தப் போகிறோம் என்பது நம் முன் உள்ள கேள்விக் குறி என்று கூறிய நெட்செல், இந்த விஷயத்தில் ரோட்டரி அமைப்பினர் தங்களது இலக்கைக் கைவிடக் கூடாது என்று வலியுறுத்தினார்.

மேலும் பேசிய அவர், உலக அமைதி இப்போது தேவை. இந்த மாலையில் நாம் இங்கு கூடியிருக்கும் இந்த வேளையில் உலகமெங்கும் 1,052 ரோட்டரி அமைதிக் காவலர்கள் நிலையற்ற பகுதிகளில் தங்களது சிறந்த பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். ரோட்டரி அமைப்பினர் தங்களது திட்டங்களை கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தனது உரையை நிறைவு செய்யும்போது, பில் கேட்ஸ் மேற்கோளை அவர் சுட்டிக் காட்டினார். உலகம் முழுவதும் கடந்த பத்தாண்டுகளாகப் பயணம் மேற்கொண்ட நான் பல பயங்கரமான பிரச்சினைகளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். இந்நிலையில், ரோட்டரி அமைப்பினராகிய நீங்கள் லட்சக்கணக்கானோரை எப்படி மாற்றி வருகிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளவும் என் மனம் துடித்துக் கொண்டிருந்தது. அடுத்து உலகளாவிய திட்டம் குறித்து முடிவு செய்யும் நேரம் வரும்போது, ரோட்டரி மிகப் பெரிய அளவில் யோசிக்க வேண்டும். அது சிறிதாக இருந்தால், ரோட்டரி அமைப்பின் ஆற்றல் வீணாவதாகவே அமையும் என்றார்.■

ரோட்டரி இண்டர்நேஷனல் தெற்காசிய அலுவலகத்திலிருந்து செய்தி

நாங்கள் இடம் பெயர்கிறோம்: RI தெற்கு ஆசியா அலுவலகம், புதுடில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திற்கு அருகிலுள்ள ஒரு புதிய அலுவலகத்திற்கு ஏப்ரல் 16-ம் தேதி முதல் இடம் பெயர்கிறது. புதிய அலுவலக முகவரி:

ரோட்டரி சர்வதேச தெற்காசிய அலுவலகம்

புல்மேன்/நோவோடெல் கமர்ஷியல் டவர், 1வது மாடி, அசட் எண்.2, ஹாஸ்பிடாலிட்டி மாவட்டம், ஏரோசிட்டி (IGI விமானநிலையத்திற்கு அருகில்), புது தில்லி 110037 - தொலைபேசி எண்கள் : 91 11 42250101 முதல் 42250105. ஃபாக்ஸ்: 91 11 42250191 & 42250192 நீங்கள், ஏப்ரல் 16, 2018க்குப் பிறகு தில்லிக்கு வந்தால், தயவுசெய்து எங்கள் புதிய அலுவலகத்திற்கு வருகை தாருங்கள்.

- தற்போதைய சங்க அதிகாரிகள் உள்வரும் சங்க அதிகாரிகளை முன்னுரிமை அடிப்படையில் RIயிடம் தெரிவிக்க வேண்டும். எங்களிடம் ஏராளமான தெரிவிக்கப் படாத சங்க அதிகாரிகள் இருக்கிறார்கள். My Rotary மூலம் ஆன்லைனில் அல்லது *data@rotary.org* என்ற முகவரிக்கு தெரிவிக்கலாம்.
- க்ரூப் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் நிகழ்ச்சி என்பது ரொட்டேரியன்கள், ரொட்டேரியன்கள் அல்லாதவர்கள் மற்றும் இளம் தொழில் துறையினரின் சர்வதேச குழுக்களை ஒன்றிணைக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். மேலும் தகவல்களைப் பெற மாவட்ட ரோட்டரி ப்ரெண்ட்ஷிப் எக்ஸ்சேன்ஜ் குழுத் தலைவரை தொடர்பு கொள்ளுங்கள். கேள்விகள் இருந்தாலோ அல்லது உங்கள் அனுபவத்தை பகிர்ந்து கொள்ள விரும்பினாலோ, *rotary.service@rotary.org* என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.
- மரம் நடும் சவால்: இது உங்கள் சங்கத்தின் மரங்களை நடுவதற்கு உகந்த நேரமாக இருக்கலாம். மரங்களை நடுவது என்பது சுற்றுச்சூழலுக்கு செய்யக்கூடிய மிகச்சிறந்த உதவி மட்டுமல்ல, அது உங்களை உங்கள் ரோட்டரி சைடேஷனுக்கு ஒரு படி அருகே கொண்டு செல்கிறது. 22 ஏப்ரல் (பூமி தினம்)-க்கு முன் உங்கள் மரங்களை நட்டு விடுங்கள். அவை தானே செழிக்கும் நேரம் வரும் வரை நீங்கள் நட்ட மரங்களைக் கவனித்துக்கொள்ளுங்கள்.
- குளோபல் கிராண்ட் ரிப்போர்ட்டிங்: சங்கம்/மாவட்டங்கள் ஆன்லைனில் தேவையான இடைக்கால அறிக்கைகள்/இறுதி அறிக்கைகளை சமர்ப்பித்திருப்பதை ரோட்டரி அறக்கட்டளை கவனித்திருக்கிறது. அறிக்கைகளை ஆன்லைனில் சமர்ப்பிப்பது மட்டுமே அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது/கிரான்ட் மூடப்பட்டது என்று அர்த்தம் இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். அறிக்கையளிப்பு நிபந்தனைகளுக்கேற்ப, சங்கங்கள்/மாவட்டங்கள், அறக்கட்டளை இடைக்கால அறிக்கையை ஏற்றுக்கொள்வதற்காக அல்லது இறுதி அறிக்கையை மூடுவதற்காக, ஆதரவு ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

கீழேயுள்ள விளக்கப்படம், அறக்கட்டளைக்கு ஆன்லைன் அறிக்கை சமர்ப்பிக்கும்போது உடன் வழங்க வேண்டிய அசல் ஆதார ஆவணங்களைக் காட்டுகிறது.

ஆவண அறிக்கை	இடைக்கால அறிக்கை	இறுதி அறிக்கை
ஆன்லைனில் அறிக்கையை சமர்பிக்கவும்	ஆம்	ஆம்
பின்வரும் ஆவணங்களின் அனைத்து அசல் அச்சு நகல்கள் தேவை		
அசல் பயன்பாட்டு சான்றிதழ் மற்றும் ரசீதுகள்/கட்டண அறிக்கை	ஆம்	ஆம்
வங்கி அறிக்கையின் அசல்/சான்றளிக்கப்பட்ட உண்மை நகல்	ஆம்	ஆம்
அசல் பில்கள்/இன்வாய்ஸ்/ரசீதுகள்	பொருந்தாது	ஆம்
பொறுப்பேற்பு (மேலேயுள்ளதன் நகல் சமர்ப்பிக்கப்பட்டால்)	பொருந்தாது	ஆம்
பயனாளியின் தகவல்கள்	பொருந்தாது	ஆம்
திரும்பப்பெறும் பணம், ஏதேனும் இருந்தால்	பொருந்தாது	ஆம்

காலவரையறைகள் நெருங்குவதில் கவனம்:

- கிராண்ட் ரிப்போர்ட் செய்வதற்கான காலவரையறை - **மார்ச் 31, 2018** வரை, அனைத்து ஓபன் கிராண்ட்களிலும் நடந்த நிகழ்வுகளின் இடைக்கால அறிக்கையை **மே 31, 2018**க்குள் சமர்ப்பியுங்கள். இல்லையெனில் ஜூன் 1, 2018-லிருந்து ரிப்போர்ட் செய்தால் கிராண்ட் காலம் கடந்ததாகிவிடும். ஒரு கிராண்ட் நிதியுதவியாளர் ஏதாவது கிராண்ட் அறக்கட்டளைக்கு காலம் கடந்து அறிக்கை தந்திருந்தால், புதிய விண்ணப்பங்களை அறக்கட்டளை ஏற்காது. அறிக்கையளிப்பு நிபந்தனைகள் மற்றும் தேவையான வடிவங்களைப் பற்றி தெரிந்து கொள்ள, http://www.rotaryfoundationindia.org/reporting/ என்ற இணைப்பை கிளிக் செய்யுங்கள்.
- 2019-20 ரோட்டரி பீஸ் ஃபெல்லோஷிப் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படுகிறது. பீஸ் ஃபெல்லோஷிப் விண்ணப்பத்தைப் பற்றி அறிந்து கொள்ள https://my.rotary.org/en/peace-fellowship-application என்ற இணைப்பை கிளிக் செய்யுங்கள். விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் **மே 31, 2018** ஆகும். மாவட்டங்கள் ஒப்புதலுடன் கூடிய விண்ணப்பங்களை ரோட்டரி அறக்கட்டளையிடம் ஜூலை, 1க்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். கேள்விகள் இருந்தால், rotarypeacecenters@rotary.orgக்கு எழுதுங்கள்.

ரோட்டரி மூடாபித்ரியின் 50 வருட நினைவுகள்

V. முத்துக்குமரன்

1968 ஆம் ஆண்டு, துவங்கப்பட்ட திலிருந்தே, மூடாபித்ரி ரோட்டரி சங்கம், D3181, தக்ஷிணா கன்னடத் தில் உள்ள ஒரு சிறிய ஊரான மூடாபித்ரியின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வசதிகளையும் கட்டமைப்புகளையும் நிறுவி சேவை புரிந்து வருகிறது. ரேடியோ பெவிலியன், பேருந்து நிழற்குடைகள், பூங்காக்கள், வகுப்பறைகள், பள்ளியின் தளவாடச் சாமான்கள், ரோட்டரி கழிப்பறைகள், ஏரிகள் மற்றும் இரத்த வங்கி போன்ற பல்வேறு கட்டமைப்புகள், இந்த சங்கம் இங்குள்ள மக்களுடன் எவ்வளவு நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

உண்மையில், இந்தச் சங்கம் நவீன மணிபாலின் வடிவமைப்பாளரான டாக்டர் TMA பாய் மற்றும் மற்ற தொலைநோக்குப் பார்வையுள்ளவர்களின் சிந்தனையில் விளைந்ததாகும். இவர்கள் இந்த சிறிய நகரத்தின் சமூக மாற்றத்திற்கான அடித்தளத்தை 1970-களிலேயே அமைத்தனர். மருத்துவ முகாம்கள், கண் பரிசோதனை முகாம்கள் மற்றும் பெரிய எண்ணிக்கையிலான திருமணங்கள் போன்ற நடப்புத் திட்டங்களை பொதுமக்கள் வெகுவாக பாராட்டுகின்றனர், இதனால் மூடாபித்ரியில் ரோட்டரிக்கு சமூக அந்தஸ்து மிகப் பெரிய அளவில் அதிகரித்துள்ளது.

ரோட்டரி பள்ளிகள்

1981-ம் ஆண்டு வரை, இந்த நகரத் தில் ஒரு ஆங்கில வழிப் பள்ளி கூட இல்லை. சங்க உறுப்பினர்களின் நிதி ஆதரவுடன், ரோட்டரி, முப்பது வருடங்களுக்கு முன் ரோட்டரி ஆங்கில வழிப் பள்ளியைத் தொடங்குவதில் காலடி வைத்தது. தொடக்கத்தில் பொருளாதார ரீதியில் சாத்தியமற்று இருந்தபோதிலும் உறுப்பினர்களின் பெருந்தன்மையால் அதனைத் தங்கு தடை இல்லாமல் நடத்த முடிந்தது. 25 கோடி ரூபாய்க்கு மேலான முதலீட்டில், பள்ளி இன்று பெரிய நிறுவனமாக வளர்ந்துள் ளது, இது மழலையர் பள்ளி முதல் உயர்நிலைக் கல்வி வரை 2,500 குழந்தைகளுக்கு கல்வியை வழங்குகிறது. சங்கம், பின்னர் CBSE பாடத்திட்டத்தைப் பின்பற்றி, Rotary Central School-ஐ நிறுவியது.

பள்ளியானது, மாணவர்களின் ஆளுமை மற்றும் மதிப்பீடுகளின் முழுமையான வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு, ஒவ்வொரு ஆண்டும் பொதுத் தேர்வில் 100 சதவீத தேர்ச்சியைப் பெற்று சாதனை புரிந்துள்ளது என்று

சமீபத்தில் தூர்வாரப்பட்ட கடலகேரே ஏரியில் ரோட்டரியினர் படகு சவாரி செய்கின்றனர்.

பொன்விழா கொண்டாட்டம்: *சங்கத் தலைவர் ஸ்ரீகாந்த் காமத், DG சுரேஷ் செங்கப்பா மற்றும் பிற உறுப்பினர்களுடன் தர்மஸ்தலா கோவில் தர்மதிகாரி. வீரேந்திர ஹெக்டே, உச்ச நீதிமன்ற நீதிபதி அப்துல் நஜீர், உயர்நீதி மன்ற நீதிபதி B V நாகரத்னா.*

சங்கத்தலைவர் ஸ்ரீகாந்த் காமத் கூறுகிறார்.

ரோட்டாலேக்ஸ்

ஒரு டவுன்ஷிப்பை விரிவுபடுத்தும் படியான சூழ்நிலையில், பத்து வருடங்களுக்கு முன் நீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட மக்களை சங்கம் காப்பாற்றியது.

'தர்மஸ்தலாவில் உள்ள பிரபல மஞ்சுநாதா கோயில் மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் 'Rotalakes' திட்டம் வடிவமைக்கப்பட்டது. மிகப் பெரிய ஏரியான கடலகெரேயை புதுப்பிக்க, சுமார் 1 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. ''இதுவரை, நாங்கள் இரண்டு முக்கிய ஏரிகளை தூர்வாரி மீட்டுள்ளோம்; இந்த ஆண்டு, நாங்கள் மேலும் இரண்டு ஏரிகளை மீட்க உள்ளோம். ஊரினுள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 18 ஏரிகளையும் மீட்பதுதான் எங்கள் இலக்கு'' என்கிறார் காமத். Rotalakes திட்டத்துக்காக தற்காலிகமாக 3 கோடி ரூபாய் தொகை ஒதுக்கப் பட்டுள்ளது.

ஏழைகளுக்கான கழிவறை

பிராந்தியத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வசிக் கின்ற கிராமப்புற மற்றும் ஏழைக் குடும்பங்களுக்கு கழிவறைகளுடன் கூடிய குளியலறை வசதி வழங்குவதற்காக Rotalet திட்டம் 2015 இல் தொடங்கப்பட்டது. இது வரை ரூ.25 லட்சம் செலவில் 100 கழிவறைகளை சங்கம் கட்டியுள்ளது. மற்றும் இன்னும் 100 கட்டப்பட உள்ளன என்று சங்கத்தலைவர் கூறுகிறார். ரோட்டரி கழிவறைகளை, அரசாங்கமும் ஊடகங்களும் பெரிதும் பாராட்டி இத்தகைய முயற்சிகளுக்கு ஒரு பெரிய விளம்பரத்தைக் கொடுத்துள்ளனர்.

ரோட்டரி கழிவறை வசதி.

பொன்விழா ஆண்டை நினைவு கூறும் வகையில், சங்கம் சமீபத்தில் ரூ.70 லட்சம் மதிப்புள்ள ஒரு இரத்த வங்கியை திறந்து வைத்தது. ''இந்த கொண்டாட்டத்தை நினைவு கூறும் விதமாக சமுதாயத்திற்கு நிலைத்திருக்கும் ஒரு வசதியைச் செய்துகொடுக்க விரும்புகிறோம்'' என்கிறார் ஒரு சங்க உறுப்பினரான J.J. பிண்டோ.

''தற்போது 87 செயலில் உள்ள உறுப்பினர்கள் மற்றும் மூன்று சார்ட்டர் உறுப்பினருடன், நாங்கள் ஆரம்பித்ததிலிருந்து நீண்ட தூரம் பயணித்துள்ளோம். இதில் மூன்று பிரதான நன்கொடையாளர்கள் (Major Donors) மற்றும் 57 பால் ஹாரிஸ் ஃபெல்லோக்களும் அடங்குவர்,'' என்று காமத் பெருமிதம் கொள்கிறார். சங்கம் TRF கொடுப்பதில் $5,000 இலக்கை அடையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அதில் ஏற்கனவே $3,000 அடையப்பட்டுள்ளது.■

D 3232 நடத்திய வண்ணமயமான மாநாடு

V. முத்துக்குமரன்

நல்ல விஷயங்களை தகவல் தொழில்நுட்பச் செயற்களங்கள் மற்றும் அமைப்புகளை ஏற்பது உள்ளிட்ட புதிய வழிகளில் செய்வது சேவைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பாரம்பரிய வழிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும். RI தலைவர் இயான் ரைஸ்லே-யின் மிக விருப்பமான ஆறு தலைப்புகளில் இதுவும் ஒன்று. இவர் ரோட்டரியின் எதிர்காலத்தில் தெளிவான கண்ணோட்டம் கொண்ட இளம் PDGகள் அடங்கிய எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பணிக் குழுவை உருவாக்கியுள்ளார். RI தலைவரின் பிரதிநிதி PRID மைக்கேல் ஆல்பெர்க் D3232-யின் மாவட்ட மாநாடான வண்ணங்களில் கூறினார். ரோட்டரியை அதிகமாகப் பிரபலப்படுத்தவும் சமூக மாற்றத்திற் கான அமைப்பாக உருவாக்கவும் தலைவர் ரைஸ்லே-யின் குறிக் கோளாகும்.

''முதலில் இயான் அனைத்துச் சங்கங்களும் இரண்டு எண்களைப் பதிய விரும்பினார் - திட்டங்களில் செலவிட்ட ஆட்களின் நேரம் மற்றும் எல்லாவற்றிக்கும் செலவிட்ட மொத்தத் தொகை,'' என்றார் ஆல்பெர்க். அடுத்து உறுப்பினர் சேர்க்கை, இது வளர்ச்சிக்கு கடினமானது. மேலும், பெண்கள் மற்றும் இளம் உறுப்பினர்களைச் சேர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும், இவர்களால் நேர்மறையான மாற்றத்தைக் கொடுக்க முடியும். ''நாமும் Group Cultural Exchanges-முறையில் மாற்றம் செய்ய வேண்டும். இது GSE-க்கு மாற்றாக இருந்து, எல்லைகளைத் தாண்டிய நட்புறவிற்கு இட்டுச்செல்லும். மேலும் இந்த பூமியில் ஒரு நிலையான வாழ்க்கை வேண்டுமானால், ஒவ்வொரு ரொட்டேரியனும் மரம் வளர்க்க வேண்டும்.... ரோட்டரி வருடத்தில் சுமார் 1.2 மில்லியன் புதிய மரங்களை வளர்க்க வேண்டும்.''

ரோட்டரி இந்தியா உறுப்பினர் சேர்க்கையை வலுபடுத்த வேண்டும்

மாவட்ட ஆளுநர்கள் மற்றும் சங்கத் தலைவர்கள் வழக்கமான முறையில் புதிய அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டும். இந்த நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாதது துரதிர்ஷ்டவசமானது என்றார் RI இயக்குனர் C. பாஸ்கர். வெளிநாடு களில் இது போன்ற பயிற்சிகள் நடத்துவதற்குப் பதிலாக அலுவலகப் பொறுப்பாளர்களை 'ஹாலிடே பேன்ட்வேகன்' அனுப்புகின்றனர். ''இனிமேல் மாவட்டங்களுக்குள் இது போன்ற கூட்டங்களை நடத்தி வைப்போம்.'' சங்க கூட்டங்கள் பயனுள்ளதா; செயல்திட்டங்கள் வரையப்பட்டுள்ளனவா; மற்றும் தொடர்கண்காணிப்பு வேலை மேற் கொள்ளப்பட வேண்டுமா போன்ற கேள்விகளைக் கேட்டார். ''இன்றைய சங்க உறுப்பினர்கள் சேவை ரீதியாக இல்லாமல் தேர்தல் ஆர்வத்தில் உள்ளனர் '' என்று கூறினார்.

சுஜாதா DG R சீனிவாசன், RID மைக்கெல் ஆல்பேர்க், மற்றும் சார்லோட் மாநாட்டிற்கு குதிரை சாரட்டிலிருந்து இறங்கும் பொழுது.

அப்போலோ மருத்துவமனை தலைவர் PC *ரெட்டி,* PRID PT *பிரபாகர், சார்லோட்,*
RIPR *மைக்கெல் ஆல்பெர்க்,* RID C. *பாஸ்கர் மற்றும் மாலா பாஸ்கர்.*

ஒரு வருத்தமான குறிப்புடன், மறைந்த சாம் ஓவூரி உடனான தனது கலந்துரையாடலை அவர் நினைவுகூர்ந்தார். ரோட்டரி உறுப்பினர் சேர்க்கையில் இந்தியா 10 சதவீதத்தைக் கொண்டுள்ளது என்று பெருமையாகச் சொல்லும்போது, RID ஓவூரி பாராட்டுவதற்கு பதிலாக இந்தியா 1.2 பில்லியன் மக்கள் தொகையை கொண்டிருக்கும் போது, ஏன் ரோட்டரி ஒரு சதவிகிதத்தை அதன் உறுப்பினர்களாகக் கொண்டிருக்கவில்லை என்று கேட்டார். சுவீடன் கூட தனது மக்கள் தொகையில் ஒரு சதவிகிதத்தை ரொட்டேரியன்களாகக் கொண்டுள்ளது. இது அவரைத் தீவிர சிந்தனைக்கு உள்ளாக்கியது. ரொட்டேரியன்கள் நல்ல தகுதி வாய்ந்த நண்பர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களை ரோட்டரிக்குள் கொண்டுவர வேண்டும் என இயக்குனர் வேண்டுகோள் விடுத்தார். மேலும் ''சங்கத் தலைவர்கள் உறுப்பினர்களை அடிக்கடி சந்தித்து சமூக மற்றும் சமுதாயத் திட்டங்களை நடத்த வேண்டும்'' எனவும் கூறினார்.

TRF க்கு $100

TRF-க்கு பங்களிக்கத் தூண்டுவதற்கு முன்பு அறக்கட்டளையின் கொடைத் திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளைப் பற்றி சங்க உறுப்பினர்களுக்கு விளக்குவது சங்கத் தலைவர்களின் பணி. ''ஒவ்வொரு ரொட்டேரியனும் குறைந்த பட்சம் $100 நன்கொடையாகக் கொடுக்க முடியும். அவர்களின் பணம் சோமாலியாவில் உள்ள நோயுற்ற குழந்தைக்கு சாப்பாடு கொடுக்கவோ அல்லது பிலிப்பைன்ஸில் ஆதரவற்ற பெண்ணுக்கு உதவுவதற்கோ அல்லது கவுத்தமாலாவில் போதையால் பாதிக்கப்பட்டவரின் மறுவாழ்வுக்கே செல்லும் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.'' என்று பேசினார். RC சென்னை கிழக்கு ஆர் ஏ புரத்தைச் சார்ந்த மாநாட்டு சேர்மன் செல்வம் அழகப்பன் RI இயக்குனரால் பாராட்டப்பட்டார்.

ரோட்டரியும் அப்பல்லோவும் கூட்டுறவு

PRID PT பிரபாகர் தனது உரையில் நிறுவனங்கள் வழங்கிய வேன்கள், ஆம்புலன்ஸ் மற்றும் மற்ற வாகனங்கள் மூலமாக கிராமப்புறங்களில் மருத்துவப் பராமரிப்பை வழங்க அப்பல்லோ உடன் ரோட்டரி இணைந்து செயல்படும் என்றார்.

உயிரிழப்பைத் தவிர்ப்பது ஒரு முக்கியமானப் பிரச்சனை என்று அப்பல்லோ ஹாஸ்பிட்டல்ஸ் சேர்மன் டாக்டர் பிரதாப் C. ரெட்டி சொன்னார். மேலும் அவர் ''நாடு முழுவதிலும் உள்ள கிராமப்புறங்களில் NCD பாதிப்பைத் தடுக்க 80,000 பேர் உள்ள வலுவான அப்பல்லோ குடும்பம் ரோட்டரியுடன் கைகோர்க்கும்.'' என்றார். நீரழிவு, இதயம் சம்பந்தப்பட்ட வியாதிகள், பக்கவாதம், இரத்த அழுத்தம், புற்றுநோய் மற்றும் ஹைப்பர் டென்சன் போன்ற தொற்றல்லாத நோய்களால் (NCDs) நாட்டில் நாளொன்றுக்கு 6,000 பேர் இறப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

DG R. ஸ்ரீனிவாசன், மாவட்ட ரொட்டேரியன்களால் செயல்படுத்தப்பட்ட பல சேவைத் திட்டங்களை விளக்கினார். D 3232 வின் முதல் மாவட்ட மாநாடு இது. இது வரை, 10 புதிய சங்கங்கள் இந்த ஆண்டில் உருவாக்கப்பட்டு சங்க தலைமைப் பண்பு பயிற்சியும் கொடுக்கப்பட்டது என்றார்.

மாநாட்டில் பேசுகையில் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் கே பாண்டியராஜன் ரூ.6,400 கோடி மதிப்புள்ள கிராமப்புற நிலங்களை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட அரசின் இந்த இலட்சியத் திட்டத்தில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பவராக மாற ரொட்டேரியன்களை வலியுறுத்தினார்.

ஒவ்வொன்றும் 25-30 விவசாயிகள் கொண்ட குழுக்களை உருவாக்கி, தொழில் முனைவதற்கான

DGN G *சந்திரமோகன், PDG நடராஜன் நாகோஜி, கமலா செல்வம், மாலா பாஸ்கர், RID C பாஸ்கர், மாநாட்டுத் தலைவர் R செல்வம் அழகப்பன் மற்றும் Rtn. ராகவேந்திர ராவ் ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸ் சிலையுடன்.*

திறன்களை வளர்ப்பதால் அவர்களின் வாழ்வதற்கு விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்க வேண்டியதில்லை. ''உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் 12,000 சிறு மற்றும் குறு தொழில் களைத் தொடங்க முடியும். பயிற்சியாளராக இணைவதால் சேவைகள் மூலமாக ரொட்டேரியன் கள் தங்களது அறிவார்ந்த ஆற்றலை கொடுக்கலாம்,'' என்றார்.

ஒரு கண்கவர் தொடக்கம்

சங்கத் தலைவர்கள், மாவட்ட அலுவலர்களைத் தாங்கிக்கொண்டு 30 பழைய கார்கள் தொடர்ந்து வர DG ஸ்ரீனிவாசன், அவர் மனைவி சுஜாதா, RIPR ஆல்பெர்க் மற்றும் அவருடைய மனைவி சார்லோட் குதிரை வண்டியிலிருந்து இறங்கிவர மாநாடு தொடங்கியது. ஊர்வலத்தில், மாவட்ட முக்கிய திட்டத்தைச் சித்தரிக்கும் 13 மிதவைகள், இரத்த வங்கி, ஆம்புலன்ஸ் மற்றும் நடமாடும் மருத்துவ முகாம் போன்றவற்றிக்குப் பயன்படுத்தும் ரோட்டரி வாகனங்கள் கலந்து கொண்டன.

பால் ஹாரிஸின் சிலை

ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸின் ஆளுயரச் சிலையை ஆல்பெர்க் திறந்து வைத்தார். இது ஈவான்ஸ்டன், சிகாகோவில் உள்ள ரோட்டரி தலைமையகத்தில் உள்ளது போல இருக்கிறது. தேசிய விருது பெற்ற சிற்பி முனுசாமியால் வடிக்கப்பட்டது. RC மெட்ராஸ் மெட்ரோ இந்த சிலையைச் செய்வதற்கு நிதியுதவி வழங்கியது.

அடுத்து கவனத்தை ஈர்த்தது RC மெட்ராஸ் பல்லவா நிதியுதவி வழங்கிய அறை 711யின் தோற்றம். இது 1905 சிகாகோவில் நடந்த முதல் கூட்டம் நடந்த அறையைப் பிரதிபலித்தது.

சர்வதேச உணர்ச்சிப்பெருக்கு

ரோட்டராக்டர்கள், ரோட்டரி உள்ள 219 நாடுகளின் கொடிகளை ஏந்தியவாறு அணிவகுத்து வந்தனர் மற்றும் சென்னையில் உள்ள கவுன்சில் ஜெனரல்களாக உள்ள 11 கௌரவ ரொட்டேரியன்கள் பாராட்டப்பட்டனர்.

தலைவர்கள் முன்னிலையில் முன்னாள் கிரிக்கெட் வீரர் சையத் கிர்மானி ஐகான் ஆஃப் சென்னை விருதை ஆஃப் ஸ்பின்னர் R.அஷ்வினுக்கு வழங்கினார். மேலும் கடந்த முப்பது ஆண்டுகளாக 200க்கு மேற்பட்ட படங்களில் நடித்ததற்கு ரோட்டரி விருது சினிமா நடிகர் பலகுரல் கலைஞர் ஜெயராமிற்கு வழங்கப்பட்டது.

கென்யாவின் 38 ரொட்டேரியன் கள், ஆஸ்திரேலியாவின் 25 ரொட் டேரியன்கள், பெல்ஜியத்தின் 18 ரொட்டேரியன்கள் மற்றும் கனடாவின் ஏழு ரொட்டேரியன்கள் உட்பட மொத்தம் 2500 மேற்பட்ட ரொட்டேரியன்கள் இந்த மாநாட்டில் பதிவு செய்தனர்.■

பெண்களுக்கு ஓட்டுனர் கல்வி

ஜெய்ஸ்ரீ

ஜாம்ஷெட்பூர் ஸ்டீல் சிட்டி ரோட்டரி சங்கம், D 3250, பெண்களை தொழில்முறை ஓட்டுனர்களாக பயிற்றுவிக்க, Pebco மாருதி ஓட்டுனர் பள்ளியுடன் இணைந் துள்ளது. ''பெண் கார் ஓட்டுனர்களுக்கு வருவாய்க்கான வாய்ப்புகள் மிக அதிகம். பெற்றோர்கள் தங்கள் பெண் பிள்ளைகளை பள்ளிக்கும் அலுவலகத் திற்கும், பெண் ஓட்டுனர்களோடு அனுப்புவதை பாதுகாப்பாக கருதுகின்றனர். உபர் மற்றும் ஓலா நிறுவனங்கள் பெண் ஓட்டுனர்களைப் பணியமர்த்தத் திட்டமிட்டுள்ளதாக எங்களுக்குத் தெரிய வந்துள்ளது,'' என்று சங்கத் தலைவர் அல்பா பரிக் கூறுகிறார்.

முதலில் ஆறு இளம்பெண்கள் வகுப்பில் சேர்க்கப்பட்டனர். ''TISCO போன்ற நிறுவனங்களில் வேலை செய்வதற்காக ஜாம்ஷெட்பூரின் அருகாமையில் உள்ள ஆதிவாசி இன மக்கள் அங்கு இடம்பெயர்ந்துள்ளனர். பெண்கள் வீட்டு வேலை செய்பவர்களாக உள்ளனர். நாங்கள் இவர்களை இந்தப் பயிற்சியில் சேர்ப்பதற்கு முயற்சி க்கிறோம்,'' என்று சங்கச் செயலாளர் பர்னிகா அகர்வால் கூறுகிறார்.

இந்த ஓட்டுனர் பள்ளி, கருத்தியல் மற்றும் செய்முறை வகுப்புகளை விரிவாக வழங்குகிறது. ''நான் முதல் நாள் வண்டியில் உட்கார்ந்த போது சந்தோஷத்தில் சிலிர்த்துவிட்டேன். நான் ஒரு விமானத்தை ஓட்டுவது போல் உணர்ந்தேன்,'' என்று அலிஷா மாதுர் என்ற மாணவி கூறுகிறார்.

ஒவ்வொரு வகுப்பும் 40 நாட்களுக்கு நடக்கும். மாணவர்கள் ஒரு அர்ப்பணிப்போடு வகுப்புக்கு வருவதற்காக குறைந்த அளவாக ரூ.1000 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பகுதிக் கட்டணம் ரூ.4,500-ஐ சங்கம் ஏற்றுக்கொள்கிறது என்று பர்னிகா கூறுகிறார். மாணவர்கள் ஓட்டுனர் உரிமம் பெறுவதற்காக பள்ளி, RTO உடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. பெண்களுக்கு அதிகப் பயிற்சி தேவைப்பட்டாலோ அல்லது அவர்கள் தனியாக சாலையில் ஓட்டுவதற்கான நம்பிக்கையைப் பெறும் வரையிலோ அவர்கள் கூடுதல் வகுப்பில் சேரலாம்.

DG விவேக்குமார் படிப்பு முடித்ததற்கான சான்றிதழ்களை வழங்கினார். ''அதில் இரண்டு மாணவிகளுக்கு இங்குள்ள டாடா மோட்டார்ஸ் டீலரிடம், வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது,'' என்று பர்னிகா கூறுகிறார். அடுத்த வகுப்பைத் தொடங்க, சங்கம் ஆயத்தமாக உள்ளது.

நடமாடும் அறிவியல் கூடம்

ஜெய்ஶ்ரீ



கூர்க்கின் இயற்கைக் காட்சிகள் நிறைந்த மடிக்கேரியில் உள்ள அரசுப் பள்ளியில் 8, 9 மற்றும் 10-ஆம் வகுப்பு மாணவர்கள் உற்சாகமாக இருக்கின்றார்கள்; சில மாணவர்கள் வேதியியல், உயிரியல் மற்றும் இயற்பியல் பாடங்களை பெரும் உற்சாகத்துடன் விரைவாக நினைவுபடுத்திக் கொள்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், விஞ்ஞான வாகினி என்னும் நடமாடும் அறிவியல் வண்டி வரவிருப்பது தான். ஆசிரியர்கள், பியுரட், பிப்பெட், கூம்புக் குடுவை, சோதனைக் குழாய்கள் போன்ற பல்வேறு உபகரணங்களைக் கொண்டு வந்து, தாமிரம் மற்றும் கந்தக அமிலத்திலிருந்து உப்பு தயாரிப்பதற்கான சோதனைகளைச் செய்யவிருக்கிறார்கள். மேலும், ஒரு தெர்மோஸ்டாட் எப்படி வேலை செய்கிறது போன்றவற்றை, குழந்தைகள் நீண்ட காலம் புத்தகத்திலேயே பார்த்தவைகளை, செய்யவிருக்கிறார்கள்.

அந்தப் பள்ளியில் அறிவியல் ஆய்வகம் இல்லை, அதனால் அந்த வேன் உண்மையில் மாணவர்களுக்கு ஒரு வரமே. இதைபோன்ற மூன்று நடமாடும் அறிவியல் ஆய்வக வேன்களும், மடிக்கேரி, மிஸ்டி ஹில்ஸ், ரோட்டரி சங்கத்தின் (D 3181) ஒரு துவக்க முயற்சியாகும். இதற்கு, ரோட்டரி அறக்கட்டளை மற்றும் D 7450, பிலடெல்பியாவின் சென்ட்ரல் செஸ்டர் கவுண்டி (லயன்வில்லி) ரோட்டரி சங்கம், உலகளாவிய மானிய நிதி ஆதரவு வழங்கினர்.

‘மைசூரில் உள்ள, கிராமப்புற கல்வியில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு முழுமையான நிறுவனமான, சுவாமி விவேகானந்தா இளைஞர் இயக்கத்திடம் (SVYM) இருந்து எங்களுக்கு இந்த யோசனை கிடைத்தது. இது, மைசூரைச் சுற்றிலும் இது போன்ற நான்கு வேன்களை இயக்கி வருகிறது. நாங்கள் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளிலிருக்கும் ஆசிரியர்களுடனும் அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்தோம். குழந்தைகள், அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களில் ஆர்வத்தை வளர்த்துக்கொள்வதற்காக, அவர்களுக்கு நேரடி அனுபவம் தருவதே எங்கள் நோக்கம்,’’ என்று சங்கத்தின் திட்டத் தொடர்பாளர் K.K. விஸ்வநாத் கூறுகிறார். மேலும் அவர், இந்தப் பாடங்களில் உள்ள கருத்துக்களைத் தெளிவாகப் பார்த்துப் புரிந்துகொண்டால் மட்டுமே இந்தப் பாடங்கள் சுவாரஸ்யமாக இருக்கும் என்று கூறினார்.

இந்த வேன்கள் மடிக்கேரி, சோம்வார்பேட் மற்றும் விராஜ்பேட் ஆகிய ஊர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 99 பள்ளிகளில், 15,000

எதிர் பக்கம்: *பள்ளி வகுப்பறையில் ஆசிரியர்கள் அறிவியல் பாடத்தை செயல்முறை விளக்கமளிக்கின்றனர்.*
இடதுபுறம்: *விஞ்ஞான வாகினி -ஆய்வக வண்டி.*

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்காக சுற்றி வரும். அவர்கள் ஒவ்வொரு பள்ளிக்கும் வருடத்துக்கு நான்கு முறை வருகை தருவார்கள். SVYM மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட ஒருங்கிணைப் பாளர்கள், வகுப்பறைக்கு ஆய்வகத் தை எடுத்துச்செல்வார்கள். பள்ளி ஆசிரியர்களும் இந்தத் திட்டத்தில் பயிற்றுவிக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு மாருதி ECO வேனும், ஒரு ப்ரொஜெக்டர், UPS, பேட்டரிகள், மடிக்கணினி மற்றும் 250 அடி கேபிளையும் கொண்டிருக்கும்.

''எங்கள் ஊழியர்கள் பள்ளிக்கூடத் தில் தொடர்புகொண்டு அப்போது கற்றுக்கொடுக்கப்படும் பாடங்களைக் கேட்டறிந்து அதற்கேற்றவாறு உபகரணங்களையும் பொருட்களையும் எடுத்துச் செல்வார்கள்,'' என்று விஸ்வநாத் கூறுகிறார். வேன்களை நிறுத்துவதற்கும், ஆய்வக உபகரணங் களையும் பொருட்களையும் சேமித்து வைக்கவும் ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு வீடு வாடகைக்கு எடுக்கப் பட்டுள்ளது. அந்த வேன் மண்டலத்தில் உள்ள பள்ளிகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும். ''அவரவர் பகுதியில் உள்ள பள்ளிகளுக்கு வேன்கள் வருகை தருவதைக் கண்காணிப்பதற்காக மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்கங்களையும் நாங்கள் ஈடுபடுத்தி யுள்ளோம். ஒரு முன்னாள் உதவி ஆளுநர் ஒவ்வொரு வேனின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் இருப்புகளை கவனித்துக்கொள்கிறார்.''

திட்டத்தின் மொத்தசெலவு $35,000 மற்றும் செயல்பாட்டுச் செலவு ஆண்டுதோறும் ரூ. 10 லட்சம் ஆகிறது. இது SVYMஆல் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ''இதைத் தொடங்கி ஒரு வருடத்திற்குள் பள்ளிகளிடமிருந்து அற்புதமான கருத்துக்களைப் பெற்றுள்ளோம். இது விஞ்ஞானத்தின் பல்வேறு அம்சங்களை விளக்குவதற்கும் குழந்தைகளுக்கு கணிதத்தில் ஈடுபாட்டை உருவாக்குவதற்கும் ஒரு அற்புதமான வழியாகும்'', என்கிறார் விஸ்வநாத். ■

தண்ணீர் சிக்கனம் குறித்து குறும்படம்

ரோட்டரி நியூஸ் குழு

RC *ஜம்மு எலிட் தலைவர் நுபுர் சந்து,* AG NCC (J&K) *மேஜர் ஜெனரல்* N *குமார் மற்றும்* NCC *மாணவர்களுடன்.*

முழுக்க மகளிரையே உறுப்பினர்களாகக் கொண்ட D 3070 மாவட்டம் புதிதாக உருவாக்கியுள்ள ஜம்மு எலிட் ரோட்டரி சங்கம் தண்ணீர் சேமிப்பு குறித்து விழிப்புணர்வு குறும்படத்தை வெளியிட்டுள்ளது. ஐந்தரை நிமிடம் ஓடும் இந்தப் படத்தை சங்கத்தின் தலைவர் நூபுர் M. சந்து தயாரித் துள்ளார். குறும்படத்தை ஜம்மு காஷ்மீர் ஆளுநர் மாளிகையில் மாநில ஆளுநர் N.N. வோரா வெளியிட்டார்.

15 லட்சம் மாணவர்களுக்காக இந்தக் குறும்படத்தை மாநில கல்வித் துறை பரிந்துரை செய்துள்ளது என்று நூபுர் தெரிவித்தார். என்சிசி பயிற்சி முகாமைப் பின்னணியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது இந்தக் குறும்படம்.

இந்தப் படத்தினால் மாணவர்களிடம் இரு வகையான விழிப்புணர்வு ஏற்படும். ஒன்று தண்ணீரைச் சிக்கனமாகப் பயன் படுத்துவது. இன்னொன்று, மாணவர் கள் கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள் வதற்காக தேசிய மாணவர் படையில் (என்சிசி) சேர்ந்து பயிற்சி பெறத் தூண்டும் என்றும் நூபுர் கூறினார்.

இந்த குறும்படத்தின் வீடியோ மாவட்ட மாநாட்டில் காண்பிக்கப் பட்டது. இப்படம் திரையிடப்பட்ட நிகழ்ச்சியில் பங்கேற்ற உகாண்டா நாட்டின் D 9211 ஐ சேர்ந்த முன்னாள் மாவட்ட ஆளுநரும் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரின் பிரதிநிதியுமான இமானுவேல் கடோங்கோல் வெகுவாகப் பாராட்டினார்.■

D 3231ன் கோலாகல மாநாடு

கிரண் ஜெஹ்ரா

D 3231 நடத்திய முதல் மாவட்ட மாநாட்டில் 3,500க்கும் மேற்பட்ட ரொட்டேரியன்கள் குடும்பத்துடன் கலந்துகொண்டனர். தாய்லாந்தின் (D 3340) PDG இயாம்சன்ரூன்ப், RI தலைவரின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார். மாநாட்டுத் தலைவர் M. ஸ்ரீனிவாசன் மற்றும் PDG SvRm ராமநாதன் ஆகியோர் வேலூரில் உள்ள அம்பாலால் கிரீன்ஃபீல்டில் அமைந்திருந்த ஒரு முள் வயலை 100,000 சதுர அடி அகல, ஆடம்பரமான, அரங்கமாக மாற்றினார்கள். அந்த இடத்தின் மேன்மையான தோற்றத்திற்காக இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் மக்களை வரவழைத்து பணியாற்றினார்கள்.

மாநாடு பார்ப்பதற்கு ஒரு அரண்மனையைப் போல இருக்குமாறு வடிவமைக்கப்பட்டது. இதற்காக மும்பை, ஹைதராபாத் மற்றும் டெல்லியில் இருந்து வந்திருந்த 250 கலைஞர்கள் ஆறு மாதங்கள் வேலை செய்தனர். அரங்கத்தை அமைப்பதற்கான முழுசெலவாகிய 2.25 கோடி ரூபாயையும் நிதியுதவி செய்த PDG ராமநாதனை நாம் பாராட்ட வேண்டும். நாங்கள் ஒரு ஹோட்டலையோ அல்லது வேறு ஒரு ரெடிமேட் இடத்தையோ தேர்வு செய்திருக்கலாம்; ஆனால் இந்த நிகழ்வு மறக்க முடியாதபடி இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்பினோம், என்று கூறினார்.

300 ஆன்ஸ் மற்றும் அனெட்ஸ்-ரால் நிகழ்த்தப்பட்ட நடன நிகழ்ச்சி, சங்கீத் பெரும் வரவேற்பைப் பெற்றது. மகாத்ரியாரா, ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன், அரசியல்வாதி அன்புமணி ராம்தாஸ் மற்றும் தமிழ்த் திரைப்பட இயக்குனர் பாரதிராஜா போன்ற சிறப்புப் பேச்சாளர்கள் பெண்கள் மேம்பாடு பற்றி உரையாற்றினார்கள்.

அபிராமி மெகா மாலால் வழங்கப்படும் அபிராமி விருதுகள், பொழுதுபோக்குத் துறையிலுள்ள தமிழ் கலைஞர்களின் பணியைக் கொண்டாடி மரியாதை செலுத்தியது. நிகழ்ச்சியில் நடிகர்கள் பிரபு, சாய் தன்ஷிகா ('கபாலி' புகழ்), சரத்குமார் மற்றும் ராதிகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

25,000 விதை பந்துகளை நடுவது, மருத்துவ முகாம்களை நடத்துவது, எய்ட்ஸ், புற்றுநோய் மற்றும் டெங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் சென்னை புறநகர் பகுதியில் உள்ள ஆம்பூர் மற்றும் கள்ளிக்குப்பம் கிராமங்களில் உள்ள நரிக்குறவர்களுக்கு 164 வீடுகள் கட்டுவதற்காக D 3231 நிதியுதவி அளிக்கிறது. 300 சதுரஅடி பரப்பளவு கொண்ட ஒவ்வொரு வீடும் ஒரு படுக்கையறை, கூடம், சமையலறை மற்றும் ஒரு கழிப்பறை ஆகியவற்றைக் கொண்டு ரூ.3 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. 'நாங்கள் நிகழ்வுகளுக்காக மட்டும் பணம் செலவழிக்கவில்லை. நாங்கள் செய்யும் அனைத்தையும் சிறப்பாக செய்கிறோம் என்பதற்கு எங்கள் திட்டங்கள் சான்றாகும்,'' என்று ஸ்ரீநிவாசன் கூறினார்.

மாநாட்டின் வெற்றிக்காக அவரது முக்கிய அணிக்கு நன்றி தெரிவித்த DG ஜவாரிலால் ஜெயின், ''அவர்களுடைய ஆதரவும், கடின உழைப்பும் இல்லாமல் இது சாத்தியமாகி இருக்காது'' என்றார்.

திரைப்பட இயக்குனர் பாரதிராஜா, PDG SvRm ராமநாதன் அவர் துணைவியார் நல்லம்மை, மகள் மீனாக்ஷி பெரிய கருப்பன் மற்றும் திரைப்பட நடிகை ஜெயச்சித்ரா முன்னிலையில் கௌரவிக்கிறார்.

ரோட்டரி மானியத்தால் கிராமப் பள்ளிகளில் முழு மாற்றம்

ரோட்டரி நியூஸ் குழு

மகாராஷ்டிரத்தில் நகர்ப்புற, வசதி-படைத்த பள்ளிகளுக்கும், உட்புற கிராமப் பகுதிகளில் உள்ள நலிவுற்ற, பழங்குடியினர் பள்ளிகளுக்கும் இடையேயுள்ள அகன்ற இடைவெளியை குறுக்கும் நோக்கில், RC நாசிக், D 3030 மற்றும் லூயிஸ்வில் மார்னிங் கிளப் (டெக்சாஸ் - D 5790) கூட்டுச்சேர்ந்து ஓர் உலகளாவிய மானியத் திட்டத்தைத் துவக்கியுள்ளது. நிதின் பதக் அவர்களின் தலைமையில் 70 ரொட்டேரியன்கள் கொண்டு அமைக்கப்பட்ட ஓர் உலகளாவிய மானியக் குழு, நாசிக் சுற்றுப்புறம் உள்ள பள்ளிகளுக்கு வருகைதந்து, கிராமப்புற வகுப்பறைகளில் உள்ள எதார்த்த நிலையை ஆய்வு செய்தனர். அதன் விளைவாக, மாணவர்களுக்கு அடிப்படைப் படிப்புச் சாதனங்கள், ஈ-லேர்னிங் வசதிகள், ஆசிரியர் பயிற்சி, முதியோர் கல்வி, பள்ளிகளில் நூலகங்கள் அமைத்தல் ஆகிய ஐந்து முக்கிய அம்சங்கள் அடங்கிய தீர்வை முன்வைத்தனர்.

அமெரிக்காவிலிருந்து நிதியுதவி அளிக்க வந்த சங்கம், இந்த நிதியுதவி பெறும் பள்ளிகளின் கோரிக்கைகள் உண்மைதானா என்பதை உறுதிசெய்ய இத்திட்டத்தின் ஒவ்வொரு நுணுக்கத்தையும் ஆராய்ந்தது, மின்கட்டணச் சீட்டுகளைக் கூட சோதனைபோட்டுச் சரிபார்த்தது. சங்கத்தின் பிரதிநிதி கரோலின் அவர்கள் கோட்டிக்கு விஜயம் செய்து பார்வையிட்டார், அப்போது, இந்தப் பள்ளிகளில் இது போன்ற திட்டப்பணியின் அவசியம் குறித்து திருப்தி அடைந்தார். பிறகு, சென்ற ஆண்டு, அணில் சுகேன்கர் பிரசிடென்டாக இருந்தபோது சங்கத்துக்கு $40,000 மானியம் வழங்கப்பட்டது.

Cafe Kids *உடன் கோட்டி பள்ளிக்குழந்தைகள்.*

இரண்டு ஜோடி சீருடைகள், சாக்ஸ் மற்றும் ஷூக்கள், ஐந்து நோட்டுப் புத்தகங்கள், தண்ணீர் பாட்டில், ஸ்கூல் பேக், பென்சில் பாக்ஸ், ஜியாமெட்ரி பாக்ஸ், ஆகியவை அடங்கிய CAFÉ (சைல்ட் அடாப்ஷன் ஃபார் எஜுகேஷன்) கிட்' நாசிக் அருகேயுள்ள கோட்டி கிராமத்தின் 23 பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது, என்கிறார் சங்க உறுப்பினர் மங்கேஷ் அப்ஷங்கர்.

சங்கத்தினர் 40 பள்ளிகளுக்கு ஈ-லேர்னிங் கிட்களை விநியோகித்தனர், ஆசிரியர்களுக்காக இரண்டு பயிற்சித் திட்டங்களை நடத்தினர் மற்றும் தேர்ந்தெடுத்த பள்ளிகளில் நூலகங்களை அமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.

நான்காம் அம்சமான முதியோர் கல்வியின் துவக்கமாக, கிராமப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 'நிதியுதவி வழங்கும் சங்கத்துக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்படும், மேலும் RIயும் அதிகாரப்பூர்வ விஜயங்கள் மற்றும் கள ஆவணப்பதிவுகள் மூலம் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு திட்டப் பணியின் இந்தப் பகுதியை நெருக்கமாகக் கண்காணித்து வரும்' என்கிறார் அப்ஷங்கர். நாற்பத்தி நான்கு இன்டராக்ட் மற்றும் எட்டு ரோட்டராக்ட் சங்கங்கள் இந்தப் பள்ளிகளில் தொடர்ந்து முதியோர் கல்வித் திட்டங்களையும் ஆசிரியர் பயிற்சிகளையும் நடத்தி வருகின்றனர்.

''எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிப்பதே இதன் அடிப்படை நோக்கம். கற்பித்தல் கருவிகள், ஷூக்கள், புத்தகங்கள், சீருடைகள் போன்ற அடிப்படை வசதிகளின் பற்றாக்குறை, கல்விக்குத் தடையாக இருக்கக் கூடாது'' என்கிறார் திட்டப்பணிப் பொறுப்பாளரும் பிரசிடென்ட்-எலக்டுமான ராதேயா இயோல்.

தலஸ்ஸீமியா முகாம்கள்

PATUT (தலஸ்ஸீமியா யூனிட் ட்ரஸ்டின் பேரன்ட் அசோசியேஷன்) நாசிக் மையத்துடன் கூட்டுச்சேர்ந்து நாசிக்கின் புனே வித்யார்த்தி கிரிஹா பள்ளியிலும், தொண்டெகாவ் ஆஷ்ரம் ஷாலாவிலும் தலஸ்ஸீமியா (தாலசரத்தம்) முகாம்கள் நடத்தப் பட்டன. இவ்விரண்டு பள்ளிகளிலும் மருத்துவ சோதனை செய்யப்பட்ட 600 குழந்தைகளில் 15 பேருக்கு தலஸ்ஸீமியா மைனர், 5 பேருக்கு சிக்கில் செல், மற்றும் 196 இரத்தச்சோகை இருப்பது தெரியவந்தது.

மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. சாப் பாட்டில் எளிய மாற்றங்கள் ஏற்படுத்தி அதை அதிகப் போஷாக்கு மிக்கதாக ஆக்குமாறு ரொட்டேரியன்கள் பள்ளி நிர்வாகத்தை அறிவுறுத்தினர். ■

இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி

V. முத்துக்குமரன்

கடந்த 19 ஆண்டுகளாக ஒரு தொழில் பயிற்சி மையத்தை நடத்திவந்த RC மெட்ராஸ் ஈஸ்ட், D 3232, தமது அனுபவத்தை சாதகமாகப் பயன்படுத்தி, இப்போது சென்னையின் புறநகரில் உள்ள துரைப்பாக்கத்தில் மேலுமொரு தொழில் பயிற்சி மையத்தைத் திறந்துள்ளது, நலிவுற்ற இளைஞர்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தைத் தேடிக் கொள்ள உதவியாக பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பேமன்னாபெட் கம்யூனிட்டி காலேஜில் அமைந்துள்ள முதலாவது மையத்தில் பேக்கரி மற்றும் கன்ஃபெக்ஷனரி; பேரா மெடிக்கல்; லேப் அசிஸ்டன்ட்; கம்ப்யூட்டர் ஹார்டுவேர்-மற்றும்-டேலி; ஆங்கிலம் பேசும் கலை ஆகியவற்றில் நடைமுறை-அனுபவப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதுவரை 1,100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் இந்த மையத்திலிருந்து தேர்ச்சி பெற்று, 90 சதவிதம் பேர் பல்வேறு அலுவலங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

சங்கத்தின் பிரசிடென்ட் பி எஸ் புருஷோத்தம், பள்ளிப் படிப்பை நிறுத்த வேண்டியிருந்த கவிதாவின் வெற்றிச் சரிதையை மேற்கோள் காட்டினார். அவளுடைய தந்தை சென்னை மாநகராட்சியில் மாதம் ரூ.2,000 ஊதியத்துக்கு துப்புரவுத் தொழிலாளியாக வேலை பார்த்தார். ‘கவிதா இந்த மையத்தில் ஆறு மாதம் சாஃப்ட்வேர் பயிற்சியை கற்று, அதில் முதலிடம் பெற்றார். பிறகு, இந்தப் பயிற்சிக்கான நமது தொழில் துறைக் கூட்டு நிறுவனம் அவளுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத்தந்தது, இன்று 10 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் மாதம் ரூ.90,000 க்கு மேல் சம்பாதிக்கிறார். இன்று அவர்கள் ஒரு தன்னிறைவு பெற்ற குடும்பமாக வாழ்ந்து தங்கள் கனவுகளை நோக்கி உழைத்து வருகிறார்கள். இவ்வாறு நலிவுற்ற சாராருக்கு தொழில் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பு பெற்று தருவதில் நாம் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறோம். நம் சமூகத்தில் மேலும் பல கவிதாக்களை உருவாக்குவதே நமது குறிக்கோள்.‘

துரைப்பாக்கத்தில் உள்ள புதிய மையத்தின் அடிப்படைக் கோட்பாடு, ‘ஏழை எளியோருக்கு எட்டும் வகையில் அரிய வளங்களைத் திரட்டி வைப்பதே. நாங்கள் தேவை குறித்த புள்ளிவிவரத்தை கவனித்த போது, பிளம்பிங், டெயிலரிங், மற்றும் சாஃப்ட்வேர் டெவலப்மெண்ட் பிரிவுகளில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் நிறைய தேவைப்படுகிறார்கள் என்று தெரிந்தது’ என்கிறார் அவர்.

இந்தப் பயிற்சிகள் அந்தந்த தொழில்துறையைச் சார்ந்த கூட்டு நிறுவனங்கள் மூலம், உதவியோடு நடத்தப்படும். ஒவ்வொரு துறையிலும் ஒரு வருட காலத்துக்கு 150 மாணவ, மாணவிகள் பயிற்சி அளிக்கப்படுவார்கள், மேலும்

RC மெட்ராஸ் ஈஸ்ட் தலைவர் BS புருஷோத்தம், அமைச்சர் K பாண்டியராஜனை செயலாளர் பாபாராவ் நல்லூரு, முன்னாள் தலைவர் K ஆனந்த் மற்றும் மாவட்ட தொழிற்கல்வி சேவை இயக்குனர் S பரமேஸ்வர் முன்னிலையில் கௌரவிக்கிறார்.

ஒரு முழுமையான தன்னாளுமை வளர்ச்சிக்காக ஆங்கிலம் பேசுதல், பணியிடத்தில் நல்லொழுக்கம் மற்றும் நன்னடத்தை போன்ற துணைப் பயிற்சிகளும் வழங்கப்படும்.

சங்கத்தின் இந்த முனைப்புகளைப் பாராட்டிப் பேசிய தமிழ் மொழி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் K. பாண்டியராஜன், சமுதாயத்தின் நலிவுற்ற சாராருக்குக் கல்வியூட்டும் இந்தச் செயல்பாடுகளுக்காக சங்கத்துக்கு அரசாங்க ஆதரவு அளிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

சங்கம் இந்தப் புதிய மையத்தின் உள்கட்டமைப்புக்காக ரூ.35 லட்சம் செலவழித்துள்ளது, எனினும் இதற்கான மொத்த முதலீடு ரூ.1 கோடியாக இருக்கும் என்கிறார் புருஷோத்தம்.

ஒழுக்கநெறிக் கல்வி

பயிற்சி பெறுபவர்களுக்கு ஒழுக்க நெறிகள் சார்ந்த கல்வியை வழங்குவதில் மஹிந்திரா பிரைட் சிறப்புக் கவனம் செலுத்துகிறது, இதில் ‘வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட பணி நெறிகளுடன் நிறுவனத்துக்கான விசுவாசம்’ வளர்க்கப்படுகிறது, ‘இது இன்றைய இளைஞர்களிடையே அரிதாகக் காணப்படுகிறது.‘ இந்த முயற்சியின் பலனாக, நிறுவனங்கள் மீண்டும் மையத்துக்கு வந்து, தொழில் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பார்கள்.

கனடா மற்றும் இத்தாலியிலிருந்து நான்கு ரொட்டேரியன்கள் - இதில் கேட்டராக்கி கிங்ஸ்டன் ரோட்டரி சங்கத்தின் PDG பில் கிரேயும் அடங்குவார் - நமது புதிய பயிற்சி மையத்துக்கு வருகை தந்தனர்; தேவைக்கேற்ற தொழில் பயிற்சியை மாணவர்களுக்கு அளிப்பதற்கான வசதிகளும் ஏற்பாடுகளும் இருப்பதைக் கண்டு நல்லபிப்பிராயமும் பாராட்டும் வெளிப்படுத்தினர்.■

பீமண்ணப்பெட் கம்யூனிட்டி கல்லூரி வளாகத்தில் பயிலும் மாணவர்கள்.

மாநாடு

போக்குவரத்து விருப்பங்கள்

ராண்டி ட்ரஸ்ஸின்

கனடா டொரான்டோ நகரில் 2018ஆம் ஆண்டு ஜூன் 23ம் தேதி முதல் 27 வரையில் நடைபெறும் ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டில் பங்கேற்பதற்காக பியர்சன் விமான நிலையத்தில் நீங்கள் வந்து இறங்கியவுடன், டாக்சியிலோ அல்லது விமான நிலையப் போக்குவரத்து வாகனத்திலோ பயணித்து நகருக்குள் நுழையலாம். இரண்டும் இல்லா விட்டால், நீங்களே அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்கவேண்டும் என்று விரும்பினால், ஒரு காரை வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம். அதே சமயம் காசை மிச்சப்படுத்துவதற்கு எளிய ரயிலையோ பொதுப் போக்குவரத்திலோ பயணிக்கலாம்.

யூனியன் பியர்சன் எக்ஸ்பிரஸ் ரயில் 15 நிமிடத்திற்கு ஒரு முறை விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு யூனியன் ஸ்டேஷனைச் சென்றடையும். அத்துடன், 25 நிமிடம் போய் வருவதற்கான டிக்கெட்டையும் வாங்கிக் கொள்ளலாம். அதற்கான கட்டணம் 24.70 கனடா டாலர் (சுமார் ரூ.1249.75) ஆகும். மூத்த குடிமக்களுக்கு பாதிக் கட்டணம் தான்.

இவை மட்டுமின்றி, டிடிசி என அழைக்கப்படும் டொரான்டோ - டிரான்சிட் கமிஷன் பேருந்துகளிலும் பயணம் செய்யலாம். அத்துடன், 192 ஏர்ப்போர்ட் ராக்கெட் எனப்படும் போக்குவரத்தில் நகருக்குள் 45 நிமிடத்தில் சென்றுவிடலாம்.

டிடிசி போக்குவரத்து பஸ் பயணம், சுரங்கப்பாதைகள், தெருவோரக் கார்கள் என்று எல்லாமே உள்ளடக்கியுள்ளது. ஆவண ரீதியிலான எல்லா வகையான நடைமுறையும் சரியாக வைத்திருந்தால், எல்லா போக்குவரத்து சேவைகளையும் நீங்கள் பயன்படுத்தலாம். ஒவ்வொரு பயணத்துக்கும் மூத்த குடிமக்கள், மாணவர்களிடம் 3 கனடிய டாலர் (சுமார் ரூ.152) குறைத்து சலுகைக் கட்டணம் வசூலிக்கப்படும். அந்தச் சலுகைக் கட்டணத்தையும் டோக்கன் மூலமாகவோ காசு கொடுத்தோ செலுத்தலாம்.

பாஸ் (Pass) வைத்துக் கொண்டு எத்தனை முறை வேண்டுமானாலும் எந்த இடத்துக்கும் எப்போதும் செல்லலாம். தினசரி கனடிய டாலர் 12.50 (சுமார் ரூ.633). வாரத்துக்குக் கட்டணம் 43.75 கனடிய டாலர் (சுமார் ரூ. 2214). மூத்த குடிமக்களுக்கு 34.75 கனடிய டாலர் (ரூ. 1758).

மாநாட்டில் பங்கேற்க பதிவு செய்து கொள்ள இணையம்: *riconvention.org*

Wordsworld

மொழிப்பெயர்ப்பு கலை

சந்தியா ராவ்

மொழிபெயர்ப்பு பற்றியும், அது எப்படி உலகத்தை இணைக்கிறது என்பதைப் பற்றியும் சில சிந்தனைகள்

டாக்டர் ஜிவாகோ, ரபீந்திரநாத் தாகூர், பாப்லோ நெருடா, ஹபீஸ் மற்றும் உமர் கய்யாம் இவர்களின் கவிதைகள் இல்லாத உலகத்தைக் கற்பனை செய்யுங்கள். ஜெர்மானியர்களால் மட்டும் 'தாஸ் கேபிடல்'-ஐப் படிக்க முடிந்திருந்தாலும், ஹோசிமினின் 'பிரிசன் டைரி'-ஐப் படிக்க சைனீஸ் அல்லது வியட்நாம் தெரிந்திருக்க வேண்டும் என கற்பனை செய்யுங்கள். சன் ஜூ எழுதிய 'தி ஆர்ட் ஆஃப் வார்' -ஐ சீனர்களைத் தவிர வேறு யாரால் அதைத் தெரிந்துகொள்ள முடியும்? இந்த ஆங்கிலம் பேசும் உலகம் ஜேன் ஆஸ்டன் மற்றும் ஷேக்ஸ்பியருடன் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட, பஞ்சதந்திரம் மற்றும் கதசரித்சாகர்-ஐப் பற்றிய குறைந்தபட்ச அறிவைக் கூடப் பெற்றிருக்க முடியாது. ராமாயணம், மஹாபாரதம், இலியாத், ஆஸ்சிலஸ், ஹென்ரிக் இப்சென் மற்றும் ஆகஸ்ட் ஸ்ட்ரிண்ட்பெர்க் மற்றும் காளிதாசனின் நாடகங்கள்... ஏன் காமசூத்ரம் கூட யாருக்கும் தெரியாதபடி இருந்திருக்கும். எனித் ப்ளைடன் மற்றும் அவருடைய



இளம் சாகச வீரர்களை பற்றி தெரியாமல் இருக்கையில், சுவீடன் நாட்டு குழந்தைகள் மட்டும் ஆஸ்ட்ரிட் லிண்ட்க்ரெனில் மகிழ்ச்சியடையலாம். குரான், பைபிள், பகவத் கீதை, குரு கிரந்த் சாஹிப், தல்முத் போன்றவற்றைப் படிக்கவில்லையென்றால் நாம் இன்னும் அறியாமையிலே இருந்திருப்போம்.

தீமை எதையுமே நாம் ருசித்திருக்க முடியாது. எல்லாவற்றையும் அணுகுவதற்கும், எல்லா மொழிகளிலும் பேசப்படுகின்ற மற்றும் பகிர்ந்து கொள்ளப்படுகின்ற எல்லாப் புத்தகங்களுக்கும் இட்டுச் செல்லும் திறந்த கதவுகளால் தொடர்ந்து செல்ல முடிகிறது என்பதே சுதந்திரம். ஏனென்றால், கருத்துக்கள், உணர்ச்சிகள் மற்றும் சிந்தனைகள் அனைத்தும் இதிலிருந்துதான் வெளிப்படுகிறது. இதுவே நமது அறிவுத் தீனிக்கும் மேன்மையான வாழ்வுக்குமான ஆதார மூலம்.

என் மேஜையில், குலாம் முர்ஷித் எழுதிய 'பெங்காலி கல்ச்சர் ஓவர் அ தவுசண்ட் இயர்ஸ்' என்ற தடிமனான, நேர்த்தியான, கடினமான புத்தகம் இருக்கிறது. பெங்காலியில் எழுதப்பட்டு, 2006 ஆம் ஆண்டு டாக்காவில் வெளியிடப்பட்ட இப்புத்தகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு இப்போது தான் வந்தது. இதை மொழிபெயர்த்தவர் சர்பாரி சின்ஹா. எனினும் புத்தகத்தை வாசிக்க நினைத்தாலும் இதன் 644 பக்கங்கள் சற்று கடினமாக இருந்தது.

எனவே, ஒரு நாள் மாலை நேரத்தில் அதன் முதல் பக்கத்தை திறந்தேன்.

'ஒரு முறை அரசர் மெனாண்டர் புத்தத் துறவி நாகசேனாவை சந்திக்கும் போது அரசரிடம் கேட்டார், 'மன்னா, ரதத்தில் வந்திருக்கிறீர்கள். ரதம் என்பது



என்ன?' 'ரதம் என்பது குதிரைகளால் இழுக்கப்படும் சக்கரங்கள் உள்ள ஒரு வாகனம்' என்று மன்னர் பதிலளித்தார். 'ரதமும் குதிரைகளும் சமமா?', என கேட்டார் துறவி. 'இல்லை', என்றார் மன்னர். 'சக்கரங்கள் ரதத்திற்கு சமமா?' 'இல்லை' என்றார் மன்னர் மறுபடியும். இது போகட்டும். ஒரு ரதத்தின் விளக்கத்தை தந்திரமாக விளக்க முடிந்தால், கலாச்சாரத்தை விவரிப்பது சாத்தியமில்லாததாகத் தெரியலாம்.''

இது போன்ற தெளிவான, எளிமையான, மயக்குவதில் ஈடுபடும் ஒரு அறிமுகத்துடன் இருப்பதை என்னால் படிக்க முடியவில்லை. நான் பயணிப்பது போலத் தொடங்குகிறேன், ஒரு ரயில் பயணம் போல, அதன் நிலையத்தைப் பொறுத்து சிறியதாகவும் நீண்டதாகவுமான இடைவெளிகளை எடுக்கிறேன், ஆனால் தொடர்ந்து சென்றுகொண்டேயிருக்கிறேன். இதன் பரந்த பார்வை வியக்கத்தக்க வகையில் இருக்கிறது. முர்ஷித் என்ற ஒரு முன்னாள் பெங்காலி பேராசிரியர், ''பெங்காலி சமூகம் முடிவில்லாமல் பிரிந்து விட்டது, இந்துக்கள் மற்றும்



முஸ்லீம்கள் தான் இதில் மிகப்பெரிய பிரிவுகள். வரலாற்று ஆய்வாளர்கள் பெங்காலி இந்துக்களைப் பற்றியோ, இல்லையென்றால் பெங்காலி முஸ்லீம்கள் பற்றிய வரலாற்றையோ எழுதுகிறார்கள். ஆனால் ஒட்டுமொத்த பெங்காலி பேசும் சமூகத்தைப் பற்றி யாரும் எழுதுவதில்லை'' என பின் குறிப்பில் எழுதுகிறார். இந்த ஆங்கில மொழிபெயர்ப்பின் வாயிலாக, இந்தக் கண்ணோட்டத்தில் எனது பார்வை விரிவடைந்துள்ளது.

''மொழிபெயர்ப்பு ஒரு கலை. மொழிபெயர்ப்பு என்பது இரத்தம், வியர்வை மற்றும் கண்ணீர்'' என்று ஃபயஸ் அஹமத் ஃபயஸ் கூறுகிறார். ''மொழிபெயர்பிற்கான முதல் விதி ஒரு மொழியாவது தெரிந்திருக்க வேண்டும்''. ஆனால் இது வெறும் முதல் படி தான். நிறைய பேருக்கு இது தெரிவதில்லை. அவர்கள் மொழிபெயர்ப்பு என்பது வெறும் எழுத்துக்களுடன் தொடர்பு கொள்வது என நம்புகிறார்கள்.

இத்தாலி மற்றும் பிரெஞ்சு இரண்டிற்கும் இடையே நூற்றாண்டுகள் கடந்த கலாச்சார மோதல் கதை இருக்கிறது. இத்தாலியர்கள் தாங்கள் மிகவும் நேசித்த கவிஞர் டாண்டேயின் (1265-1321) பிரெஞ்சு மொழிபெயர்ப்பால், துரோகத்தின் கொடியத்தை அனுபவித்தனர். பிரான்ஸ் இந்த கவிஞருக்கு நியாயமாகவும் நேர்மையாகவும் நடக்கவில்லை என அவர்கள் உணர்ந்தனர். ஆரம்ப மறுமலர்ச்சி காலத்தில் டாண்டே அலிகிரி தனது முழு பெயரில் எழுதினார். இவரது படைப்பு, 'டிவைன் காமெடி' - காமெடியா என்றும் அழைக்கப்படுகிறது. தாய்மொழியில் டிவைனா - இத்தாலியில் மிகச்சிறந்த இலக்கிய படைப்பாக எண்ணப்பட்டது. இது நிறைய எழுத்தாளர்களுக்கு குறிப்பாக ஆங்கில மொழி எழுத்தாளர்களுக்கு ஒரு தூண்டுகோலாக இருந்ததாகக் கருதப்படுகிறது.

சில நேரங்களில், மொழி பெயர்ப்பில் உள்ள பிழைகளை பார்க்க வெகுதூரம் போக தேவையில்லை. உதாரணமாக, ரபீந்திரநாத் தாகூர், பெங்காலியில் ஆத்மார்த்தமாகவும் செழுமையாகவும் எழுதினார். கவிதை எழுதாத நேரங்களில் ஓவியங்கள் தீட்டினார் அல்லது நாவல்கள் மற்றும் நாடகங்களை எழுதிகொண்டிருந்தார். எப்பொழுதும் இரக்கக்குணம் கொண்ட நம்பமுடியாத நபர்களில் இவரும் ஒருவராக இருந்தார். இருந்தாலும் தன்னுடைய படைப்புகளை ஆங்கிலத்திற்கு மாற்றுவதில் இவர் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளர் இல்லை.

இரு வருடங்களுக்கு முன்பு ஒரு புத்தக வெளியீட்டு விழாவில், தாகூரின் படைப்புகள் பெங்காலியில் இருப்பது போன்று மற்ற மொழிகளில் அழகாக இல்லை என்று எழுத்தாளர் குல்சர் கருத்து கூறினார்.'' மொழி பெயர்ப்பு என்பது மற்ற மொழியில் அர்த்தத்தை வெளியிடுவது மட்டுமல்ல. ஒரு மொழி ஒட்டுமொத்த கலாசாராத்தை கொண்டுள்ளது. சொல்வளத்தின் கலாச்சாரம் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும். வாசிப்பவர்கள் கதாப்பாத்திரம் மற்றும் காட்சிகளின் தொடர்புகளை பிம்பங்களை உணரவில்லை என்றால் அது சரியாக மொழிபெயர்க்கப்படவில்லை,'' என்று அவர் சொன்னதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' வெளியிட்டிருந்தது. மேலும் ''தாகூர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அவருடைய கவிதைகள் நன்றாக இல்லை.'' என்று அவர் கூறுகிறார். குல்சர் தனது 10வது வயதில் 'தி கார்டனர்' உருது மொழிபெயர்ப்பு மூலம் தாகூரை அடையாளம் கண்டார்.

'இது எல்லாவற்றையும் மாற்றியமைக்கும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை'' என்று விவரிக்கிறார் ஜெர்மன் எழுத்தாளர் குண்டர் க்ராஸ். என்னவொரு சாத்தியமற்ற அதீத எதிர்பார்ப்பு; இது போன்றவற்றை ஊக்கப்படுத்தகூட சாத்தியம் இருக்கிறதா? ''நான் ஒரு வார்த்தையைப் பயன்படுத்தும் போது, மிகையோ அல்லது குறையோ இல்லாமல் நான் எதை தேர்வு செய்கிறேன் என்பதை மட்டும் அது அர்த்தப்படுத்துகிறது'' : 'அலைஸ் இன் வோண்டர்லேண்டில்' ஹம்டி டம்டி கூறியது.

இதுதான் முக்கிய கட்டம். எப்படி மொழிபெயர்ப்பாளர்கள், மொழி மற்றும் கலாச்சாரத்தின் வழியாக தங்களது ஆபத்தான பயணத்தை அமைக்கிறார்கள் என உங்களுக்கு வியப்பாக இருக்கும். இதற்காக அவர்களுக்கு நன்றி சொல்லவேண்டும். ஏனென்றால் வாசகர்களாக நாம் உலகம் முழுவதும் பயணித்து அங்குள்ள மக்களைச் சந்திக்க முடிகிறது; அவர்கள் வாழ்வின் வர்ணங்கள் தீட்டப்பட்ட அவர்களின் தோல் நிறங்களை பார்க்க முடிகிறது; அவர்களின் இதயத்துடிப்புக் கேட்கிறது மற்றும் நம்மிடம் இருப்பது போலவே அவர்களின் இரத்த நாளங்களில் சிவந்த இரத்தம் பாய்வதையும் உணருகிறோம். நம்மையெல்லாம் இணைப்பதற்காக, உலகிலுள்ள நூற்றுக்கணக்கான மொழிகளில், நஜிம் ஹிக்மெட், மார்க்காரெட் அட்வுட், கேப்ரியல் கார்சியா மார்கஸ், பெருமாள் முருகன், இஸ்மத் சுக்தை, அதிலா இல்ஹான், மஹாதேவி அக்கா, யூனஸ் எம்ரே, சிபி கேவஃபை, மஹஸ்வேதா தேவி, மாயா ஆங்கெலோ இன்னும் பலப் பல எழுத்தாளர்கள் மொழிபெயர்ப்பாளர்களை ஊக்கப்படுத்துகிறார்கள். அவர்களின் மரபு செழித்தோங்கட்டும்.■

உங்கள் ஆளுநரை தெரிந்து கொள்ளுங்கள்

ஜெய்ஸ்ரீ

குழந்தைகள் நலனில் மகிழ்ச்சி

R. *சீனிவாசன்*
ஹோட்டல் நிறுவனர்
சென்னை கிழக்கு **RA** *புரம் ரோட்டரி சங்கம்* - **D 3232**

நான் எப்போதுமே குழந்தைகள் சார்ந்த திட்டங்களில் கவனம் செலுத்துவேன். எங்களது பிராஜெக்ட் இண்டிகா (Project Indica) திட்டத்தின் கீழ் தெருவோரச் சிறுவர்களின் வாழ்க்கை நலனை மாற்றுவதை இலக்காகக் கொண்டது. இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு லட்சம் சிறுவர்களுக்கு உதவி புரிய முடிவு செய்துள்ளோம். அடிப்படைத் தேவைகளை அளித்து உதவுவது, குழந்தை நல மருத்துவமனைகளுக்குத் தேவையான உபகரணங்களையும், குழந்தைகளின் நலன் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தவிருக்கிறோம், என்கிறார்.

தனது மாவட்டம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் கடந்து அதிகமான உறுப்பினர்களைக் கொண்டிருப்பதாகவும், TRF வகுத்துள்ள இலக்கை விரைவில் எட்டிவிடுவோம் என்றார்.

RIPE பேரி ராஸினின் வருகையை முன்னிட்டு Foundation Dinner திட்டமிட்டு வருகிறோம். TRF க்கு எங்கள் இலக்கு மொத்தம் 6 லட்சம் டாலர். எங்களது மாவட்டம் புதிதாக 10 சங்கங்களை உருவாக்கி, 500 உறுப்பினர்களையும் சேர்த்திருக்கிறது. ஜூன் மாத இறுதியில் புதிதாக 700 உறுப்பினர்களை பெற்றிருப்போம் என்றார்.

சீனிவாசன் 2002ஆம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். ஒரு நாள் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தபோது, நண்பர் ஒருவர் என்னை அழைத்து, ரோட்டரி கூட்டத்திற்கு வரும்படி வற்புறுத்தினார். அவ்வாறே நானும் உறுப்பினரானேன்.

சங்கத் தலைவர் என்ற முறையில், Transit School என்ற கல்விச் சாலையை உருவாக்கினேன். இது ஒரு நகரிலிருந்து இன்னொரு நகருக்குக் குடிபெயரும் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெற்று முறையான பள்ளிகளில் சேருவதற்காக உருவாக்கப்பட்டது. இப்போது இப்பள்ளி ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளியாக உருமாறிவிட்டது. பல இளைஞர்கள் தொழிற்கல்வி பெற்று வேலை வாய்ப்பை பெறுகின்றனர். சிறுவர்கள் ரோட்டரி மீது ஆர்வத்தை வளர்க்க நாம் உதவ வேண்டும். நம் குழந்தைகளை ரோட்டரியில் நாட்டம் உண்டாக்க நாம் தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்கிறார் சீனிவாசன்.

V முத்துக்குமாரன்



B.M. சிவராஜ்
இரும்பு உற்பத்தியாளர்
தானே நார்த்எனட் ரோட்டரி சங்கம் - D 3142

பசுமை மேம்பாடே பிரதானம்

B.M. சிவராஜ் ரோட்டரி சங்கத்தில் 1999ம் ஆண்டு இணைந்தார். தனது பகுதியில் ஜெய்ப்பூர் செயற்கைக்கால், பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு, தடுப்பணைத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தியதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்திருக்கிறார் என்கிறார்.

12 லட்சம் ரோட்டரி உறுப்பினர்கள் உலகம் முழுவதும் மரக்கன்றுகளை நடவேண்டும் என்று RI தலைவர் இயான் ரிஸ்லி விரும்பிய நிலையில் இதுவரை 14 லட்சத்து 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது என்றார்.

அடுத்த இரு ஆண்டுகளில் மொத்தம் 50 லட்சம் மரக்கன்றுகளை நடுவதற்காக D 3142 மகாராஷ்டிர மாநில அரசுடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. பால்கார் பகுதியில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் மரங்களைப் பயிரிட்டு வளர்ப்பதற்காக தேசிய கிராமப்புற வேளாண் வளர்ச்சி வங்கியுடன் (NABARD) ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதனால் பழங்குடி குடும்பத்தினர் நிலையான வருவாயைப் பெறுவர்.

நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளைப் பட்டியலிட்டு, புதிதாக 6 ரோட்டரி சங்கங்களை அமைத்ததுடன் கூடுதலாக 500 உறுப்பினர்களைச் சேர்த்தது, 20 உறுப்பினர்களுக்கும் குறைவாக இருந்த 25 ரோட்டரி சங்கங்களைச் சீரமைத்து 20 சங்கங்களாக மாற்றி பல்வேறு திட்டங்களை அவர் விவரித்தார்.

எங்களது மாவட்டம் 10 லட்சம் டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால், 30 லட்சம் டாலர் (சுமார் ரூ. 19.54 கோடி) அளவுக்கு எங்களால் திரட்ட முடியும் என்று நம்பிக்கையுடன் குறிப்பிட்டார். மாவட்டத்தில் ரோட்டராக்ட் சங்கம் மிகவும் உற்சாகமாகச் செயல்பட அவர்களது திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது என்றும் சிவராஜ் குறிப்பிட்டார்.

400 பள்ளிகளில் e-learning வசதி, மாதவிடாய்க் காலத்தில் சுகாதாரம் பேணுதல் ஆகிய பணிகளில் 83 ரோட்டரி சங்கங்களை ஈடுபடுத்தி, உலகளாவிய மானிய உதவி பெறுவதில் கவனம் செலுத்துகிறார் சிவராஜ். அடுத்த மூன்றாண்டுகளில் எந்தக் குறைபாடும் இல்லாமல் இருப்பது தான் இலக்கு என்று குறிப்பிட்டார்.

கார்ப்பரேட் நிறுவனங்களின் நிதியுதவியில் சானிடரி நாப்கின் தயாரிக்கு நிலையம் தனது மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்று மகிழ்ந்தார். இந்த சானிடரி நாப்கின் ஒன்றின் விலை ரூ.2 என்று மலிவாக இருந்தாலும், WHO நிர்ணயித்துள்ள தரத்துடன் இருக்கிறது.

சிவராஜ் Level IV Major Donor ஆக திகழ்கிறார். அவரது மனைவி மனோன்மணி Inner Wheel Club of Thane Northend செயலாளராக இருக்கிறார். இவர்களது மகன் ரோட்ராக்டராகவும், மகள் இன்ட்ராக்டராகவும் உள்ளனர்.

அஜய் அகர்வால்
சுரங்கத் தொழில்
பத்ராக் மிட் டவுண் ரோட்டரி சங்கம் - D 3262

உண்மையான ரோட்டரி சங்க உறுப்பினர்

சின்ன வயதிலிருந்தே ரோட்டரிப் பணியை செய்து வருகிறேன் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் அஜய் அகர்வால். ஒடிசா மாநிலம் பத்ராக் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த அவரது பெற்றோர்கள் PHF பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அஜய் அகர்வால் 1993ம் ஆண்டு அப்போதைய DG லலித் சுர்ஜனிடம் சிறந்த ரோட்டராக்ட் தலைவர் விருதினையடுத்து, 1997ம் ஆண்டு ரோட்டரி சங்க உறுப்பினராகவும் உயர்ந்தார்.

ரோட்டராக்டர் என்ற முறையில் யாரும் செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் படகுகளிலும், மோட்டார் சைக்கிளிலும் சென்று பல போலியோ தடுப்பு முகாம்களில் பங்கேற்றிருக்கிறேன். 2001ம் ஆண்டு சங்கத் தலைவரானதும் 28 ஆயிரம் குழந்தைகளுக்கு ஹெபடைடிஸ் B தடுப்பூசி போட்டதை ஒரு சாதனையாக நினைவுகூர்ந்தார்.

கிராமப் புறங்களிலும், பின்தங்கிய பகுதிகளிலும் புற்றுநோய்க்கான நடமாடும் பரிசோதனை மையம் மூலம் தீவிர சிகிச்சை பெற வேண்டியவர்களை மும்பையில் அப்பல்லோ மற்றும் கோனார்க் தீவிர சிகிச்சை மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளார். ஒடிசா மாநிலம் பத்ராக், ஜோதா, பெர்ஹாம்பூர், புவனேஸ்வர், கட்டாக் ஆகிய நகரங்களில் ஐந்து டயாலிசிஸ் மையங்கள் நிறுவப்பட்டன. மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கம்ப்யூட்டர், அக்கவுண்டன்சி, தையல் பயிற்சி ஆகியவற்றை அளிப்பதற்காக 15 சஹேலி மையங்கள் அமைக்கப்பட்டன.

ஏப்ரல் 10ம் தேதி நடக்கவிருக்கும் உடல் உறுப்புகளைத் தானம் செய்வது குறித்த பிரசாரம் ரோட்டராக்டர்களின் பங்கேற்புடன் மகத்தான வெற்றியை பெறுவோம் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார். TRF நிறுவனத்துக்கான வசூல் ஒரு லட்சம் டாலர் (சுமார் ரூ.65.12 லட்சம்) அடைந்திருக்கிறது என்று திருப்தியடைந்தார் அகர்வால். நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு 5 லட்சம் டாலராகும் (சுமார் ரூ.3.26 கோடி).

உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்திவரும் அகர்வால், உறுப்பினர்களின் எண்ணிக்கையை 10 சத வீதம் அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளார். பெண் உறுப்பினர்களுக்கு மாவட்ட ரோட்டரி அமைப்பில் குறிப்பிடத் தக்க பதவிகளை அளித்து வருகிறோம் என்று கூறிய அகர்வாலின் மனைவி ரீட்டு, புவனேஸ்வர் நியூ ஹொரைஸன்ஸ் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக இருக்கிறார்.

FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!

Get Rotary's free Club Locator app and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator

Rotary

Rotary at a glance

Rotarians	:	12,26,337
Clubs	:	35,692
Districts	:	539
Rotaractors	:	2,51,299*
Clubs	:	10,925*
Interactors	:	5,18,788*
Clubs	:	22,556*
RCC members	:	2,23,928*
RCC	:	9,736*

* As on March 1, 2018

Membership Summary

As on March 1, 2018

RI Zone	RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians	Rotaract Clubs	Interact Clubs	RCC
5	2981	112	4,619	220	60	225	170
5	2982	67	2,997	98	61	112	43
5	3000	126	5,229	451	291	654	195
4	3011	76	3,355	644	57	108	25
4	3012	87	3,428	666	70	128	55
5	3020	94	4,236	204	117	461	351
4	3030	92	5,021	623	81	309	164
4	3040	93	2,048	217	55	121	136
4	3053	73	2,774	425	17	47	93
4	3054	130	6,393	1,015	93	307	473
4	3060	98	4,173	440	61	122	131
4	3070	103	3,020	287	68	156	54
4	3080	75	3,279	214	73	216	108
4	3090	80	2,158	93	32	36	122
4	3100*	74	1,707	75	11	72	146
6	3110	114	4,005	298	51	49	104
6	3120	78	3,330	359	37	58	51
4	3131	131	5,481	1,096	107	276	81
4	3132	105	4,109	429	66	201	138
4	3141	90	5,391	1,148	119	252	82
4	3142	83	3,131	467	68	194	65
5	3150	98	3,604	359	92	229	109
5	3160	70	2,462	129	26	48	81
5	3170	128	5,602	397	58	306	161
5	3181	71	3,118	231	33	179	104
5	3182	82	3,346	245	36	272	91
5	3190	129	5,088	593	148	355	51
5	3201	139	5,223	318	100	129	47
5	3202	128	4,855	240	104	435	46
5	3211	137	4,445	267	12	89	123
5	3212	96	3,928	267	111	272	122
5	3231	68	2,868	117	54	196	237
5	3232	103	4,099	551	141	307	80
6	3240	87	3,018	347	61	146	151
6	3250	98	3,784	675	48	207	178
6	3261	67	2,448	234	16	102	42
6	3262	96	3,290	379	44	69	75
6	3291	146	3,816	713	81	131	587
India Total		**3,724**	**1,44,878**	**15,531**	**2,760**	**7,576**	**5,072**
5	3220	68	1,915	242	83	199	77
6	3271	81	1,456	254	52	16	13
6	3272	154	3,093	447	42	36	36
6	3281	205	5,803	814	229	84	187
6	3282	141	4,046	394	132	45	38
6	3292	114	4,444	675	122	115	110
S Asia Total		**4,487**	**1,65,635**	**18,357**	**3,420**	**8,071**	**5,533**

**Non-districted.*

Source: RI South Asia Office

RYLA பொழுதுபோக்கு மட்டுமல்ல

கிரண் ஜெஹ்ரா

RC ஃபரீத்கோட், D 3090 நடத்திய RYLA நிகழ்ச்சியில் 150 மாணவர்கள் பங்கேற்றார்கள், மூன்று நாள் நிகழ்ச்சியில் நான்சி ஷர்மா, கற்றுக்கொண்ட முக்கியமான பாடம்: 'உன்னால் இதைச் செய்ய முடியாது அல்லது உன்னால் ஒருபோதும் எதையும் சாதிக்க முடியாது என்று பிறர் உங்களிடம் சொல்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.'உமாங் (நம்பிக்கை) என்று பெயரிடப்பட்ட இந்த RYLA 'வெறும் ஓய்வும், பொழுதுபோக்கும் மட்டுமல்ல. இளைஞர்கள் மத்தியில் ரோட்டரி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி, சுய முன்னேற்றத்தின் மூலம் தலைமைத்துவப் பண்புகளை வளர்க்க முனைந்தது' என்கிறார் RYLA-வுக்கு தலைமை தாங்கிய தேவிந்தர் சிங்.

MLA S. குஷால்தீப் சிங் தில்லான், ராஜீவ் பிரஷார்சு - IAS ஃபரீத்கோட் துணைக் கமிஷனர், ஆகியோருடன் சேர்ந்து DG பாக் சிங் பன்னு RYLA-வை துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சி உள்ளூர் டிவி சேனல் களிலும் ஒளிபரப்பப்பட்டது, இது பொதுமக்கள் மத்தியில் ரோட்டரியினை மேம்படுத்துவதாக இருந்தது. 'உமாங், மாணவர்களுக்கு சமூக சேவை உணர்வை வெளிபடுத்தவும், ரோட்டரியை நன்கு புரிந்துகொள்வதற்கும் உதவியது' என்றார் DG.

'என்னாலும் தலைமை பதவி வகிக்க முடியும்' என்பதை மனம் திறந்தார் நான்சி, ஆனால் 'தாக்கம் ஏற்படுத்துவதற்கோ, பெரிய பதவி வகிக்கவோ, பணம் தேவையில்லை என்பதை ரோட்டரி உணர்த்தியது. புன்னகையும், நன்மை செய்யும் எண்ணமும் இருந்தாலே போதும். 'RYLA-வில் தான் கற்றுக்கொண்டதைப் பற்றி சப்னா என்ற இன்னொரு பங்கேற்பாளர், 'இறுதியில், யார் அறிவாளி, யார் விவரமான ஆள் என்பதல்ல இலக்கு, நம் சமூகத்தை முன்னேற்ற கூட்டுக் குறிக்கோள் வைத்திருப்பதே முக்கியம்,' என்றார்.

ராதா க்ரிஷன் தம் அனாதை இல்லத்தில் லோஹ்ரி கொண்டாடியதும், செஞ்சிலுவைச் சங்கம் நடத்தும் மனநலன் குன்றியோருக்கான இல்லத்தில் தொண்டு செய்ததையும் நினைவுக்கூர்ந்தார். தவிர, மாணவர்களுக்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டது, உறுப்பு தானம் பற்றி உரை நிகழ்த்தப்பட்டது, மேலும் பெண் முன்னேற்றம் மற்றும் புகையிலையின் கேடுகள் பற்றிய விவாத அமர்வுகளிலும் பங்கேற்றனர். 'ஆடல், பாடல், பாங்ரா, ஹிஸ்ட்ரானிக்ஸ், மிமிக்ரி, கவிதை வாசித்தல் என எல்லாவற்றையும் மாணவர்கள் பிரம்மாதமாகச் செய்தனர்' என்கிறார் சிங். வெளியரங்குச் செயல்பாடுகளில் ரைஸ் மில், துப்பாக்கிச் சூடு களம் ஆகியவற்றுக்குச் சென்று பார்வையிடுதல், ஒரு திறந்தவெளி சமையல் வகுப்பு ஆகியவை அடங்கியிருந்தன.

இன்னொரு RYLA பங்கேற்பாளரான மனு சிங்கிற்கு, அவர் வீட்டுக்குத் திரும்பிய பிறகு முக்கியக் குறிக்கோளாக 'பள்ளிப் படிப்பில் முன்னேற வேண்டும், சுய முன்னேற்றத்துக்கு உதவும் சவால்களைக் கையில் எடுக்க வேண்டும். நான் இந்த RYLA-வில் ஏராளமானதைக் கற்றுக்கொண்டேன், இது நடக்கும் ஒவ்வொரு முறையும் இதில் பங்குகொள்ள விரும்புகிறேன்' என்றார் அவர்.■

வித்தியாசமான மிதிவண்டி அருங்காட்சியம்

டாக்டர் தீபக் ஷிகார்பூர்

கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தார், அன்றையிலிருந்து, அது ஒரு பல்வேறு வாய்ப்புள்ள நாடாக மாறிவிட்டது. அந்த நாடு உலகின் மிகப் பெரிய சுற்றுலாத் தலமாகவும் உள்ளது. அமெரிக்காவின் மிகவும் பிரசித்திப்பெற்ற சுற்றுலாத்தலங்களாக நிச்சயமாக மாயாஜால டிஸ்னிலாண்ட், யுனிவர்சல் ஸ்டுடியோ, தி கிராண்ட் கேன்யான், லாஸ் வேகஸ், சான்ப்ரன்சிஸ்கோ, மற்றும் நியூயார்க் இருக்கின்றன.

ஆனால் 2008 ஆம் ஆண்டில் ஓஹியோ மாநிலத்திற்கு ரோட்டரி குரூப் ஸ்டடி எக்ஸ்சேன்ஜ் குழுத் தலைவராக ஒரு மாத கால தனிநோக்கத்துக்கு உட்பட்ட சுற்றுப்பயணம் சென்றபோது நான் மத்தியமேற்கு பிரதேசத்தைக் கண்டு மயங்கிவிட்டேன். நாங்கள் உள்ளூர் குடும்பங்களுடன் தங்கினோம், இதுவரை பார்க்காத பல இடங்களுக்குச் சென்றோம். பல சுவாரசியமான மக்களை சந்தித்தோம். எங்களுக்கு ஓர் உள்ளூர் அமெரிக்க ரொட்டேரியன் வழிகாட்டியாக வந்தார். தொழில்கள், கலாச்சாரம், உணவுமுறைகளுடன் நாகரீகங்களையும், மரியாதைகளையும் கற்றுக்கொண்டோம்.

ஒரு நாள், மான்ஸ்பீல்ட்டில் காலை உணவு ரோட்டரி சந்திப்பிற்குப் பிறகு, ஏற்பாட்டாளர் எங்களை அருகிலிருக்கும் ஒரு சைக்கிள் மியூசியத்தைப் பார்வையிடக் கூட்டிச் சென்றார். ஆரம்பத்தில் எனக்கு ஆர்வமே இல்லை; சைக்கிள்களில் பார்க்க என்ன இருக்கிறது என்பது என்னுடைய எண்ணமாக இருந்தது. ஆனால் இந்த மியூசியம் தான் உலகின் மிகப்பெரிய சைக்கிள் சேகரிப்புகளைக் கொண்டுள்ளது என்று என்னிடம் சொன்னபோது, எனக்கு தெரிந்து கொள்ள ஆர்வமும், ஈடுபாடும் உண்டானது.

சைக்கிள்கள், பணக்காரர்களுக்கு மட்டுமேயான விளையாட்டு பொருளோ,பொம்மையோ அல்ல. வரலாறு முழுவதும் அவை, வர்த்தகத்தில் தகவலையோ, உருப்படிகளையோ கொண்டு சேர்ப்பதிலிருந்து, வாடகை வாகனமாகவும், ரோந்துப்பணியில் இருக்கும் போலிஸ்காரரை சுமந்து செல்வது வரை பயன்பட்டது. அவை முதலாம் உலகப்போரின்போது ராணுவ சேவையையும் செய்துள்ளது.

மியூசியத்தின் காப்பாளரின் கூற்றுப்படி, ஜிம் டிக்கி, கிரவ்ன் இக்யுப்மென்ட்டின் நிறுவனர் ஒரு கூட்டத்தின் போது தனது சக ஊழியர்களைக் கேட்டார் ''நியூ இங்கிலாந்தின் சின்ன நகரத்திற்கு மக்களைக் கூட்டி வர நாம் என்ன செய்யலாம்; வாழ்வதற்குரியதாகவும், சுற்றுலாத்தலமாகவும் மாற்றலாமா?''

மனதில் இந்த எண்ணத்தைக் கொண்டு, ஷ்வின் 1990 ஆம் ஆண்டில் தொழிலில் இருந்து வெளியேறியபோது, அவர் அவற்றின் தனிப்பட்ட சேகரிப்புகளை வாங்கினார். ஷ்வினின் பழைய சேகரிப்புகளுடன் அதன்பின்பு சேர்த்த இன்னும் பிற சைக்கிள்களும், நியூ பிரெமேனில்

உள்ள அமெரிக்க சைக்கிள் மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த சேகரிப்பு ஒரு அழகான பழைய ஜின்ஜர்பிரெட் முகப்பு உள்ள கட்டிடத்தில் அமைந்துள்ளது. மியூசியத்தின் பார்வையாளர்கள், காட்சிக்கு உள்ள நூற்றுக்கணக்கான சைக்கிள்களின் கதைகளைப் பகிர்ந்து கொள்ள ஊழியர்களால் வரவேற்கப்படுகின்றனர். இந்த மியூசியத்தின் சேகரிப்பில் உள்ள பல்வேறு வகையான சைக்கிள்கள் பற்றிய ஒரு சிறு வீடியோவுடன் பார்வையிடல் தொடங்குகிறது. அங்கிருந்து, பார்வையாளர்கள் இரண்டு மாடிகளில் வைக்கப்பட்டிருக்கும் அழகிய சைக்கிள்களை கண்டு தெரிந்து கொள்ளலாம். நூற்றுக்கணக்கான பழங்கால சைக்கிள் கிளப் வில்லை களின் உதாரணங்கள், சைக்கிள் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் மகிழ்ச்சியும் வியப்பையும் தரும் சைக்கிள்களையும் பார்க்க முடியும்.

இந்த மியூசியம், 19ஆம் நூற்றாண்டின் அழகான புராதனமான சைக்கிள்களை காட்சிக்கு வைத்துள்ளது. 1940 மற்றும் 1950களின் பாரம்பரியமிக்க பலூன் டயர் கிளாசிக்ஸ் மேலும், 1960களின் வாழைப்பட்டை இருக்கை, உயர்ந்த கைப்பிடி கொண்ட சைக்கிள்களையும் இந்த மியூசியம் காட்சிப்படுத்தி யுள்ளது. உலகின் மிகப்பெரிய உயரமான சக்கரம் கொண்ட சைக்கிளையும் பெருமையுடன் வைத்துள்ளது. இந்த மியூசியம் 300க்கும் மேற்பட்ட சைக்கிள்களை காட்சிக்கு வைத்துள்ளது. 1000-த்திற்கும் மேற்பட்டவற்றை சேகரித்து வைத்துள்ளது. இங்கே நீங்கள் மிக பொருத்தமாக, Boneshaker போன்ற பெயரிடப்பட்ட பழங்கால சைக்கிள்கள், பழைய தலைமுறை அனுபவித்த உயர் சக்கர சைக்கிள் முதல் ஒரு ஒற்றை விரல் கொண்டு தூக்கிவிடக்கூடிய நவீன கார்பன் சட்ட சைக்கிள் வரை பார்க்கலாம்.

இங்கே நீங்கள் மர சைக்கிள்கள் மற்றும் ஹார்லி மிதி வண்டிகளிலிருந்து ஒற்றைச்சக்கர சைக்கிள் வரை காண்பீர்கள். இது ஒரு சிறிய இடம் தான், ஆனால் மிகவும் பொழுது போக்கு மற்றும் தகவல் நிரம்பிய ஒன்று! இங்கே சவாரி செய்ய சைக்கிள்கள் உண்டு. நீங்கள் தொட முடியும். வீடியோக்களைப் பார்க்கலாம். நீங்கள் ஓர் மியூசியத்தை நேசிப்பவர் மற்றும் தகவல் சேகரிக்க வேண்டும் என்றால் உங்களுக்குப் படிக்க நிறைய கிடைக்கும், காதலுடன் பார்ப்பதற்கும், பார்த்து சிரிப்பதற்கும் (எல்லா சைக்கிள் கண்டுபிடிப்புகளும் வெற்றிகரமானவை அல்ல) நிறைய உண்டு. நாங்கள் எங்கள் சுற்றுப் பயணத்தை இரண்டு மணி நேரத்தில் முடித்துக்கொண்டோம். ஆனால், பேராவலுள்ள இரு சக்கர ரசிகராக இருந்தால் ஒரு நாள் முழுவதும் கழிக்கலாம். மியூசியத் தின் காப்பாளரும் இந்த இடத்தின் வழிகாட்டியுமாக இருந்தவர் மிகவும் உதவிகரமாக இருந்தார். மேலும் சொல்ல பல கதைகள் வைத்துள்ளார்.

முதல் சைக்கிளில் ஏறி கூட வந்து கொண்டிருந்தவருடன் சவால் விட்டதிலிருந்தே சைக்கிள் பந்தயம் மிகவும் பிரபலமானதொரு விளை யாட்டாக இருந்து வருகிறது. மியூசியத் தின் பந்தய சைக்கிள்கள் 1898 ரைட் சகோதரர் செயிண்ட் கிளாரிலிருந்து, வில்பர் ரைட் பல பதக்கங்கள் வென்றது முதல் 2004 ட்ரெக் மடோன் குஃ ஆம்ஸ்ட்ராங் தனது ஆறாவது டூர் டி பிரான்ஸ் வெற்றியைப் பெற உதவியது வரை.

சேகரிப்பில் உள்ள பழமையான சைக்கிள், 1816ஆம் ஆண்டின் ஒரு ட்ரைசின். இது ஒரு மர குறுக்குச் சட்டத்துடன் இணைக்கப்பட்ட இரண்டு மர சக்கரங்கள் கொண்டது. ஓட்டுபவர் சட்டத்தின் மீது அமர்ந்தபடி கால்களால் தரையை உந்தித்தள்ளி, முன்சக்கரத்தால் திசைமாற்றுவர். பேலன்ஸ் செய்வதற்கு தன்னுடைய முன்னங்கையை, தோல்வேலை செய்யப்பட்ட பேலன்ஸிங்போர்ட் என்ற பலகையில் ஊன்றிகொள்வார். பின் சக்கரத்தில் உள்ள தடையானது, பேலன்ஸிங்போர்ட்டில் இணைக்கப் பட்டுள்ள ஒரு தோல் கயிற்றை இழுப்பதினால் முடுக்கிவிடப்படும். ட்ரைசின் ஒரு முக்கியமான போக்குவரத்தை விட ஒரு உயர்ந்த மனிதரின் முட்டாள்தனமே. ஆனாலும் அது நீண்ட கண்டு பிடிப்பு வரிசையில் ஓர் அங்கமாக இருந்து நவீன சைக்கிளுக்கு வழி வகுத்த ஒன்று.

ஆனால், இந்த சேகரிப்பில் மிகவும் முக்கியமானது 64 இன்ச் முன்சக்கரம். இந்த சைக்கிள் உலகின் மிகப்பெரிய சைக்கிள் என உலக சாதனைகளின் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க சைக்கிள் மியூசியம் 7 மேற்கு மன்ரோ தெரு, நியூ பிரெமேனில் அமைந்துள்ளது. திங்கள் முதல் வெள்ளி வரை காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரையிலும், சனிக்கிழமை காலை 11 மணி முதல் மதியம் 2 மணி வரை.

இந்த மியூசியத்தைப் பற்றிய கூடுதல் தகவல்கள் *www.bicyclemuseum.com* இல் கிடைக்கும்.

இக்கட்டுரை எழுதியவர் D 3131 முன்னாள் ஆளுநர்.

வடிவமைப்பு: கிருஷ்ணபிரதிஷ்

உங்கள் நோய்எதிர்ப்பு மண்டலத்துக்கு ஒளியூட்டுங்கள்

பரத் மற்றும் ஷாலன் சவூர்

மனது சக்திவாய்ந்த சஞ்சீவி என்பதை ஏராளமான ஆராய்ச்சிகள் காட்டிக் கொண்டே இருக்கின்றன. சக்திவாய்ந்த எண்ணங்கள் மூலம், மனதின் சமநிலையைப் பராமரிப்பதன் மூலம், நம்மால் நமது உடலை - மேலே தூக்கி, ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள முடியும். குறைந்தது 90 சதவீத உடல் நோய்கள் உணர்ச்சியின் ஏற்றயிறக்கம் காரணமாகவே ஏற்படுவதாக இன்றைய மருத்துவ விஞ்ஞானம் கணிக்கிறது. கற்பனைக் காட்சிகள் மற்றும் உறுதிச்சொற்கள் மூலம் நாம் தொடர்ந்து சுகமளிக்கும் செய்திகளை மூளைக்கு அனுப்பும்போது, நமது உடல் புரிந்துகொண்டு பதிலளிக்க முடிகிற பயோகெமிஸ்ட்ரியாக மாற்றப்படுகிறது.

நோய் எதிர்ப்பு மண்டலமே உயிர்ச் செவியேற்பாளராக இருக்கிறது. துன்பத்தைச் செவியேற் கும் போது, அளவுக்கதிகமாக எதிர்வினையாற்ற முற்படுகிறது. கோதுமை, தூசி, பூஞ்சருகு போன்ற அன்றாட இயல்பான வஸ்துக்களை அது ‘நோய்-உண்டாக்கும் எதிரியாக’ நினைத்துக்கொண்டு, தனது நோய்-எதிர்ப்புத் இரத்த வெள்ளணுக்களை முடுக்கிவிட்டு ஆன்ட்டிபாடிகளை - இம்யூனோகுளோபின் D (ஐஜிஈ) - வெளிப்படுத்துகிறது. ஐஜிஈ உடலின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் செல்களில் போய் தங்கிக்கொள்ள முடியும். இவ்வாறு தோலில் ஏற்பட்டால், நமக்கு பூச்சிக்கடித் தடிப்பு (ஹைவ்ஸ்) வருகிறது; மூக்கு மற்றும் நுரையீரல்களில் புரான்கைட்டிஸ் அல்லது ஆஸ்துமா வருகிறது; வயிற்றில் கேஸ்ட்ரோஎண்டரைட்டிஸ் வருகிறது.

நோய் எதிர்ப்பு மண்டலம் செவி யேற்று அளவுக்கதிகமாக எதிர்வினை ஆற்றும் இந்தத் துன்பம் உண்மையில் என்ன?

- ★ ஓர் அன்புக்குரியவரை இழந்து விட்டோம் என்று சொன்னால்... அது ஆழ்ந்த சோகத்தை ’தேம்பி அழுதல்’ என்று செவியேற்றுப் புரிந்துகொள்கிறது, இதனால் தோலில் பூச்சிக்கடித் தடிப்பு, அரிப்பு, படை தோன்றுகிறது.
- ★ நாம் சூழலின் கட்டாயத்தால் சுயசார்பு வாழ்க்கையை வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டால், அந்தத் தனிமையை அது,’சேர்ந்து வாழும் விருப்பம் தடைசெய்யப்படுகிறது’ என்று செவியேற்றுப் புரிந்துகொள்கிறது, இதனால் ஆஸ்துமா தூண்டப்படுகிறது.
- ★ நச்சரிக்கும் பெற்றோரால் நாம் பதற்றமாக இருந்தால், இந்தத் தொடர் நெருக்கடியை அது, ‘திருப்திப்படுத்த வேண்டும் என்ற அளவுக்கதிகமான முனைப்பினால் பதற்றம்’ என்பதாகவும், பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு ஈடுகொடுத்து தன்னியல்பான வளர்ச்சியை தடுத்துக் கொள்வதாகவும் செவியேற்றுப் புரிந்துகொள்கிறது, எனவே வயிற்று உபாதைகள் - அல்சர், குடல் அரிப்பு நோய், டைவர்டிகுலைட்டிஸ் (பதுங்கழல்) போன்றவை ஏற்படுகிறது. சுருக்க மாகச் சொன்னால்: நோய்எதிர்ப்பு மண்டலம் பலவீனமாகும் போது, உணவுகள், வேதிகள், காற்றுத் துகள்கள் ஆகியவற்றுக்கு நம் உடல் பாதகமாக எதிர்வினை ஆற்றி, அதை ஒவ்வாமை என்பதாக அறிந்துகொள்கிறது.

தினமும் சுகமளிக்கும் சொற்களை திரும்பத் திரும்பச் சொல்லி, மனதுக்கும் நோய்எதிர்ப்பு மண்டலத்துக்கும் வலுவூட்டுவது அவசியம்.

சுய-சுகமளிக்கும் சொற்களைப் பயன்படுத்துவது ஒரு

பயனுள்ள உளவியல் அணுகுமுறை. ஓர் அழகான திடமூட்டும், வலுவூட்டும் செய்தி நம் மூளையிலிருந்து உடலின் மற்ற பாகங்களுக்கு அனுப்பப்படுகிறது, அதன் மூலம் வலுவான, உடல் நிலையை பெறுகிறோம். தினமும் திரும்பத் திரும்பச் சொல்லும் சுகமளிக்கும் சொற்கள், நமது பலவீனமான மனோபாவத்தை தகர்க்கமுடியாத அளவு உறுதியாக மாற்றுகிறது. இந்த மனோபாவம் உண்மையில் நமது உடலில் ஹிஸ்டமீன்கள் மற்றும் ஒவ்வாமை-ஊக்கி வேதிகளின் அளவுகளை குறைக்க முடியும் என்று ஒவ்வாமையியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அதாவது ஒவ்வாமை, ஆஸ்துமா போன்றவை கடுமையிலும், எண்ணிக்கையிலும் குறைந்துகொண்டே இருக்கும். உங்களுக்குத் தொல்லை தருவது நாளுக்கு நாள் குறைந்து, ஃபூ! என்று ஒரு நாள் அதுவே போய்விடும். ஏதோ வளரிளம் பருவத்தில் இருந்த தொந்தரவு இப்போது வளர, வளர நீங்கிவிட்டது போல இருக்கும்! இந்தச் சுகமளிக்கும் செயல்முறையில், மனது மாற்றம் அடைகிறது. அது இன்னும் சுதந்திரமாக மாறும், ஆஸ்துமாவைத் தவிர்க்கும் வண்ணம் ஒவ்வாமைத் தூண்டல் உணவுகள் அல்லது குறைச் சாப்பாட்டை கைவிட இன்னும் ஆர்வமாக இருக்கும். நாளடைவில், அடக்கிவைத்த உள்ளூரக் கவலைகள் பறந்துவிடும், தோலில் பளபளப்பும் தோன்றும்.

Santifoto

ஆஸ்துமா உள்ளவர்கள் கைவசம் ஓர் இன்ஹேலரை வைத்துக் கொள்ள வேண்டும், காற்று மாசுபாட்டினால் மூச்சுத்திணறும் போது, போதிய காற்றை மூச்சில் உள்ளேயிழுக்க முடியாமல் பயந்துபோய், அது மேலும் மோசமாகலாம். அந்நேரத்தில் இன்ஹேலர் உடனடி நிவாரணம் தருகிறது. ஆஸ்துமா உள்ளவர்கள் மன அழுத்தத்தையும், பீதியை உண்டாக்கும் எந்தவொரு சூழ்நிலையையும் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். சுகமளிக்கும் சொற்கள், தியானம் உள்ளிட்ட இறுக்கத்தைத் தளர்த்தும் வழிமுறைகள், பூங்காவில் நடப்பது, மூச்சுப் பயிற்சிகள் ஆகியவை பெரிதும் உதவியளிக்கும். போதிய நேரம் தூங்குங்கள். படுக்கையில் படுத்துக் கொண்டு, உடலின் எல்லா பகுதிகளையும் இறுக்கமாக வைத்துக் கொள்ளுங்கள். பிறகு இறுக்கத்தை விடுவித்து, ஓய்வாக இருங்கள். இப்படித்தான் இறுக்கத்தை விடுவித்து தூங்க உடலைப் பழக்க வேண்டும்.

யூத சமயத்தின் ஒரு கிளையான கப்பாலாவில், நாம் எல்லோரும் எப்படி ஓர் ஒளிக் கீற்று மூலம் இணைக்கப்பட்டுள்ளோம் என்பது பற்றி அற்புதமான போதனை உள்ளது. அந்தச் ஒளிக் கீற்றை கோபம், பயம், வெறுப்பு, சோகம் போன்றவை தடுப்பதால், ஒளியிலிருந்து இணைப்புத் துண்டிக் கப்பட்டு நமக்கு நோய்நொடி ஏற்படுகிறது. இந்தத் தடங்கலான, கர்வ உணர்ச்சிகளை களைந்துசெல்ல விடுவோமெனில், நாம் மாபெரும் வாயிலைத் திறந்து சூரிய ஒளியை உள்ளே விடுவது போல அமையும். ஒளி நம் மனதுக்குள் புகுந்து, உடலுக்குள் ஓடி, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, நாம் மீண்டும் ஆரோக்கியம் பெறுவோம்.

எல்லோரையும் எல்லாவற்றையும் முழுமையாக ஏற்றுக்கொள்வதே இதற்கான இணைப்புச் சாவி. முதலில், தயவுசெய்து சட்டென ஒரு கெட்ட முடிவுக்கு வராதீர்கள். எதைப் பற்றியும் முடிவுசெய்யும் பழக்கத்திலிருந்து மனதை விடுவிக்கப் பழக்குங்கள். இப்படியாக:

முதலில், நல்ல எண்ணங்கள் எனும் விதைகளை விதையுங்கள். 'சாகும் வரை, நான் சங்கடமான உணர்ச்சிகள் எழாமல் மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்வேன்' என்று யோசியுங்கள். இதுதான், நம்மால் பெறமுடியும் மிகச் சிறந்த மனக் காப்பீட்டுத் திட்டம்.

இரண்டாவதாக, தொடர்ந்து உங்கள் யோசனைகளை, எண்ணத்தைப் மேம்படுத்தி விமர்சித்தல், அதே வேகத்தில் அதைத் திருப்பிப் பெற்றுக்கொண்டு, புரிந்துணர்வை ஏற்படுத்துங்கள். இரண்டு விஷயங்களை விரிவாக நினைவில் வையுங்கள்:

★ ஒவ்வொருவரும் சரிதான், யாரும் தவறல்ல.

★ எப்போதும் சரிசெய்யும் சூழ்நிலைகள் இருக்கவே செய்கின்றன.

மூன்றாவதாக, ஒவ்வொரு சூழ்நிலையும் ஒவ்வொரு மனிதரும் உங்கள் வழிக்கு, நலனுக்கும் போக்குக்கும் ஏற்ப செயல்பட வேண்டும் என்ற சுயநல மனப்பான்மையை கைவிடுங்கள். 'எனது வரைமுறைகளும் நிபந்தனைகளும்' என்ற மனப்பான்மையில் செயல்படுவது, எல்லோரையும் இணைக்கும் அந்தத் தெளிவான சுகமளிக்கும் ஒளிக் கீற்றுக்கு தடங்கல் ஏற்படுத்துவதாக அமையும். 'என்னுடைய' என்பது நம்மைப் பிரித்து, தனித்து, அந்த ஒளியிலிருந்து தடுத்துவிடும், கோபமும், கொடிய உணர்ச்சிகளும் உண்டாகும். இவ்வாறு சுய தீங்கு இழைத்துக்கொள்வது பற்றி யோசித்துப் பாருங்கள், எல்லாவற்றையும் ஏற்கும் விசாலமான பண்பிலிருந்து என்னைத் தடுக்க விட மாட்டேன் என்று தீர்மானம் எடுத்துக் கொள்ளுங்கள்.

நான்காவதாக, தொடர்ந்து உங்கள் மனதை ஏற்புத் தன்மைக்குப் பழக்கிக் கொள்ளுங்கள், அதற்கான எண்ணத்தை பராமரியுங்கள். பழக்கத்தின் மூலம் எல்லாம் எளிதாகிவிடும். சுய கட்டுப்பாடு வந்துவிட்டால், அடுத்தது சுய-சுகமளித்தல் தான். எல்லையில்லா ஒளியின் இந்தப் பெருமைக்குரிய பாதையில் தொடர்ந்து நடைபோடுங்கள்.

இக்கட்டுரையின் ஆசிரியர்கள், 'ஃபிட்னஸ் ஃபார் லைஃப்' மற்றும் 'சிம்ப்ளி ஸ்பிரிச்சுவல் - யு ஆர் நேச்சுரல்லி டிவைன்' என்ற புத்தகங்களை எழுதியுள்ளார்கள், மேலும் ஃபிட்னஸ் ஃபார் லைஃப் திட்டத்தின் பயிற்சியாளர்களாகவும் இருக்கிறார்கள்

வடிவமைப்பு: கிருஷ்ணபிரதிஷ்

இந்த ஆண்டு பாலின சமத்துவமின்மை JLFஐ ஆதிக்கம் செலுத்துகிறது

அனுபா அகர்வால்

இந்த ஆண்டு JLF ன் தனித்துவமான அம்சம், பெண்ணியம் மற்றும் பெண்களின் உரிமைகள் பற்றிய அமர்வுகளாக இருந்தது.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 'Zee ஜெய்பூர் லிட்ரரி பெஸ்டிவல்' (JLF) லிற்காக பிங்க் சிட்டியை நோக்கிப் புத்தகங்களை நேசிப்பவர்கள் குவி கின்றனர். மக்கள் புத்தக திரட்டை மேம்போக்காக பார்வையிட்டும், மேலும் ஐந்து நாட்கள் நடைபெற்ற விவாதங்கள்,விரிவுரைகள், கலந்துரையாடல்களில் பிரபல ஆசிரியர் / எழுத்தாளர்கள்குச் செவிமடுத்தனர் மற்றும் அவர்களோடு உரையாடினர்.

அமர் ஃபோர்ட் மற்றும் ஹவா மஹால் போன்ற பாரம்பரியமிக்க இடங்களில் நடைபெற்ற பல்வேறு குழுக்களின் நேரடி இசைக் கச்சேரிகள் நிச்சயமாக ஒரு பெரும் ஈர்ப்பாகும்.

இந்த ஆண்டு, 300க்கும் மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சிந்தனையாளர் கள், எழுத்தாளர்கள், நோபல் பரிசு பெற்றவர்கள் மற்றும் மேன் புக்கர் பரிசு வென்றவர்கள், அழகிய ராஜஸ்தானிய அலங்காரத் தில் அலங்கரிக்கப்பட்ட டிக்கி அரண்மனையின் பிரமாண்டமான சூழலில் நடைபெற்ற JLFன் 11வது பதிப்பு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

தொடக்க விழாவின் அமர்வில் மீட்டா பண்டிட் மற்றும் நாது லால் சோலாங்கி ஆகியோர், இசையாலும் நடனத்தாலும் கூட்டத்தை மகிழ்வித்தனர். முதல் நாள், முழுவதும் நிறைந்திருந்த முன்புறப் புல்வெளி இளைய கவிஞர் ரூபி கவுர் தனது இதயத்தைத் தொடுகின்ற 'மில்க் அண்ட் ஹனி' கவிதைகளால் கேட்பவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைத்ததைக் கண்டது. இணை அமர்வு களாக, சர் டாம் ஸ்டாப்பர்ட், நாடகத்துறை கலைஞர் சன்ஜனா கபூருடன் கொண்ட கருத்தாடலும் சாரு சிங்கின் 'தி மைத்ரேயா க்ரானக்கிள்' மற்றும் 'தி கோல்டன் டக்கினி' ஆகிய இரண்டு புத்தக வெளியீடும் இருந்தன.

ராஜஸ்தானிய நாட்டுப்புற இசை.

பாலின அநீதி

இந்த ஆண்டு JLF ன் தனித்துவமான அம்சம், பெண்ணியம் மற்றும் பெண்களின் உரிமைகள் பற்றிய அமர்வுகளாக இருந்தது. குறிப்பிடத்தக்க அரசியல்வாதியான மார்கரெட் ஆல்வாவின் 'விமன் அண்ட் பவர்' என்ற அமர்வில், அவரது பேச்சைக் கேட்க மக்கள் திரண்டனர். மேலும் அவர், பிரிட்டிஷ் பாரிஸ்டர் மற்றும் லேபர் கட்சி MPயான ஹெலினா கென்னடியுடன் அந்த அமர்வைப் பகிர்ந்து கொண்டார். மற்றும் நடுவராக பத்திரிகையாளர் அரிதி ஜெரத் இருந்தார். பாலின சமத்துவம், சமுதாயத்தில் பெண்களின் நிலைப்பாடு போன்ற விஷயங்களை அவர்கள் விவாதித்தார்கள். உலகளாவிய ரீதியில் பெண்கள் துன்புறுத்தப்படுவதாகவும் ஆணாதிக்கம் நிறைந்த ஆட்சி அதிகாரபடி நிலையை உடைத்தெறிய வேண்டியதே அவர்கள் முன்னிருக்கும் மிகப்பெரிய சவால் என்றும் ஒருமனதாக ஒப்புக் கொண்டார்கள். 'விசிபிள் ஒர்க்: இன்விசிபிள் விமன்' என்ற அந்த அமர்வில் பெண்களின் இயங்குநிலையின் மீது முக்கியமான கேள்விகள் எழுப்பப்பட்டன.

ஐந்து மாலைப் பொழுதுகளும், ராஜஸ்தானிய நாட்டுப்புற இசையுடன் சூஃபி, பாலிவுட் கலவை, ஜாஸ் இசை பாணிகளையும் அள்ளித் தெளித்தது போன்ற வகையாறாக்களைக் கண்டது.

ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி ஹமிட் கர்சாய், 'தி கிரேட் சர்வைவர்,' என்ற அவரது அமர்வில் தனது நாடு மற்றும் இந்தியாவுடனான தனது உறவுகளைப் பற்றி பகிர்ந்து கொண்டார். பத்திரிக்கையாளர் விக்டர் மல்லட்டின் அமர்வில் கங்கையாற்றிற்கும் இந்தியாவின் எதிர்காலத்திற்கும் செழிப்புக்கும் இருக்கும் தொடர்பை விவாதித்தார். அதே சமயத்தில் 'வை வி மஸ்ட் ப்ரோடெக்ட் ஆரவில்லிஸ்' என்ற அமர்வு இம்மலைத்தொடர்களை பாதுகாப்பது எத்தனை முக்கியமானது என்பதில் கவனம் செலுத்தியது.

படத்தயாரிப்பாளர் விஷால் பரத்வாஜ் தனது கவிதைப் புத்தகம், 'நியூட்: தி பொயட் வித்இன்' வெளியீட்டைப் பற்றி விவாதித்தார் மேலும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை சினிமாவிற்கு தழுவுதலில் இருக்கும்

ஷர்மிளா தாகூர் மற்றும் சோஹா அலி கான் ஆகியோர் JLF ன் 'த பெரில்ஸ் ஆஃப் செலிபிரிட்டி' அமர்வில்.

சிரமங்களைப் பற்றி தனது எண்ணங்களை வெளிப்படுத்தினார். மற்றொரு எவ்வித வரையறைக்கும் உட்படாத அமர்வில், காதல், தியாகம், சுய கண்டுபிடிப்பு போன்ற தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை பயணத்தில் பார்வையாளர்களை அவர் இட்டுச் சென்றார்.

மூத்த நடிகை ஷர்மிளா தாகூர் மற்றும் அவருடைய மகள் சோஹா அலி கான் பட்டோடி இருவரும் சேர்ந்து சோஹாவின் 'தி பெரில்ஸ் ஆஃப் பீயிங் மாடரேட்லி ஃபேமெஸ்' என்ற புத்தகத்திற்காகத் தோன்றினர். MP, சஷி தரூர், புனைவு, அபுனைவு எழுத்துக்கள் மற்றும் இந்து மதத்திற்கும் இந்துத்வாவிற்கும் இடையே உள்ள வித்தியாசம் போன்ற பல்வேறு பொருள்களைப் பற்றி பல்வேறு அமர்வுகளில் தொட்டுச் சென்றார்.

ஹக் தொம்சன், பைக்கோ ஐயர், ராஜா ஷேஹாதே, ரெட்மண்ட் K'ஹான்லான், பீ ரெளலட் மற்றும் ராபர்ட் டெஸாய்க்ஸ் உள்ளிட்ட அனுபவமிக்க எழுத்தாளர்கள் தங்கள் தனிப்பட்ட பயண அனுபவங்களை எடுத்துரைத்தனர். பாடலாசிரியர் மற்றும் திரைப்பட தணிக்கை அமைப்பின் தலைவர் பிரசூன் ஜோஷி, பிரபலங்கள் கவிஞர் ஜாவேத் அக்தர், ஷபானா ஆஸ்மி போன்ற வழக்கமான பங்களிப்பாளர்கள் பத்மாவத் பட சர்ச்சையின் காரணமாக இந்த வருட JLF விழாவில் விடுபட்டிருந்தனர்.

ராஜஸ்தான் முன்னாள் கவர்னர் மார்கரெட் ஆல்வா, மற்றும் ஹெலினா கென்னடி 'விமன் அண்ட் பவர்' அமர்வில் அரிதி ஜெரத்துடன் உரையாடலில்.

மீ டூ

JLF ன் இறுதி நாள் 'மீ டூ: டூ மென் ஸ்டில் ஹாவ் இட் டூ ஈஸி' யின் மீது தீவிர மற்றும் சக்திவாய்ந்த விவாதத்தைக் கண்டது. அது பெண்களுக்கு எதிரான அட்டூழியங்கள் மற்றும் பெண்களின் தலைமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. உலகெங்கிலும், ஆண்கள் எளிதாக பெண்களை சுரண்டுவதையும், தொந்தரவு செய்வதையும் நிறைவேற்றுகிறார்கள் என்று குழுவினர் வாதிட்டனர். அந்த அமர்வு, வெறும் 3 சதவீதமே என்ற புள்ளிவிவரத்தை வெளிக்கொண்டு வந்தது.

தி டான்ஸ் ஆஃப் டெமாக்ரஸி என்ற அமர்வில், அரசியல்வாதி சச்சின் பைலட், மக்கள் அல்ல, அரசியல்வாதிகள் மட்டுமே அமைப்பமுறையில் சீர்திருத்தத்தைக் கொண்டுவரவும், மக்களுக்கு அதிகாரம் கொடுக்கவும் முடியும் எனும் வாதத்திற்குரிய கருத்தாக்கத்தைக் முன்வைத்தார்.

பிரிட்டிஷ் ஊடகவியலாளர் மாட் பிரைய், 'ஒன்லி இன் அமெரிக்கா' எழுதியவரும் 'தி ட்ரம்ப்ஸ்: ஃப்ரம் இமிக்ரான்ட் டு ப்ரெசிடென்ட்' என்ற ஆவணப்படத்தை உருவாக்கியவரும், டிரம்ப் ஒரு நிகழ்வு அமெரிக்கா மற்றும் உலக அரசியலுக்கு என்ன பொருள்படும் என்று விளக்கினார். அமி டான், பைக்கோ ஐயர், ஹமீத் கர்சாய், ஜாகிர் ஹுசைன், சல்மான் குர்ஷித், சேத்தன் பகத், சோனால் மான்சிங், சுகி கிம், மைக்கேல் ஒன்டட்ஜி, மீரா நாயர் மற்றும் ஹெலன் ஃபீல்டிங் ஆகியோரும் நன்கு கவனிக்கபட்டவர்கள்.

ஒவ்வொரு ஆண்டும் JLF இன் அதிகரித்துவரும் செல்வாக்கினால், சர்வதேச மற்றும் தேசிய பார்வையாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு, ஒரு சாதனை அளவாக அரை மில்லியன் மக்கள் வருகை, கடந்த ஆண்டை விட சுமார் 23 சதவீதம் அதிகம் பதிவாகியுள்ளது.

எப்படியிருந்தாலும், இந்த நிகழ்வின் கூட்டத்தை ஈர்த்தவர், பாரம்பரிய சாஃபா மற்றும் தோத்தி-குர்தா உடையணிந்த குல்ஹத்தில் (களிமண் கோப்பை) தேநீர் விற்றவர்களே.

படங்கள்:
அனுபா அகர்வால்
வடிவமைப்பு: கிருஷ்ணபிரதிஷ்

இரத்தத்தால் ஒன்றுபடுவோம்

V. முத்துக்குமரன்

இரத்த தான முகாமில் இமாம் மற்றும் பூசாரி ஒருவரும்.

பாலாய் ரோட்டரி சங்கம், D 3211, ஒரு தனித்துவமான இரத்த தான முகாம் மூலம் சமய நல்லிணக்கத்தை வளர்க்கிறது. ஓர் இந்துப் பூசாரி, கிறிஸ்துவப் பாதிரியார் மற்றும் முஸ்லிம் இமாம் இந்த முகாமுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர், பிறகு இதே பாணியில் மேலும் 15 பேர் இரத்த தானம் செய்தனர். ‘எங்கள் இரத்த வங்கியில் பெரியளவு சேமிப்பு வசதி இல்லை. குறிப்பிட்ட அளவிலான மக்களிடம் மட்டுமே எங்களால் இரத்த தானம் பெற முடிகிறது‘ என்றார் Dr. டெஸ்ஸி குரியன், இந்த 32 வருட சங்கத்தின் முதல் பெண் பிரசிடென்ட். மேலும் ‘அன்பும், அமைதியும், நல்லிணக்கமும் நம்மை இணைக்கிறது, ஏனென்றால் நாம் இரத்தத்தால் ஒன்றுபடுகிறோம். இதுவே இரத்த தான முகாமின் மையச் செய்தியாக இருக்கிறது’ என்றார். 117 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சங்கம், இந்த மாவட்டத்திலேயே மிகப்பெரிய சங்கமாகும். இதில் 31 பெண்கள் உள்ளனர்.

இங்கு டயாலிசிஸ் யூனிட்டும் சங்கத்துக்குச் சொந்தமாக உள்ளது, ‘நாங்கள் ஒரு காது கேளாதவர் பள்ளிக்கு பேருந்தை நன்கொடையாக வழங்கி இருக்கிறோம், மேலும் ஒரு விபத்துச் சேவை வண்டியும் இயக்குகிறோம்,’ என்றார் டெஸ்ஸி.

மரியா சதானம் என்பது சுமார் 350 பேர் வசிக்கும் ஒரு மாற்றுத் திறனாளிகள் இல்லம், அங்கே நவீன வசதியுள்ள சமையலறையும், தண்ணீர்ச் சுத்திகரிப்பு ஆலையும் நமது சங்கம், HOPE என்ற பிரதான திட்டப்பணி மூலம், மரியா சதானத்தில் ரூ.15 லட்சம் செலவில் ஒரு குழந்தைநல மருத்துவப் பிரிவை கட்டியுள்ளது, மேலும், நமது சங்கம் ரூ.1 கோடி மதிப்பில் 1,000க்கும் மேற்பட்ட கேடராக்ட் அறுவை சிகிச்சைகளை நடத்தியுள்ளது, என்றார் டெஸ்ஸி.

கட்வாவில் ஆசிரியர் பயிற்சி

ரோட்டரி நியூஸ் குழு

முதல் முறையாக RC கட்வா, D 3240 ஏற்பாடு செய்திருந்த ஒரு-நாள் ஆசிரியர் பயிற்சி முகாமில் கல்வியாளர்களும் சமூகச் செயல்வீரர்களும் 70 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

PDG ஸ்வபன் குமார் சௌத்ரி; அசிஸ்டன்ட் கவர்னர் டாக்டர் பல்லவி மாஜி; பயிற்சியாளர்கள் போதிர்புரா சின்ஹா சாந்திநிகேதன் முதல்வர், விஸ்வபாரதி பல்கலைக் கழகம்; மனிஷா பேனர்ஜி, தலைமை ஆசிரியை, லாப்பூர் உயர்நிலைப் பள்ளி, புஸ்பென் சட்டாபாத்யாய், குழந்தைகள் சேவையாளர் மற்றும் BDO சுப்ரதா மூகர்ஜி, மாவட்ட நில மற்றும் நிலச் சீர்திருத்த அலுவலகம், முர்ஷிதாபாத்; ஜான்பாஸ் ஷேக், பள்ளிகள் சப்-இன்ஸ்பெக்டர், வடக்கு நபாத்வீப் ஆகியோர் கற்பித்தலின் பல்வேறு அம்சங்கள் குறித்து உரையாற்றினர், இதில் குழந்தைகளுக்கு பாடங்களில் புதிய கருத்தாக்கங்களை கற்பிப்பது, கற்றலுக்கான ஆர்வத்தை அவர்களுக்கு ஊட்டும் வழிகள் ஆகியவையும் அடங்கியிருந்தன.

DLCC பிபாஸ் பூரகாயஸ்தா கையெழுத்திட்ட சான்றிதழ்களை சுப்ரதா செயின், சங்கத்தின் லிட்டரசி கமிட்டி சேர்மேன், பங்கேற்பாளர்களுக்கு வழங்கினார்.■

RC நாகப்பட்டினம் விங்க்ஸ் D 2981

கலைமகள் நர்சரி மற்றும் ப்ரைமரி பள்ளியில் பொங்கல் விழா பாரம்பரிய முறையில் கொண்டாடப்பட்டது. அதில் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். அவர்களுக்கு கரும்பு மற்றும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

RC சேலம் யங் டவுன் D 2982

சேலம் அருகே உள்ள மேச்சேரி கிராமத்தில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.4.25 லட்சம் செலவில் ஒரு கழிப்பறைக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. அது TRF மற்றும் RC டான்வில்லே/சைகாமோர் வேலி, D 5160 யிடமிருந்து ஒரு உலகளாவிய மானிய நிதியுதவியைப் பெற்றது.

RC ஜெய்பூர் ரவுண்டு டவுன் D 3054

ஜெய்ப்பூருக்கு அருகிலுள்ள சக்ஸு கிராமத்தில் உள்ள ஸ்ரீ ராம் வ்ருத் ஆஷ்ரம் என்ற முதியோர் இல்லத்திற்கு, சங்க உறுப்பினர்கள் மளிகைப் பொருட்கள் நன்கொடையாக வழங்கினர்.

RC அச்சல்பூர் D 3030

சங்கமானது, பள்ளிகளுக்கு ஒரு தியான முகாமை ஏற்பாடு செய்திருந்தது, அதில் 1,500 குழந்தைகள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். ரொட்டேரியன்கள் அவர்களின் Happy School திட்டத்தின் ஒரு பகுதியாக பள்ளி மாணவர்களுக்கு 600 நோட்டுப்புத்தகங்களை விநியோகித்தனர்.

சேவைகள்

RC சூரத் ரவுண்டு டவுன் D 3060

மெக்சிகோவிலிருந்து வந்த நட்பு பரிமாற்றக் குழு சூரத்திலுள்ள மம்தா ஸ்கூல் ஃபார் ஸ்பெஷல் சில்ட்ரனுக்கு வருகை தந்தனர். குழந்தைகள் மேடையில் நிகழ்ச்சி களை நடத்தி வருகை தந்திருந்தவர்களை மகிழ்வித்தனர். சங்கமானது, உணவு, நன்கொடைகள் மற்றும் பிற விளையாட்டு மற்றும் கற்றல் உபகரணங்களைத் தந்து பள்ளியை ஆதரிக்கிறது.

RC ஜம்மு மிட் டவுன் D 3070

பல் மற்றும் வாய் சுகாதாரத்தின் மீது கவனம் செலுத்தப்பட்ட மருத்துவ முகாம் நவீன் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. அங்கு ஒரு மருத்துவக் கல்லூரியிலிருந்து வந்திருந்த பல் மருத்துவர்கள் குழுவும் ரொட்டராக்டர்களும் 450 க்கும் மேற்பட்ட மாணவர்களை பரிசோதித்தனர்.

RC ஷாஜஹான்பூர் D 3110

மாதா அஷ்ரஃபி தேவி பள்ளியில் பயிலும் மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்காக பல் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. குழந்தைகளுக்கு, இலவச பற்பசை மற்றும் லூடோ விளையாட்டுப் பலகைகள் வழங்கப்பட்டன.

RC வாரணாசி ஈஸ்ட் D 3120

ஹோட்டல் ஹிந்துஸ்தான் இன்டர்நேஷனலுடன் இணைந்து, சாரநாத் மற்றும் அருகிலுள்ள கிராமங்களிலுள்ள ஏழைகளுக்கு போர்வைகள் மற்றும் ஆடைகளை சங்கம் வழங்கியது. சங்கத் தலைவர் சஞ்சல் குமார் கங்குலி, இதுபோன்ற மனிதாபிமானம் மிக்க திட்டங்களுக்கு சங்கத்திற்கு ஆதரவு அளிப்பதாக உறுதியளித்த ஹோட்டல் நிர்வாகிகளுடன் ஒருங்கிணைந்து இந்த திட்டத்தை செயல்படுத்தினர்.

RC புனே மெட்ரோ D 3131

கொத்ருட்டில் உள்ள MIT பாலிடெக்னிக்கில், மகளிர் மருத்துவரும் சமூக சேவகியுமான டாக்டர் ராணி பேங் மற்றும் அவரது குழுவினரும் இணைந்து தருன்யாபன் என்ற தலைப்பில் மூன்று நாள் தொழிற்பயிற்சியை நடத்தினார்கள். சுமார் 800 இளைஞர்கள் உடல், மன அழுத்தம், பாலுணர்வு, திருமண வாழ்க்கை உள்ளிட்ட பல தலைப்புகளைப் பற்றிய கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

RC அஹ்மத்நகர் பிரியதர்ஷினி D 3132

வியக்தி விகாஸ் செயற்திட்டத்தின் கீழ், மற்ற சங்கங்களுடன் கைகோர்த்து குழந்தைகளின் இன்டராக்ட் சங்கங்களில் அவர்களுடைய ஆளுமை மற்றும் உளவியல் மதிப்பீட்டை மதிப்பிடுகின்ற மனோவியல் சோதனைகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்தனர். மொத்தத்தில், 600 இன்டராக்டர்கள் இத்திட்டத்தால் பயனடைந்தார்கள்.

RC பாம்பே ஹில்ஸ் சவுத் D 3141

பொருளாதார வல்லுனரும்,வரி நிபுணருமான ஹோமி ரனினா, RC மும்பை நோவாவுடன் இணைந்து, 2018 மத்திய பட்ஜெட்டின் பல்வேறு அம்சங்களின் விளக்கத்தை வழங்கி, வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை பட்டியலிட்டார்.

RC சூலூர்பெட் D 3160

தடா மண்டலத்திலுள்ள பாமுலமிட்டா கிராமத்தில் உள்ள ஒரு ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு எழுதுபொருள்கள், பைகள், ஹான்ட் வாஷ் மற்றும் முதலுதவிக் கருவிகள் வழங்கப்பட்டன. ரூ.5,000 மதிப்புள்ள பொருட்களை நன்கொடையாக வழங்கிய Rtn. வி.விஜயலட்சுமியால் நிதியுதவியளிக்கப்பட்ட திட்டத்தின் மூலம் 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்தனர்.

RC தார்வாத் சென்ட்ரல் D 3170

Peer Leadership *மற்றும்* Depression Prevention *பற்றிய ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்பு* KLE RLS *பள்ளியில் நடைபெற்றது. நிகழ்வானது,* RC *ஹூப்லி ஈஸ்ட் மற்றும்* RC *வெல்லஸ்லி, பாஸ்டன்-இன் கூட்டணியில் மேற்கொள்ளப்பட்ட உலகளாவிய மானிய திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்தப் பயிலரங்கில் 40 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கேற்றனர்.*

RC குட்டியடி மிட்டவுன் D 3202

நிதி திரட்டுவதற்காக இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதிலிருந்து கிடைத்த 3.25 லட்சரூபாய், 20 புற்றுநோய் நோயாளிகளின் குடும்பங்களுக்கும் ஒரு வீடற்ற விதவைக்கும் நன்கொடையாக வழங்கப்பட்டது. 680 பார்வையாளர்களைக் கொண்ட இசை நிகழ்ச்சியை, குட்டியடி சட்டமன்ற உறுப்பினர் அப்துல்லா பாராக்கால் துவக்கிவைத்தார்.

சேவைகள்

RC கோட்டயம் வடக்கு D 3211

ஒரு தனியார் பஸ் டெர்மினஸில் சங்கம் மூலம் இயக்கப்பட்டு வந்த ஒரு பொதுக்கழிப்பறை 7 லட்ச ரூபாயில் புதுப்பிக்கப்பட்டது. கட்டிடத்தின் மேல்தளத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காக ஒரு பிரத்யேக ‘குளியல் மற்றும் உடைமாற்றும்’ அறை அமைக்கப்பட்டது.

RC சிவகாசி சென்ட்ரல் D 3212

ஊரிலுள்ள அரசாங்க மருத்துவமனைக்கு நாற்காலிகளும் குப்பைத் தொட்டிகளும் நன்கொடையாக வழங்கப்பட்டது. தலைமை மருத்துவ அதிகாரி சங்கத்தின் பங்களிப்பைப் பாராட்டினார். இந்த திட்டத்தின் செலவு ரூ22,000 ஆகும்.

RC காட்பாடி D 3231

வேலூரில் உள்ள கிறிஸ்டியன் மெடிக்கல் கல்லூரியுடன் இணைந்து, பள்ளிக்குப்பத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஒரு கண் சிகிச்சை முகாம் நடத்தப் பட்டது. 250 மாணவர்கள் பல்வேறு கண் குறைபாடுகளுக்காக பரிசோதிக்கப்பட்டனர். முகாமில் 20,000 ரூபாய் பெறுமதியான கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

RC மெட்ராஸ் D 3232

சங்கத்தால், போதைப்பொருள் பழக்கம் பற்றி ‘விழிப்புணர்வும் இளைஞர்களும்’ என்ற தலைப்பில் கின்னஸ் சாதனை முயற்சிக்காக நீண்டநேரம் விரிவுரை மேற்கொள்ளப் பட்டது. ஜேப்பியார் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், இந்திய சுங்கத் துறையிலிருந்து வந்திருந்த டாக்டர் வெங்கடேஷ் பாபு உரையாற்றினார், சங்க உறுப்பினர்கள், ரோட்டராக்டர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

RC புவனேஸ்வர் சென்டினியல் D 3262

ஜஜ்பூர் மாவட்டத்தின் ராஜடோடா கிராமத்தில் நடை பெற்ற மருத்துவ முகாமில் 2,600-க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு கட்டாக், புவனேஸ்வர், விசாகப்பட்டினம் மற்றும் மும்பை மருத்து வமனைகளில் இருந்து வந்திருந்த சிறப்பு மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஒருங்கிணைப்பு: V முத்துக்குமாரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

நாடியாவின் கைப்பாவைகள்

ஜி சிங்

72 வயதான ஜக்பந்து சிங் மகிழ்ச்சியும் சோகமுமாக உள்ளார். தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகத்தால் பொம்மலாட்டம் பொலிவிழந்ததை எண்ணி வருத்தப்படுவார். மிகக் குறைந்த ஓய்வு நேரத்தோடு பெருமையான இந்த மரபுக்கலை நிகழ்ச்சியைப் பல முறை நிகழ்த்தியதை எண்ணிப் பார்கிறார். இன்று பல கலைஞர்கள் மாதக்கணக்கில் வேலையின்றி அமர்ந்து ஒருவேளை உணவுக் கூட இல்லாமல் இருப்பதை எண்ணி வருந்துகிறார்.

எனினும், மாநில அரசும் சமூக நிறுவனங்களும் பொம்மலாட்டக் கலைக்கு ஆதரவுக் கரம் நீட்டுவதை நன்றியோடு நினைத்துப் பார்க்கும் போது அவரது கண்கள் நம்பிக்கையில் சுடர் விடுகின்றன.

ஜக்பந்து பொம்மலாட்டம் தோன்றிய மேற்கு வங்காளத்தில் நாடியா மாவட்டம் முரகச்சா காலனியில் வசித்து வருகிறார். 1947ல் இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்குக் பிறகு பொம்மலாட்டக் கலைஞர் பலர் நாடியாவில் உள்ள கிராமங்களுக்குக் குடி பெயர்ந்தனர்.

நம் மூதாதையர்கள் சுதந்திரத்திற்குப் பிறகு பாகிஸ்தானிலிருந்து சென்று விட்டனர். பாகிஸ்தானில் பொம்மலாட்டம் அவர்கள் வாழ்வாதாரமாக இருந்து இங்கு வந்த பிறகும் தொழிலாகத் தொடர்கிறது என்று அவர் தன் பெற்றோர் தனக்குக் கூறிய வரலாறைக் கூறினார்.

மேற்கு வங்காளம் பிரிவிற்கு முன்பு இடைக்காலத்தில் பொம்மலாட்டம் நாட்டுப்புறக்கதைப் பாடலாக ‘புடுல் நாச்’ (பொம்மை நடனம்) என்றழைக்கப்பட்டது. இக்கலையின் பாரம்பரிய வடிவத்தில் கம்பிகள், கையுறைப் பாவைகள் பயன்படுத்தப்பட்டன. தற்போது பழக்கத்தில் இருக்கும் கயிறு பொம்மலாட்டம் இறக்குமதி செய்யப் பட்டது என்கிறார் ஜக்பந்து. கயிறு பொம்மலாட்டம் கம்பிகளைக் கொண்டும் நாடியாவில் அதிகம் கையாளப்படுகிறது.

இருபதாண்டுகளுக்கு முன்பு முரகச்சாவில் ஒவ்வொரு குடும்பமும் பொம்மலாட்டத்திலும் இக்கலைக்கான பாவைகளைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டது. ஆனால் தொலைக்காட்சி வருகை அந்த ஈடுபாடு குறைந்து இக்கலைக்கு மரண மணியை ஒலித்தது.

1980ல் இந்த கிராமத்தில் 380 குடும்பங்கள் பொம்மாலாட்டத்தில் ஈடுபட்டன. கலைஞர்கள் 6 மாதங்கள் நிகழ்ச்சிகளுக்காக மாநிலத்தை விட்டு வெளியில் வசிப்பார்கள். மாதத்தில் 25-30 நிகழ்ச்சிகளை நாங்கள் நடத்தியுள்ளோம். வருமானமும் நன்றாக இருந்ததுடன் வேறு வாழ்வாதாரத்தை நாங்கள் நாடியதில்லை என்கிறார் அமோல்யா ராய் என்ற பொம்மலாட்டக் கலைஞர்.

1990 ஆண்டு இடையில் இந்த நிலை மாறியது. பல்வேறு பொழுது போக்குகள் மாநிலம் முழுவதும் கிராமத்திலும் நகரத்திலும் நுழைந்தன. மக்கள் தொலைக்காட்சிக்கு மாறத் தொடங்கியதால் நாங்கள் எங்கள் வேலையை இழக்கத் தொடங்கினோம். கம்பிவடத் தொலைக்காட்சி எங்கள் சவப்பெட்டியின் கடைசி ஆனியை

அடித்தது. மக்கள் நாகரீகமான, குழந்தைகளுக்குச் சமூகக் கருத்து ரைக்கும் பொம்மலாட்டத்தில் ஆர்வத்தை இழந்தனர் என்று கூறினார்.

தற்போது பல பொம்மலாட்டக் கலைஞர்கள் ஊழியர்களாகவே வாழ்ந்து சம்பாதிக்கின்றனர். சிலர் வேறு வாழ்வாதாரத்திற்காகப் பிற மாநிலத்திற்குச் சென்று விட்டனர்.

எனினும் மாநில அரசு மறைந்து வரும் இந்தக் கலையை மீட்க நட வடிக்கை எடுத்துள்ளது. குளிர்காலத்தில் இக்கலை தொடர்ந்து நிகழ்வதோடு சமூக நிறுவனமான பங்களா நாடோக் பிற நகரத்திலும் கிராமங்களிலும் இக்கலையை நிகழ்த்த ஆதரவளித்து உதவுகிறது.

மற்றொரு கலைஞர் ரஞ்சன் ராய் நகரத்தில் உள்ள குழந்தைகள் பொம்மலாட்டத்தை ஆர்வத்தோடு பார்க்கிறார்கள் என்றும், இதற்கு முன் அவர்கள் இக்கலை போல எதையும் பார்த்ததில்லை என்றும் கூறினார். அந்த ஆர்வத்தைத் தக்க வைக்க பொம்மலாட்ட நேரத்தைக் குறைத்துக் கொண்டதாகவும் கூறினார்.

ராமாயணம், மகாபாரதம், பஞ்சதந்திரக் கதைகள் போன்ற புராணக் கதைகளைப் பல சமூகச் சிந்தனைகளுடன் மெருகேற்றினோம். மேலும் சாலை விதிகளை மதிப்பது, தலைக்கவசத்தின் அவசியம், கல்வி போன்ற கருப்பொருளைக் கொண்டும் இதை நிகழ்த்துவதாக அவர் தெரிவித்தார்.

பங்களா நாடோக்கின் நிறுவனர் அமிதவா பட்டாச்சாரியா, பொம்ம லாட்டம் அனைவரிடத்திலும் குறிப்பாக குழந்தைகளிடத்தில் பொலிவுறும் நம்பிக்கை உள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்பு 80 கலைஞர்களுடன் சேர்ந்து உழைத்து பட்டறை நடத்தியதுடன் அவர்களைப் பல விழாக்களில் இணைக்கவும் செய்தோம். குறைந்தது அதில் 30 நபர்களாவது வங்காளத்தைத் தாண்டி பயணித்திருப்பார்கள், இருவர் ஃப்ரான்ஸில் 2015ல் நடைபெற்ற கன்னாட் விழாவில் பொம்மலாட்டத்தை நிகழ்த்தினர். பல இடங்களில் துர்கா பூஜையிலும் பள்ளி விழாக்களிலும் பொம்மலாட்டம் இடம்பெற்றது. மாநில அரசோடு இணைந்து மூன்று நாள் பொம்ம லாட்டக் கண்காட்சியை ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதத்தில் இக்கலைக்காக நடத்தி வருகிறோம். இளைஞர்களைக் கவர இது மிகவும் உதவுகிறது. தொழில்நுட்பம் மற்றும் நவீனமயமாக்கத்தில் தொலைந்து போன இக்கலையை மீட்டெடுக்க இதுவே தருணம்.

வடிவமைத்தவர்:
கிருஷ்ணபிரதீஷ்

பெயரும் புகழும்

TCA ஸ்ரீனிவாச ராகவன்

முன்பு ஒரு நிதி அமைச்சர் இருந்தார், அவர் தென்னிந்தியர் அல்ல என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள், அவர் எனது நீண்ட நெடிய பெயரின் காரணமாக என்னை மிஸ்டர் ஆல்ஃபபெட் என்று அழைப்பார். அவருடைய பெயரோ, பாவம், இரண்டே வார்த்தைகள் தான். அதுவும், தலா இரண்டிரண்டு அசை களே (சிலபெல்) கொண்டவை. ஆனாலும் நான் கர்வம் கொள்ளப் போவதில்லை, ஏனென்றால் அவர் சொல்வதும் சரிதான். 49 எழுத்துக்கள் உள்ள என் பெயர் சற்று ரொம்ப நீளம். கல்லூரியில் முதலாம் ஆண்டு ரேகிங் செய்யப்பட்ட போது, என் பெயரை நேராக, தலைகீழாக, எழுத்துக்கூட்டி, வார்த்தைகளை முன்னும் பின்னும் போட்டு என்று பலவாறு சொல்லச் சொல்வார்கள்.

என்றாலும், ஆங்காங்கே இதில் சில சாதகமான விஷயங்களும் இருக்கத் தான் செய்கிறது. உதாரணமாக, தில்லி விமான நிலையத்தின் இம்மிக்ரேஷனில் ஓர் அதிகாரி என் பெயரைக் கண்டு பிரமித்துப் போனதாகக் கூறினார். அவர் என்னை முதல் முறையாகப் பார்க்கிறார், நானும் ஒரு பாலிவுட் பிரபலமோ விளையாட்டு வீரரோ அல்ல, பிறகு ஏன் இப்படிக் கூறுகிறார் என்று கேட்டேன். அதற்கவர், ''உங்கள் பெயரை கம்ப்யூட்டரில் தட்டும் போது இதுபோன்று சுமார் 18 பெயர்களே வருகிறது, ஆனால் அசோக் மித்ரா போன்ற இரு-வார்த்தைப் பெயர்கள் இப்படியல்ல'' என்றார். பிறகு, திரையில் காட்டும் இவ்வாறான பெயர்கள் எல்லாம் எனது சொந்தக்காரர்களா என்று கேட்டார். அநேகமாக இருக்கலாம் என்றேன், அதற்கவர் ''10,000 சுரேஷ் கோலிகள் அல்லது 5,000 விராத் ராய்னாக்களை ஒவ்வொன்றாகத் தேடிப் பிடிப்பதற்கு பதிலாக இப்படியிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்'' என்றார். 'உங்கள் காரியம் சட்டுப் புட்டுன்னு முடிந்து விட்டது சார்' என்று முகத்தில் பிரகாசத் துடன் சொன்னார்.

அவருடைய சந்தோசம் எனக்குப் புரிந்தது. இம்மிக்ரேஷன் அதிகாரிகள் சராசரியாக 6-8 மணிநேரம் பெயர்களைத் தேடி திரையை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனந்த் தேசாய் போன்ற சிறு பெயர்கள் ஆயிரக்கணக்கில் தோன்றும், அதன் பிறகு அந்தப் பெயருக்கு உரிய பாஸ்போர்ட் எண்ணையும் பொருத்திப் பார்க்க வேண்டும். இதைவிட ஒரு சலிப்புத் தட்டும் வேலை உலகத்தில் இருக்கிறதா? அதனால் தான், திருமலை குண்ணவம் ஆனந்தன்பிள்ளை என்ற பெயர் எட்டிப் பார்க்கும் போது, அவருடைய கண்களில் பிரகாசம் தெரிகிறது. அதனுடன் ஸ்ரீனிவாச ராகவன் என்பதையும் சேர்த்தால், மகிழ்ச்சியோ மகிழ்ச்சி! இந்தப் பெயர் அவருடைய பட்டியலில் ஒருரேயொரு முறை தான் தோன்றும்.

ஆனாலும், இதுவரை இதைத் தவிர வேறெந்த சாதகத்தையும் நான் கண்டிருக்கவில்லை. ஒரு பிரச்சனை என்னவென்றால், குடும்பத்தில் உள்ள எல்லோரும் தங்கள் பெயர்களின் முன்பகுதியை சுருக்கமாக டிசிஏ என்று போடுவதால், எங்களை ஒருவொருக்கொருவர் மாற்றிக் கொள்ளலாம் என்று மக்கள் நினைக்கிறார்கள். இப்படியே நான்கு தலைமுறைகள் உருவாகிவிட்டது, இது எவ்வளவு எரிச்சலாக இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். 'தி ஹிந்து பத்திரிகையில் எழுதும் டிசிஏ நீங்கள் தானா' என்று கேட்பார்கள். 'இல்லை சார், அது என் மகன்' என்று மாதம் ஐந்து தடவையாவது சொல்ல வேண்டியிருக்கும். 'இல்லையே, அவர் போட்டோவில் ரொம்ப வயதானவராகத் தெரிகிறாரே' என்பார்கள் 'ஓ, அவரா? அவர் என் மாமா' என்று சொல்வேன். இப்படியே ஐந்தாவது தலைமுறையும் வந்து விட்டால் என்ன நடக்கும் என்று நினைக்கும் போது குலை நடுங்குகிறது.

இத்தோடு நின்றபாடில்லை. 12 பெயர்களை மட்டுமே தேர்ந் தெடுத்து அதை எந்த வரிசையில் வேண்டுமானாலும் வெவ்வேறு விதமாகச் சேர்த்துப் போட்டுக் கொள்ளலாம் என்று ஐயங்கார் சமூகம் முடிவெடுத்துவிட்டது போலும், ஆனால் ஏன், எப்போது இதைச் செய்தார்கள் என்றுதான் தெரியவில்லை. ஆக, ஸ்ரீனிவாசன், ராமானுஜம், வரதன், ராகவன், ரங்கநாதன், ரங்காச்சாரி, கிருஷ்ணன், இன்னும் ஆறு அல்லது எட்டு பெயர்கள் இருக்கின்றன. இங்கே முக்கியப் பிரச்சனை என்னவென்றால், இரண்டு சகோதரர்களுக்கு - உதார ணமாக அப்பாவும் மாமாவும் - ஒரே மாதிரியான பெயரை வைக்கும் போது குழப்பம் ஏற்படுகிறது. ஆக, என் சகோதரர் பெயர் ரங்காச்சாரி, என் ஒன்றுவிட்ட சகோதரர் பெயர் ரங்கநாதன், என்னுடைய மறைந்த மச்சானும் ரங்கநாதன். இன்னொரு மச்ச ான் பெயர், வரதகிருஷ்ணன். எவ்வளவு தான் புதிது புதிதாக யோசிப்பது?

இப்படித்தான், என்னுடைய இன்னொரு ஒன்றுவிட்ட சகோதரர் பெயரும் ராகவன், அவர் அரசாங்க வேலையில் இருந்தார். பணி செய்த காலத்தில் அடிக்கடி அவருடைய மூத்த அதிகாரிகள் அவருக்கு டோஸ் விடுவார்கள், ஐயோ பாவம்! நான் அரசை விமர்சித்து எழுதிய கட்டு ரைக்காக அவருக்கு டோஸ் விழும். அது அவரல்ல, வேறொருவர் என்று அடிக்கடி விளக்கம் கொடுத்துக் கொண்டிருப்பார். ஆனால், அது இப்போது தலைகீழாகத் திரும்பி விட்டது. சமீபத்தில் அவர் ஒரு மிகவும் புகழ்பெற்ற எழுத்தாளராக மாறியிருக்கிறார், ஆனால் விருந்துக் கூட்டங்களுக்கு வந்து உரையாற்றுமாறு எனக்கு அழைப்பு வரும், அழைப் பிதழுடன் சேர்ந்து அவரது கட்டுரை களுக்காக எனக்குக் காசோலையும் வரும். இனிமேல், இதுபோன்ற விருந்துக் கூட்ட சொற்பொழிவு அழைப்புகள் வந்தால் அதை நான் ஏற்று, என்ன தான் நடக்கப்போகிறது, ஏற்பாட்டாளர்களின் முகபாவனை எப்படி இருக்கப் போகிறது என்று ரசிக்கப் போகிறேன்!■

செய்திச் சிதறல்கள்

குழந்தைகளுக்கு உதவ மினி கார்கள்!

பிரான்ஸ் நாட்டில் மருத்துவ மனை அறுவைச் சிகிச்சை பெற வேண்டிய குழந்தைகளுக்காக மினி காரை அறிமுகம் செய்துள் ளது. இக்காரில் ஆபரேஷன் தியேட்டருக்குச் செல்லும் போது குழந்தைகளின் பயமும் பதற்றமும் தனியும் என்பது டாக்டர்களின் கருத்து இதற்காக தனியாக மருந்து தரவேண்டிய அவசியமும் இல்லை. இதைப் போன்ற கார்கள் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் மருத்துவ மனைகளில் அறிமுகம் செய்திருக்கிறார்கள்.

ஏழைகளுக்கு மசூதியில் சைவ உணவு

மும்பை கிராண்ட் ரோடில் உள்ள பிலால் மசூதியில் ஏழைகளுக்குச் சைவ உணவு பரிமாறப்படுகிறது. இதற்காகவே தனியாக சமையலறை (Langar e Rasool) அமைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் இரவு தொழுகைக்கு முன் இட்கா மைதானத்தில் வயிறார சாப்பிடுவதற்காக சப்பாத்திகள், கறி, ஊறுகாய் ஆகியவற்றை வழங்குகிறார்கள். தினமும் 400 உணவுப் பொட்டலங்களை அந்த மசூதி வழங்குகிறது. இந்தச் சேவைக்காக முஸ்லிம் அல்லாதோரும் மசூதிக்கு நன்கொடை அளித்து உதவுகிறார்கள்.

மோட்டார் சைக்கிளுக்கு நடைபாதை வேண்டாம்

பல நகரங்களில் வாகன நெரிசல் ஏற்படும்போது, பலர் தங்களது இரு சக்கர வாகனங்களை நடைபாதை மீது ஏற்றி ஓட்டி சென்று, நடைபாதையில் செல்வோருக்குப் இடையூறு தருகிறார்கள். பெங்களூரு நகரில் மஞ்சு தாமஸ் என்ற பெண் குரல் எழுப்பி, நடைபாதைகளில் வாகனம் ஓட்டுவதைத் தடுத்து வருகிறார். நடைபாதையில் வாகனங்கள் ஏதாவது செல்லும்போது, அதை மறிப்பது போல் அவர் குறுக்கே நின்று, ரோடில் ஓட்டுங்க சார்! என்று மோட்டார் சைக்கிள் ஓட்டுவோருக்கு அறிவுரை கூறுகிறார். அவர் இப்படிச் செய்வதை யாரோ விடியோ எடுத்து ஃபேஸ் புக் சமூக வலைதளத்தில் பதிவேற்றியிருக்கிறார்கள். அதை ஏராளமானோர் லைக் பதிவு செய்திருக்கிறார்கள்.

பாதுகாப்பாக செல்ஃபி எடுக்காலாம்

ரயில்வே தண்டவாளத்தில் செல்ஃபி எடுக்கும்போது பலர் விபத்தில் சிக்குவதைத் தடுப்பதற்காக புதிய நடைமுறையைச் செயல்படுத்த இருக்கிறது. ரயில்நிலையங்களில் செல்ஃபி ஆர்வலர்களுக்காகவே தனியாக ‘செல்ஃபி பாயிண்ட்கள்’ அமைப்பதென்று 70 இடங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன. தேசிய அளவில் அமைக்கபடும் ‘செல்ஃபி பாயிண்ட்கள்’ ராஜஸ்தான் மாநிலம் உதய்ப்பூர், ஜெய்ப்பூர், பிகானீர், சோத்பூர், காந்திநகர் ஆகிய ரயில்நிலையங்களில் அமைக்கப்படுகின்றன.

கரும்பலகை போச்சு, கம்ப்யூட்டர் வந்தது!

கானா நாட்டில் ஒரு பள்ளியில் ஆசிரியர் வகுப்பறையில் உள்ள கரும்பலகையில் எம்எஸ் வேர்ட் (MS Word) குறித்து மாணவர்களுக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்தார். இது ஃபேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பரவியது. உடனே NIIT கல்வி நிறுவனம் அந்தப் பள்ளிக்கு ஐந்து கணிப்பொறிகள், ஒரு மடிக்கணினியும், புத்தகங்களை நன்கொடையாக அளித்துள்ளது. ரிச்சர்ட் அப்பியா அகோடோ என்ற ஆசிரியர் 2011ஆம் ஆண்டிலிருந்து கம்ப்யூட்டர் படிப்பைச் சொல்லிதருகிறார். கரும்பலகையில் எம்எஸ் வேர்டு டெம்ப்லேட் குறித்த விளக்கம் தெளிவாக கொடுக்க முடியவில்லை. எனவே, பல்வேறு நிறுவனங்கள் அந்தப் பள்ளிக்குக் கணிப்பொறிகள், கல்வி சாதனங்களை வழங்கி, உரிய உபகரணமின்றி அக்கறையோடு பாடம் நடத்திய ஆசிரியருக்கு சிங்கப்பூரில் நடைபெறும் கல்வியாளர் மாநாட்டில் பங்கேற்பதற்கு மைக்ரோசாஃப்ட் ஆப்ரிக்கா உதவியுள்ளது.

ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ, வடிவமைப்பு: S கிருஷ்ணப் பிரதீஷ்

Inspiration
AROUND EVERY CORNER
The bottle caps that changed everything
When the Kissels, Heike and Dennis, met fellow German Rotarians (and former Rotaractors) Sandra Buehrke, Constanze Abendroth, and Lutz Olbrich during the 2013 Rotary International Convention in Lisbon, Portugal, something deeper than friendship was formed. A chance encounter at a House of Friendship booth featuring a bottle cap collection fundraiser led to dinner, where the idea sparked excited conversation to do the same at home.
Four years later, their group leads a successful nationwide effort for polio that has collected 150,000 kilograms of plastic bottle caps for recycling, providing funds for about as many polio vaccinations.
Find your inspiration at the Rotary Convention in Toronto. Register today at riconvention.org.
Rotary
ROTARY INTERNATIONAL
TORONTO 2018
ROTARY CONVENTION
23-27 JUNE 2018
TORONTO, ONTARIO, CANADA